# A
# CATECHISM OF TAMIL PROSODY:

For the use of students in general and
Canditates preparing for the university examinations

BY

**A. K. AMIRTHAM PILLAY,**
TAMIL PUNDIT ZILLA SCHOOL, SALEM.

# யாப்பிலக்கணவிளக்க
# வினாவிடை.

இஃது
சிலகண்ணியவான்கள் கேட்டுக்கொண்டமையால்
சர்வகலாபரீக்ஷை வித்தியார்த்திகளுக்கும்,
ஏனையோர்க்கும் உபயோக மாகும்பொருட்டு
சேலம்ஜில்லா அஸ்ரத்தன பாடசாலைத்
தமிழ்ப்புலவர்
திரிசிரபுரம்
**அ-க-அமிர்தம்பிள்ளையவர்களால்**
இயற்றப்பட்டு;

ஸ்கூல்
டெப்டி இனிஸ்பெக்டர்
ஜ. சீ. அப்பாயிநாயடு அவர்களால்,
சென்னை
ஸ்ரீதர அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1876.

(*All Rights reserved.*)

# OPINIONS

ON THE

# YAPPILAKKANA VILAKKA VINA VIDAI

*From,*

H. M. WINFRED, Esqr.

*Head Master, Govt. Nol. School, Trichinopoly.*

The 'Yappial Vina Vidai' a neat little treatise on Tamil Prosody, seems to be a very **useful** book to Students engaged in the study of Classical Tamil. The author has taken **great pains** to combine **perspicuity** with **simplicity** of **style** in developing the fundamental laws and principles of Tamil Versification to the understanding of **ordinary Students.** As a work like this has been a **long felt desideratum** in the Grammatical Literature of the Tamil Country, it is believed that the author's labors will be much **appreciated** by those interested in Education.

*Trichinopoly*
*Govt. Nol. School.*
*25th January* 1876.

(Signed) H. M. WINFRED.
*Hd. Master.*
*Govt. Nol. Scl. Trichy.*

*From.*

N. DEIVASIKAMANI MOODALIAR, Esqr.

*Dy. Inspector of Schools, Vellore circle.*

A. K. Amirtham Pillay's "Yappilakanavilakam" consists of Five Chapters and each chapter does **justice** to its subject. The Fifth Chapter is especially **important** as giving in a **small compass,** the rules for summing up the peculiarities of the several kinds of Verses. Also the author has treated his subjects in a manner at once **simple** and **comprehensive.** This book has the credit of being the **first** to simplify the

Study of Tamil Prosody, which, in its original state, contains a large collection of ancient Sutrams. I trust that this publication will meet with success and the author's labors will be appreciated.

(Signed) N. DEIVASIKAMANI MOODALIAR,
*Dy. Inspector of Schools,*
*Vellore circle.*

*Vellore*
*5th May* 1876.

---

*From.*

C. ELAIYATAMBI PILLAY Esqr.
*Ag. Hd. Assistant (2nd) Master,*
*Zilla School, Salem; and*
*Late Dy. Inspector of Schools.*

To

M. R. Ry.

A. K. AMIRTHAM PILLAY AVERGAL
*Tamil Pandit, Zillah School, Salem.*

My dear Sir

I had a look into your work on "Yappilakkanum". It is very well arranged with regard to its subject matter and in such a style as would be useful to ordinary as well as advanced students. It seems to be the first work of the kind as it, in its 5thChapter, supplies a great want which has been ever felt. On the whole I think the work is well done and would prove very useful to those who aim at securing a good knowledge of the Tamil Prosody.

Wishing you every success,

*I remain*
*Yours truly*
(Signed) C. ELAIYATAMBI
*Ag. 2nd Master, Salem Zilla School.*

*Salem*
24 *August*
1876.

---

*From.*

S. ATCHAYALINGA MUDALIAR Esqr. B. A.
*Dy. Inspector of Schools.*
*Salem Circle.*

To.

M. R. Ry.

A. K. AMIRTHAM PILLAY AVERGAL,
*Tamil Pandit, Zillah School, Salem.*

My dear Sir,

I have had the pleasure of going through your "Yappilakana Vina Vidai" and I am glad to inform you that it meets **a want,** that has been **long felt** in the **Educational** Deptt. Your **book is written in a** style both perspicuous, and at the same time **simple,** and the **arrangement** of its subject matter **is very judicious.** It is for **want of a similar work,** I think, that **this part** of the Tamil Grammar is so **much neglected** at **present,** and **it stands** therefore a **fair chance of** being **introduced** in the **senior departments** of our **Colleges** if you **submit** your work to the **Director of Public Instruction** through the proper channel.

Wishing you every success,

*Salem* 24 *August* 1876.

*I remain,*
*Yours truly,*
(Signed) S. ATCHAYALINGAM.

# சிறப்புப்பாயிரம்.

சென்னைக்கவர்ன்மெண்டு நார்மல் பாடசாலைத்

தமிழ்ப்புலவராகிய

திரிசிரபுரம், சோடசாவதானம்,

மா-ா-ா-ஸ்ரீ- சுப்பராயசெட்டியாரவர்கள்

இயற்றிய

## நேரிசையாசிரியப்பா.

பூமலி கமலப் பொகுட்டுறை புத்தே
ளாமுதற் கடவுளர்க் கபயமீந் தருளும்
வெள்ளியம் பொருப்பு நள்ளிருள் சிக்கும்
பொன்னெடும் பொருப்பு மன்னுயிர்த் தொகையின்
பவச்சேறு கழீஇத் தவக்கதி யுய்க்குந்
தூநீர்க் கங்கை சுரக்கும்வான் குடுமி
மாநீ ரிமம்பொதி வளந்தரு பொருப்புந்
தத்த நிலையிற் சலிப்புறு தென்று
மொத்த நிலையவா வுலப்பற நிறவு
முறைசால் சிறப்பி னோங்கு பொதிய
வரைசால் பாண்டி வளநா டாண்ட
வெழுதருஞ் சீர்த்தி வழுதிய ரான்பா
னீற்றி லிட்ட நாற்ப தின்மருட்
கவியரங் கேற்றிய வெழுவருட் கஞன்ற
புவிபுகழ் நிலந்தரு திருவிற் பாண்டியன்
மாகீர்த் தியினவைக் களத்து வாய்ப்பத்
தொல்காப் பியனரு டொல்காப் பியத்துளும்
வழிபடு நூலுளுங் கெழுமிய செய்யு
ளியலு முறையு மயர்வறப் பயிறற்குச்
சின்னாட் பல்பிணி மன்னிய மக்கட்
கமையா வாதலிற் கமைபெற நாடி
வெள்ளிடை மலைபோல் விழுத்தகு நுட்பமு

மொள்ளிதிற் புலப்பட வுரைத்தவை சுருக்கிக்
கத்திய வடிவாக் கவினத் தருகென
முத்தி தருஞ்சிவ பத்தியு மடியவர்க்
கெய்ப்பினியில் வைப்பா வியைய வழிபாடும்
பூதிசா தனமுந் தீதறக் கொண்டோ
னிருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறெனச் செப்பிய
தெய்வப் புலமைத் திருவள் ளுவனா
யுள்ளுந ருள்ளுதோ றுள்ளதி சயிப்ப
விருமையும் பயக்கும் பெருமைசால் கல்வியு
முலையாச் செல்வமோ டோங்கதி காரமு
மிலையென் றவர்பா லிலையென வந்தோ
ரிந்திர ராக முந்து மீகையு
மொருங்குடன் கொண்ட பெரும்புக ழாளன்
தெய்வ சிகாமணிச் செம்மல் கேட்பக்
கைவரு மிப்பணி கரிசில் சீர்த்தி
குன்று தென்று மொன்றுவிக் கும்மெனு
யாப்பு விளக்க வினாவிடை யெனும்பெய
ரேற்புறத் தந்தோ ருரைநூ லியற்றினன்
றிரைநீர் சிந்திப் பெருவா னளக்கும்
பொன்னித் துறையி னன்னீர் குடைந்து
செங்கா லன்னம் பங்கே ருகந்தோறுங்
கடிமனை புகூஉந் தவசி போல
விருந்திரை தேருந் திருந்து சோணாட்டுட்
டுரிசில்பல் வளனுந் தொக்கிருந் தளகை
புரிநிகர் தலைமைசா றிரிசிர புரத்தோன்
தில்லை யழகிய திருத்தகு புகழோன்
மல்கிய தவத்தான் மாநிலம் வந்தோன்
கலைதேர் வாழ்க்கையிற் காலங் கழிப்போ
னிலைநே ரென்ன வின்கவி புணர்ப்போன்
வழுவிலந் திலக்கண வரம்பு காண்போ
னுழுவ லன்புடை யுயர்நதி குலத்தோன்
குருகுங் கிழித்த கூரயி லேந்திய
குழகப் பெருமா னிருகழல் வழுத்துவோ
னிமிழ் கடல் வரைப்பி னியல்சீ——
ரயிர்த மெனும்பெய ரருந்தமி ழோனே.

சென்னைச்சருவகலாசாலைத்தமிழ்ப்புலவர்

கோமளபுரம்

ம-ள-ள-ஸ்ரீ-இராசகோபாலபிள்ளையவர்கள்

இயற்றிய

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிலையேந்து திருநுதற்றெய் வப்பிடிகான் குறமடமான்
செருக்குஞ் சீர்சான்,
மலையேந்து மீராறு தோட்குகன்செம் மணைச்சரணுள்
வழுத்து மேலோன்,
கலையேந்து செந்தமிழ்தேர்ந் தோனமிர்த கவிவல்லான்
கழக மேவி,
நிலையேந்து சிறார்கற்ப யாப்பியலின் சுருக்கநன்கு
நிகழ்த்தி னானே.

---

# சிறப்புப்பாயிரம்

இஃது

மகாவித்துவான்

உறைந்தைமா நகரம்

ஸ்ரீ - முத்துவீராசிரியரவர்கள்

இயற்றிய

## நிலமண்டிலவாசிரியப்பா.

உலக முவப்பப் பகல்கான் றெழுதரு
மிரவியி னொருதா னாகொரு நிருமலக்
கொழுந்துறை யவாசி குணகடல் வடமலை
குடகநான் கெல்லையிற் கிடந்தவைம் பொருள்களுள்
யாப்பிய லொன்றையு மணிபெறச் சுருக்கி
வெளிப்படை குறிப்பின் வினாவிடை யாக்கி
யாங்கி லேய வதிகா ரத்தொடு
மியற்றித் தருகென வியம்பச் சிற்சிலர்
கடிமலர்க் கற்பக நிழறாக் ககன
விடிகுரற் பேழ்வா யரியணை யெழுந்த
புலவர்கோன் மகளைப் புணர்ந்தவே ளுரைப்பத்
தமிழ்முழு துணர்ந்த தவமுனி வியப்ப
வருஇக் கிடந்த விதிகளைக் கரவா
மலகம் போல வகுத்துரை செய்தன
னிரவியு மதியமு மிலைநிக ரியாமென
விறைதிரு முடிமே லிலங்குநிதி மரபின
னியலிசை நாடக மெனுமுத் தமிழ்க்கடல்
பருகிய வாற்றலன் பாவலர் பெருமா
னமிர்த சாகர மாகிய வமிர்த
மெனும்பெயர் படைத்த விசைமைநா வலனே.

இஃது

சேலம்கவர்ண்மெண்டு பாலிகாபாடசாலையின் உபாத்தியாயரும்,

இந்நூலாசிரியரின் மாணாக்கர்களி லொருவருமாகிய

## சே. பகடாலு. நரசிம்மலுநாயடு

இயற்றிய

## நேரிசையாசிரியப்பா.

அகத்தியர் முதலா மருந்தவத் துயர்ந்தோர்
செகத்தினி லாய்ந்த செந்தமிழ்க் கட்டு
ளமைந்த விலக்கண மைந்தனுள் யாப்பிற்
கியைந்த விலக்கண மிதனை முன்னோர்
நூல்வழித் தெரித லுணங்கியோர்க் கன்றிப்
பால்வழி யொழுகாப் பாலரே னையர்க்கும்
பயன்பா டுடைத்தாய்ப் பகர்க வென்ன
வியன்முறை யுணர்ந்த வெழிலுரு மாரன்
திருப்பா தரிப்புலி யூரயற் றிகழு
மருப்பூம் பொழிற்புதுப் பாளையம் வாழ்வோன்
கல்விக் கழக விருத்தி விசாரணை
யொல்காது நடாத்து முபத்தலைமை பூண்டோன்
தெய்வ சிகாமணி யெனும்பெயர்ச் சீரியன்
மெய்பெறு மன்போடு விளம்பின னாக
தொகைவகை விரியிற் சுருங்கிய மாபின்
வகைபெறச் சிறுவரு மதித்துணர் கிற்பா
னிலக்கண முடிபு மிசைத்துக் காட்டி
நிலக்கண்யாப் பிலக்கண விளக்கமென நிறீஇனன்
திரிசிர புரம்வாழ் சீர்க்குடிச் செல்வன்
கரிசிரா திலங்குங் கவிபொழிகொண் மூ
விமிர்கட லுலகுக் கினிய——
அமிர்தமென் றியற்பெய ரமைதமி ழேறே.

இஃது

சித்தூர்சர்க்கில்

வித்தியாவிசாரணை யுபத்தலைவர்

# ம-௱-௱-ஸ்ரீ. நெ. முருகேசமுதலியாரவர்கள்

இயற்றிய

## நேரிசையாசிரியப்பா.

ஆரண மனைத்தையு மாக்கி யவற்றிற்
காரண காரியப் பொருளாய் விளங்குஞ்
சச்சிதா னந்தத் தனிப்பரம் பொருளே
யிச்சக பந்த மிகந்துதவத் துயர்ந்த
சந்தனப் பொதியச் சயில முனிக்குச்
சிந்தைவைத் தருளிய தெய்வத் தமிழ்க்கடல்
வாய்ப்புறு திறத்த வண்பொருளைந்தனுள்
யாப்பிய லொன்றையு மறிஞர்நூ லனைத்து
மரிதிற் கிடத்தலி னுங்கி லேயந்
தெரியுஞ் சிறுவருந் தெரியும் வகையால்
விரியுஞ் சுருக்கத்து வினாவிடை யாக்கிப்
புரியுஞ் செய்யுட் கிலக்கணம் புகல
வகைதோன் றுறு மயங்குபுன் கவிகட்கும்
மிகவும் பயன்படு விளக்க மாக
விலக்கண முடிபு மிசைத்துக் காட்டியாப்
பிலக்கண விளக்க வினாவிடை யெனப்பெயர்
தந்து நிறுவினன் றமிழ்க்கடல் பருகிய
வந்தத் தமிழ்முனி யாமிவ னென்ன
வீறுசால் கவித்திறன் மெய்வகை பிறர்க்குக்
கூறுந் திறனுந் தனவெனக் கொண்டோன்
திமிரமில் சிந்தைப் புலவர்க் ———
கமிர்தமென் றுலகி லமைந்தநா வலனே.

இஃது

வேலூர்சர்க்கில்

வித்தியாவிசாரணையுபத்தலைவர்

ம - ா-, ா - ஸ்ரீ.

## பு - தெய்வசிகாமணிமுதலியாரவர்கள்

இயற்றிய

## நேரிசைவெண்பா.

---

தொல்லறிஞர் சூத்திரங்கள் சொன்முறையோர்க் காவதனு
னல்லாங்கி லேயத்தை நட்டோர்க்கும் - வல்லான்
சொலக்கணத்திற் றோன்றித் துலங்கவே சீர்யாப்
பிலக்கணவி ளக்கமென வே,

தேனூருந் தெய்வச் செழுந்தமிழா மன்னுகலை
மானூரி லக்கணநூன் மாகடலிற் - றானூர்ந்த
துங்கவிவே கத்திறற் சொற்று னமிர்தப்பே
ரங்கவிவே கத்தினு னய்ந்து.

---

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ரு | எ | காதலனெங்கோமான் கவிக்கினியன் | காதலனெங் சோமான் கவிக்கினியன் |
| கச | உ | தாளைகளல் | தளைகளால |
| கச | கக | செப்பலோசை | 42. செப்பலோசை |
| கச | உஎ | லோசை | லோசை. |
| கஎ | அ | றும, | றும் |
| உ0 | உஅ | விடிமுழு | விடியின் முழுக் |
| உசு | உசு | முதற்சீரிலும் | முதலிருசீரிலும் வந்தால் |
| | | | இணைமுரண், முதற்சீரிலும் |
| உஎ | கஉ | கருங்கணும் | கருங்கணும் ............... |
| உஎ | கச | முவந்தெனை | முவந்தெனை ............... |
| ருஅ | உச | மன்னேகாண் | மனனேகாண் |
| சுக | உஉ | றுள்வலிப் | றுழ்வலிப் |
| எஎ | கரு | புனாதிர்ந்த | புனாதிர்ந்த |

உ
கணபதிதுணை.

## நூன் முகம்.

சூ - "தொகுத்தல் விரித்தறேகை விரிமொழிபெ யர்ப், பெனத்தகுநூல் யாப்பீரிரண்டென்ப". என்பவாகலின், இவ்யாப்பிலக்கண விளக்க வினுவிடை நூலெனப்பட்டது.

அற்றேல், "முதல்வழி சார்பென நூன்மூன்றாகும்". என்பதனுல், இந்நூல் எத்திறத்ததோவெனின், "இருவர்நூற்கு மொருசிறை தொடங்கித், திரிபுவேறுடையது புடைநூலாகும்". என்பதனுல், இந்நூல் புடைநூலெனப்படும்.

ஆயின், இந்நூல் இயன்முதலியவற்றுல் எத்துணைத்தாலெனின் உறுப்பியல், பாவியல், பாவினவியல், ஒழிபியல், இலக்கணமுடிபியல்என ஐந்தியல்களையும், ககூசு - வினுவிடைகளையும், ககடு - உதாரணச் செய்யுள்களையும், உதாரணம் இலக்கணத்தோடு விளங்குமாறு ஒன்றென்றுக்கும் அப்பியாசபோதனியையும், இலக்கணங்களின் ஒவ்வொரு வகைக்கும் பொதுவிதிகளையும், தனித்தனியே சிறப்புவிதிகளையும் உடையது.

அற்றேல், முதனூல்களிருப்பவும் இந்நூல் செய்ததென்னையெனின், யாப்பிலக்கணம் அளவின்றிக் கடல்போலிருத்தலானும், அவற்றை முற்றுமுணர்ந்து கொள்ளுதற்கு ஒருவருக்குரிய வாழ்நாளோ, (இளமை, மடிமை, பிணிமை, மூதுமை முதலியவற்றுல் விபாகித்துக்கொள்ளப் படுதலால்) பற்றப்படாதாகலானும், நிகண்டுகற்று ஆசிரியரை வழிபட்டு இலக்கிய நூல்களோடு கேட்டன்றி இலக்கண முதனூல்கள் அறியப்படாமையானும், அவற்றின் அருமைபெருமையைக், கற்றுவல்லராதலின் ஸ்கூல்டெப்டி இன்ஸ்பெக்டர் ௵ - பு - தெய்வசிகாமணி முதலியாரவர்கள், மதித்து, முதனூல்களைக்

கற்க அவகாசமில்லாத வித்தியார்த்திகளின் பொருட்டுப் பரிவு கூர்ந்து, முதனூல்களின் விதிகளையெல்லாம் எளிதாயுணரு மாறு காலானுசாரத்துக் கிசையத் தெளிவாய் யாப்பிலக்கணம் செய்விக்கவேண்டுமென்னுஞ் சிந்தனையை வெளியிட்டதனால், தொல்காப்பியம், யாப்பருங்கலம், வீரசோழியம், இலக்கண விளக்கம், யாப்பருங்கலக் காரிகை முதலாகிய மூதறிஞர் நூல் களிற் சொல்லிய விதிகளையேகொண்டு "பழையனகழிதலும் புதியன புகுதலும், வழுவலகால வகையினானே". என்பவாக வின், ஒருவாறு சுருங்கத்திரட்டி, எளிதாய் விளங்குமாறு, இ லக்கணங்கற்ற மாணுக்கரிருவர் தம்முள் ஒருவரையொருவர் உசாவுங் கடாவிடைபோல? விஞவிடை யமிசமாகச் செய்யப் பட்டது.

ஆயின், இவ்விலக்கணத்துக்கு இலக்கியம் எந்நூல்க ளிலிருந்து காட்டப்பட்டனவெனின் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, மூதுரை, கொன்றைவேந்தன், நல்வழி, நீதிநெறிவிளக்கம், இனியாநாற்பது, சீவகசிந்தாமணி, சூடா மணி, திருவாசகம், பெரியபுராணம், கந்தப்புராணம், திருவி ளையாடற்புராணம், பிரபுலிங்கலீலை, கம்பராமாயணம், நைடத ம், திருச்சிற்றம்பலக் கோவை, சிதம்பரச்செய்யுட் கோவை, பதினொன்றாந் திருமுறை, திருவானைக்காப் புராணம், களவி யற்கொத்து, மருதவளம், விண்டுக்கலம்பகம், பாண்டிக்கலம் பகம், கச்சிக்கலம்பகம், வேஙகடக்கலம்பகம, மார்க்கண்டே யர்காஞ்சி, அருணகிரியந்தாதி, கந்தரனுபூதி, மூவரம்மானை, முதலாகியவற்றின் செய்யுள்களும், முன்னோரிலக்கணங்களிற் காட்டிய சங்கச்செய்யுண் முதலிய பழம்பாடல்களும் உதா ரணமாகக் காட்டப்பட் டிருப்பதனோடு, என்னாற்செய்யப் பட் டவைகளிற் சிலசெய்யுள்களும், உதாரணமாகக்காட்டப் பட்டிருக்கின்றன. அவைகளுக்கு முதலில் - **A. K.** என்னும் இரண்டெழுத்துகள் குறிக்கப்பட்டிருக்கும்.

அ. க. அமிர்தம் பிள்ளை.

# இடுகுறிவிளக்கம்.

இந்நூலினுட் பொருளுணரப் புகுமவர்கள், சிலசார்புவிதி, புடைவிதிகளுக்கும், உதாரணத்துக்கும், அப்பியாச போதனிக்கும், உதாரணச் செய்யுள்களுக்கும், அச்செய்யுள்களின் அசை, சீர், தளை, தொடை முதலியவற்றிற்கும், காட்டியிருக்கிற இடுகுறிகள் இன்னவை யென்று விளங்குவதற்காக, முன்னமே இதன்கீ ழெழுதப்பட்டிருக்கிற இடுகுறி விளக்கத்தைப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

( ) இப்பிறைவட்டங்களை முன்னும்பின்னுங் கொண்டிருக்கும் விதி சார்புவிதி.

☞ இக்கைக்குறியிட் டிருப்பது புடைவிதி.

(உ-ம்)= உதாரணம். ஷை - இதுமேற்படியென்பது=உதாரணம்.

[அ-போ]= அப்பியாச போதனி.

ந-சூ=நன்னூற்சூத்திரம்.
வெ-பா=வெண்பா.
கு-வெ=குறள்வெண்பா.
வெ-வி=வெளிவிருத்தம்.
ஆ-பா=ஆசிரியப்பா.
ஆ-வி=ஆசிரியவிருத்தம்.
க-பா=கலிப்பா.
த-கொ-க-பா=தரவுக் கொச்சகக் கலிப்பா.
க-து=கலித்துறை.
க-க-து=கட்டளைக்கலித்துறை.
வ-பா=வஞ்சிப்பா.
வ-து=வஞ்சித்துறை.
வ-வி=வஞ்சிவிருத்தம்.
நே-ஒ-ஆ-த=நேரொன்றாசிரியத்தளை.
நி-ஒ-ஆ-த=நிரையொன்றாசிரியத்தளை.
இ-சீ-வெ-த=இயற்சீர் வெண்டளை.
வெ-சீ-வெ-த=வெண்சீர் வெண்டளை.
க-த=கலித்தளை.
ஒன்றி-வ-த=ஒன்றியவஞ்சித்தளை.
ஒன்று-வ-த=ஒன்றுவஞ்சித்தளை.

……. / - - - - / — — — / ——— / ﹏﹏ } இப்படிப்பட்ட குறிகள் அவற்றின்மே லிருக்கிற எழுத்து அல்லது சொல்லில் கவனிக்கவேண்டிய இலக்கணம் இருக்கிறதென்று காட்டும்.

உ

கணபதிதுணை.

# யாப்பிலக்கணவிளக்க

# வினாவிடை.

## தற்சிறப்புப்பாயிரம்.

உலகமெலாமாக்கி யொளிர்வித்தகற்றும்
அலகில்குணத்தொருவ னந்தாண் - மலரை
இலக்கணவி ளக்கமா வெம்மகங்கொண்டேயாப்
பிலக்கணவி ளக்கமிசைப் பேம்.

## உறுப்பியல்.

1. யாப்பிலக்கணவிளக்கவினாவிடை என்பதுயாது?

செய்யுளின் இலக்கணங்களை உணர்வோர்க்குத் தீபம்போலநின்று வினாவிடை அமிசமாய் விளங்கச்செய்வது.

2. * யாப்பிலக்கணம் என்பதுயாது?

எழுத்து, அசை, சீர், தளை, ஓசை, அடி, தொடை, பா, இனம், முடிபு என பத்து வகையாகிய செய்யுளுறுப்புக்களின் அமைதியாம்.

3. இவ்விலக்கணம் எத்தனை இயல்களை யுடையது?

உறுப்பியல், பாவியல், பாவினவியல், ஒழிபியல், இலக்கணமுடிபியல் எனஐந்து இயல்களை யுடையது.

---

* யாப்பு, செய்யுள், பாட்டு, தூக்கு, தொடர், தொடை என்பன ஒருபொருளன. இலக்கணமென்பது அமைதி.

4. உறுப்பியல் என்பதுயாது?

எழுத்து, அசை, சீர், தளை, ஓசை, அடி, தொடை என்னும் எழுவகைப்பட்டபாவின் அங்கங்களைக் கூறும் பகுதி.

5. † எழுத்து எத்தன்மைத்து?

ஒலியுரு வரியுரு என இரண்டுவடிவாய் எழுதுந்தன்மைத்து; (அதாவது) ந-சூ. "மொழிமுதற் காரணமா மணுத்திரளொலி எழுத்து," என்பதனாலும் பிறவற்றாலும் விளங்கும்.

6. அவ்வெழுத்து இலக்கணத்தால் எத்தன்மைத்து?

அகத்திலக்கணம், புறத்திலக்கணம் என இருவகை இலக்கணங்களை யுடையது - அவற்றுள் அகத்திலக்கணமாவது எழுத்துக்களின்இயற்கையைஉணர்த்துவதாம். (அதாவது) ந-சூ. "எண் பெயர்முறைபிறப்பு உருவம் மாத்திரை முதலீறிடைநிலைபோலியென்று." என்பதனால் விளங்கும். புறத்திலக்கணமாவது அவ்வெழுத்துக்களாலாகும் காரியத்தைச் சொல்வதாம்.

7. எழுத்துக்களின் காரியமாவது என்ன?

அசைகளுக்கு உறுப்பாய்நின்று இசைத்தலாம்.

8. அவ்வெழுத்துக்கள் எவை?

உயிர், குறில், நெடில், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஆய்தம், வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடையென இப்பதின்மூன்றுமாம்.

9. அசைஎத்தன்மைத்து?

சீர்களுக்கு உறுப்பாய் அசைத்து இசைகொள்ளுதலால் காரணக்குறி மரபிலக்கணத்தது.

---

† எழுதப்படுதலின் எழுத்து-காரணக்குறிமரபு.

10. அவ்வசை எத்தனைவகைப்படும்?

நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

11. நேரசை எத்தன்மைத்து?

ஒருமாத்திரை யுணர்த்துவது.

12. அந்நேரசை எத்தனைவகைப்படும்?

குற்றெழுத்தும், நெட்டெழுத்துந் தனித்தனியே நின்றாலும், தனித் தனியே ஒற்றடுத்து நின்றாலும் "குறில் தனித்துவந்த நேரசை.நெடில் தனித்துவந்த நேரசை, குறில் ஒற்றடுத்துவந்த நேரசை, நெடில்ஒற்றடுத்துவந்தநேரசை" எனநான்குவகைப்படும்.

(உ-ம்) ஆதியெம்மான்.

அப்பியாசபோதனி.

ஆ - நெடில் தனித்துவந்த நேரசை.

தி - குறில் தனித்துவந்த நேரசை.

யெம் - குறில் ஒற்றடுத்துவந்த நேரசை.

மான் - நெடில் ஒற்றடுத்துவந்த நேரசை.

13. நிரையசை எத்தன்மைத்து?

நிரையசை ஈரளபு இசைப்பது.

14. அந்நிரையசை எத்தனை வகைப்படும்?

இரண்டு குறிலிணைந்து தனித்தும், ஒருகுறில் ஒருநெடிலோடிணைந்து தனித்தும், குறிலிணைந்துஒற்றடுத்தும், குறில் நெடிலிணைந்து ஒற்றடுத்தும் "குறிலிணைந்துதனித்துவந்த நிரையசை குறில்நெடிலிணைந்து தனித்துவந்த நிரையசை, குறிலிணைந்து ஒற்றடுத்துவந்த நிரையசை, குறில்நெடிலிணைந்துஒற்றடுத்துவந்தநிரையசை" எனநான்கு வகைப்படும்

(உ-ம்.) அணி குழை அலங் கலாள்.

[அப்-போ]

அணி - இரண்டுகுறிலிணைந்து தனித்துவந்த நிரையசை.

குழை - குறில் நெடிலிணைந்து தனித்துவந்த நிரையசை.

அலங் - குறிலிணைந்து ஒற்றடுத்துவந்த நிரையசை.

கலாள் - குறில் நெடிலிணைந்தொற்றடுத்துவந்தநிரையசை.

15. சீர் எத்தன்மைத்து?

செய்யுளின் அடிகளுக்கு உறுப்பாய், தளையாராய்தற்கு ஏதுவாய், சீர்கொண்டு இசைக்குந்தன்மைத்து.

16. அச்சீர் எத்தனைவகைப்படும்?

* இயற்சீர், வெண்சீர், வஞ்சிச்சீர், பொதுச்சீர், அசைச்சீரென ஐந்துவகைப்படும்.

17, இயற்சீரென்னும் ஆசிரிய உரிச்சீர்கள் எவை?

நேர் நேர் = தேமா என்றும்
நிரை நேர் = புளிமா எ-ம்
நிரை நிரை = கருவிளம் எ-ம்
நேர் நிரை = கூவிளம் எ-ம் கூறப்படுகிற
இரண்டசைச்சீர்கள் நான்குமாம்.

(உ-ம்) உம்பர்க் கதிபன் உயர்மறைத் தேசிகன்,
கும்பற் கினிய குரவன்,
எம்பிரான் முருகனெம்மையாள் வோனே.

[அப்-போ] உம்பர்க் - நேர் நேர்வந்தமையின் = தேமா
கதிபன் - நிரைநேர் வந்தமையின் = புளிமா
உயர்மறைத் - நிரைநிரைவந்தமையின் = கருவிளம்
தேசிகன் - நேர்நிரைவந்தமையின = கூவிளம்.

18. காய்ச்சீரென்னும் வெண்சீரெவை?

மேற்சொல்லிய இரண்டசையாகிய தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் சீர்களின் இறுதியில் காய் என்னும் நேரசை கூடி,

---

* இயற்சீர், ஆசிரியச்சீர், ஆசிரியஉரிச்சீரென்பன ஒருபொருளன.
வெண்சீர், வெண்பாஉரிச்சீர், காய்ச்சீரென்பன ஒருபொருளன.
வஞ்சிச்சீர், வஞ்சிஉரிச்சீர், கனிச்சீர் என்பன ஒருபொருளன.

நேர் நேர் நேர் = தேமாங்காய்
நிரை நேர் நேர் = புளிமாங்காய்
நிரை நிரை நேர் = கருவிளங்காய்
நேர் நிரை நேர் = கூவிளங்காய்: என்னும் மூன்றசைச்சீர்கள் நான்குமாம்.

(உ-ம்) மாதாரும் பாகன் வரதன் சேய் வள்ளிபுணர்
A. K. காதலனெங் கோமான கவிக்கினியன்--போதாருஞ்
செந்தா மரைப்பதமெஞ் சென்னிக் கணிமுடியாத்
தந்தாள்வான் வந்தருளிற் றுன்.

[அப்-போ]
மாதாரும்- நேர் நேர் நேர் வந்தமையின் தேமாங்காய்,
வரதனசேய் - நிரை நேர் நேரவந்தமையின புளிமாங்காய்,
கவிக்கினியன்- நிரை நிரை நேர் வந்தமையின் கருவிளங்காய்,
வந்தருளின் - நேர்நிரைநேர் வந்தமையின் கூவிளங்காய்.

19. கனிச்சீர என்னும் வஞ்சிச்சீர் எவை?

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கு சீர்களின் இறுதியில் கனி என்னும் நிரையசைபெற்று தேமாங்கனி, புளிமாஙகனி, கருவிளங்கனி, கூவிளங்கனிஎன்று சொல்லப்படும் நான்குசீர்களுமாம்.

(உ-ம்) வ-பா. பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயினமகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும.,

[அப்-போ] பூநதாமரைப=தேமாங்கனி
தேம்புனலிடை=கூவிளங்கனி
வளவயலிடை=கருவிளங்கனி
வினைக்கம்பலை=புளிமாங்கனி.

20. பொதுச்சீர் எவை?

இரண்டசைச்சீர்கள் நான்கினும் லொன்றென்றிற்கும்பின், தண்பூ, நறும்பூ, தண்ணிழல், நறுநிழல்என்னும் வாய்பாட்டையுடைய ரரசைகள்கூடி

தேமாந்தண்பூ } ——— தேமாந்தண்ணிழல்
தேமாநறும்பூ } தேமாநறுநிழல

புளிமாந்தண்பூ } ——— புளிமாந்தண்ணிழல்
புளிமாநறும்பூ } புளிமாநறுநிழல்

கருவிளந்தண்பூ } ——— கருவிளந்தண்ணிழல்
கருவிளநறும்பூ } கருவிளநறுநிழல்

கூவிளந்தண்பூ } ——— கூவிளந்தண்ணிழல்
கூவிளநறும்பூ } கூவிளநறுநிழல்

என்று வழங்கப்படும் நான்கசைகளாகிய சீர்கள்பதி னாறுமாம்.

(உ-ம்) அங்கண்வானத் தமரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்.—

[அப்-போ] அங்கண்வானத் - தேமாந்தண்பூ
வெங்களியானை - கூவிளந்தண்பூ.,
மற்றவைகளும் இவ்வாறேவரும.

21. அசைச்சீர் எவை ?

நேரசையும், நிரையசையும் தனித்தனியே சீராய் நாள், மலர் என்று வழங்கப்படுகின்ற ஓரசைச்சீர்கள் இரண் டுமாம்.

(உ-ம்.) வ-வி. உரிமை யின்க ணின்மையால்
அரிமதர் மழைக் கண்ணள்
செருமதி செய் தீமையால்
பெருமை கொன்ற வென்பவே.

[அப்-போ] மழை = மலர்
செய் = நாள்.

22. தளையாவது எத்தன்மைத்து ?

பாக்களின்ஓசை யறிதற்கேதுவாய் சீர்களைத்தளைத்து வ ழங்குதலால் தளைஎன்னுந் தன்மைத்து.

23. அது எத்தனைவகைப்படும்?
நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றாதவஞ்சித்தளைஎன ஏழுவகை படும்.

☞ அவைவருமாறு-நேர்முன்நேர்வந்தால் நேரொன்றாசிரியத்தளை, நிரைமுன் நிரைவந்தால் நிரையொன்றாசிரியத்தளை, நேர்முன்நிரையும் நிரைமுன்நேரும்வந்தால் இயற்சீர்வெண்டளை, காய்முன்நேர்வரில்வெண்சீர் வெண்டளை.

காய்முன் நிரைவரில் கலித்தளை.

கனிமுன் நிரைவரில் ஒன்றியவஞ்சித்தளை.

கனிமுன் நேர்வரில் ஒன்றாத வஞ்சித்தளை.

24. இவைகள் எங்கேவந்துவழங்கும்?
ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்குபாக்களிலும்வந்து வழங்கும்.

25. தளைவழங்கும்விதம் எப்படி?
பாக்களின் ஒவ்வோரடியையும் (எந்தெந்தப்பாக்களின் அடிகளுக்கு எத்தனைசீர்வரவேண்டுமோ அந்தமுறையே) சீர்களாகப்பிரித்து, முதற்சீரை இரண்டாஞ்சீராலும், இரண்டாஞ்சீரை மூன்றாஞ்சீராலும், மூன்றாஞ்சீரை நான்காஞ்சீராலும், நான்காஞ்சீரை அடுத்தஅடியின் முதற்சீராலும் இணைத்து, நின்றசீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் தளைவிதிப்படி ஒத்திருப்பதாகப்பார்த்து (எந்தெந்தச்சீரை என்னென்ன தளையென்று சொல்லவேண்டுமோ அவ்வாறே) நிலைச்சீர்களுக்குப் பெயரிட்டு வழங்கவேண்டும். (இவ்வாறுதளையாராயும் விதத்தைப் பின்வரும் அந்தந்தத்தளைகளுக்குக் காட்டியஅப்பியாசக் குறிப்பிற் காண்க.)

26. ஆசிரியப்பாவில் வழங்குந் தளைகளெவை ?
நேரொன்றாசிரியத்தளையும், நிரையொன்றாசிரியத்தளையும் வந்துவழங்கும்.

27. வேறுதளைகள்வந்துவழங்குமோ ?
ஆசிரியத்தளையின் மூறைமாறிய இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும், கலித்தளையும்; சிறுபான்மை வஞ்சித்தளைகளும் வந்துவழங்கும்.

(உ-ம்.) ஆ - பா.

| | | | | |
|---|---|---|---|---|
| **A.K.** | நி-ஒ-ஆ-த | நே-ஒ-ஆ-த | நி-ஒ-ஆ-த | இ-சீ-வெ-த |
| | வென்றிவேற் | குழகன் | மெய்யடி | பரவினர் |
| | இ-சீ-வெ-த | வெ-சீ-வெ-த | | |
| | நன்றிசார் | வாழ்க்கையி | னண்ணிக் | |
| | கன்றலி | லின்பங் | கைக்கொள் | வாரே. |

[அப் · போ.]

**வென்றிவேல்** என்னும் கூவிளத்தின் இறுதிநிரையசையும், **குழகன்** என்னும் சீரின் முதல்நிரையசையும் தம்முள் ஒன்றிவந்தமையால் முதற்சீர் நிரையொன்றாசிரியத்தளை. **குழகன்** என்னும் புளிமாவின் இறுதிநேரசையும், **மெய்யடி** என்னும் சீரின்முதல் நேரசையும் தம்முள் ஒன்றிவந்தமையால் இரண்டாம் சீர் நேரொன்றாசிரியத்தளை. **மெய்யடி** என்னும் கூவிளத்தின் இறுதி நிரையசையும், **பரவினர்** என்னும் சீரின்முதல் நிரையசையும் தம்முள் ஒன்றிவந்தமையால் மூன்றாஞ்சீர் நிரையொன்றாசிரியத்தளை. **பரவினர்** என்னும் கருவிளச்சீரின் இறுதிநிரையசையும், **நன்றிசார்** என்னும் சீரின் முதல் நேரசையும் தம்முள் மாறிவந்தமையால்நான்காஞ்சீர் இயற்சீர் வெண்டளை. **நன்றிசார்** என்னும் கூவிளத்தின் இறுதிநிரையசையும், **வாழ்க்கையி** என்னும் சீரின்முதல் நேரசையும் தம்முள்மாறுபட்டுவந்தமையான் இரண்டாமடி முதற்சீர் இயற்சீர்வெண்டளை. **வாழ்க்கையி**

என்னும் தேமாங்காயின் இறுதி நேரசைக்குமுன் நண்ணி என்னும் சீரின் முதல் நேரசைவந்தமையான் அவ்விரண்டாஞ் சீர் வெண்சீர் வெண்டளை. மற்றவைகளும் இவ்வாறேவரும்.

28. இப்பாவில் வந்துவழங்காத சீர்தளைகளும் உண்டோ?

கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் இரண்டு சீர்களும்வந்து தளைவழங்கப் பெறுதன.

29. வெண்பாவில்வழங்குந் தளைகள் எவை?

வெண்சீர்வெண்டளையாம். அன்றியும் (ஆசிரியவுரிச்சீர் தளை இலக்கணமுறைமாறி இரண்டிடத்துப் பெயர்பெற்ற) இயற்சீர் வெண்டளையும், வந்துவழங்கும்.

(உ-ம்.) கு-வெ-பா.

| வெ-சீ-வெ-த | இ-சீ-வெ-த | வெ-சீ-வெ-த | வெ சீ-வெ-த |
|---|---|---|---|
| கற்றதனு | லாய பயனென்கொல் | வாலறிவ | |
| னற்று | ொழாஅ | ரெனின். | |

[அப்-போ] கற்றதனு என்னும் கூவிளங்காயின் முன் லாயஎன்னும் சீரின் முதல்நேரசை வந்தமையால் முதற்சீர் வெண்சீர்வெண்டளை. லாய என்னும் தேமாவின் முன் பயனென்கொல் என்னும் சீரின்முதல் நிரையசை வந்தமையால் இரண்டாஞ்சீர் இயற்சீர் வெண்டளை. மற்றவைகளு மிவ்வாறேவரும்.

30. இந்தப்பாவில்வந்து வழங்காத சீர்தளைகளும் உண்டோ?

வேறுசீர்களும், வேறுதளைகளும்வந்து வழங்குமாயின் வெண்பாத்தன்மை கெட்டுப்போம் ஆதலால்வந்து வழங்கப்பெறு.

31. கலிப்பாவில்வந்து வழங்குந் தளைகள் எவை?

வெண்பாவிற்குரிய காய்ச்சீர், வருஞ்சீர்முதல்நிரையசை வருவதனுல் கலித்தளையாகி வந்துவழங்கும்.

32. மற்றைப்பாக்களின் சீர்தளைவந்து வழங்காவோ ?

ஆசிரியப்பாவிற்குரிய தேமா, புளிமாஎன்னும் இரண்டு சீர்களும், வஞ்சிப்பாவிற்குரிய **கருவிளங்கனி**, **கூவிளங்கனி** என்னும் இரண்டுசீர்களுந் தவிர மற்ற வெல்லாச் சீர்களும்வந்து தளை வழங்கப்பெறும்.

(உ-ம்.) க-பா. செல்வப்போர்க் கதக்கண்ணன்
செயிர்த்தெறிந்த சினவாளி,
முல்லைத்தார் மறமன்னர்
முடித்தலையை முருக்கிப்போ,
யெல்லைநீர் வியன்கொண்மூ
விடைநுழையு மதியம்போன,
மல்லலோங் கெழில்யானை
மருமம்பாய்ந் தொளித்ததே.

[அப்-போ] **செல்வப்போர்** என்னும் தேமாங்காயின்முன் **கதக்கண்ணன்** என்னும் வருஞ்சீரின்முதல் நிரையசையாக வந்தமையால் முதற்சீர் கலித்தளை, **கதக்கண்ணன்** என்னும்புளிமாங்காயின்முன் **செயிர்த்தெறிந்த** என்னும் வருஞ்சீரின் முதலசை நிரையாக வந்தமையால் இரண்டாஞ்சீர் **கலித்தளை**, **செயிர்த்தெறிந்த** என்னும் கருவிளங்காயின்முன் **சினவாளி** என்னும் வருஞ்சீரின் முதல் நிரையசைவந்தமையால் மூன்றாஞ்சீர் **கலித்தளை**, **சினவாளி** என்னும்புளிமாங்காயின்முன் **முல்லைத்தார்** என்னும் வருஞ்சீர் முதல் நேரசைவந்தமையால் நான்காஞ்சீர் **வெண்சீர்வெண்டளை**. மற்றைச்சீர்களும் வந்தழிக்கண்டுகொள்க.

33. வஞ்சிப்பாவிற்குரிய தளைகள்எவை ?

ஒன்றியவஞ்சித்தளையும், ஒன்றாதவஞ்சித்தளையுமாம்.

(உ-ம்.) வ-பா. பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்,

[அப்-போ] பூந்தாமரை என்னும்தேமாங்கனியின்முன் போதலமர என்னும் வருஞ்சீரின் முதல் நேரசைவந்தமையால் முதற் சீர் ஒன்ருதவஞ்சித்தளை, போதலமர என்னும் கூவிளங்கனியின்முன் தேம்புனலிடை என்னும்வருஞ்சீரின்முதல் நேரசைவந்தமையால் இரண்டாஞ்சீர் ஒன்ருதவஞ்சித்தளை, தேம்புனலிடை என்னும் கூவிளங்கனியின் முன் மீன்றிரிதரும் என்னும் வருஞ்சீர்முதலசை நேர்வந்தமையால் இரண்டாமடி முதற்சீர்ஒன்ருதவஞ்சித்தளை, மீன்றிரிதரும் என்னும் கூவிளங்கனியின்முன் வளவயலிடை என்னும் வருஞ்சீர்முதல்நிரையசைவந்தமையால அவ்விரண்டாஞ்சீர் ஒன்றியவஞ்சித்தளை, மற்றவைகளும் இவ்வாறேகாண்க.

34, இந்தப்பாவில் வேறுசீர்தளைகள் வந்துவழங்காவோ?
மற்றப்பாக்களுக்குரிய எல்லாச்சீர்தளைகளும் வந்துவழங்கும்.

35. பொதுச்சீர்கள் எவ்வாறு தளைவழங்கும்?
'பூ' என்னும், நேர் இறுதியாகிய நாலசைச்சீர் எட்டையும் 'காய்' என்னும் நேர் இறுதியாகிய வெண்சீரே போலக்கொண்டு, வருஞ்சீர்முதலசை நேராகவந்து ஒன்றுமாயின் வெண்சீர் வெண்டளைஎன்றும், நிரையாகவந்து ஒன்றுமாயின் கலித்தளை என்றும்; 'நிழல்' என்னும் நிரை இறுதியாகிய நாலசைச்சீர் எட்டையும் 'கனி' என்னும் நிரை இறுதியாகிய வஞ்சியுரிச்சீரே போலக்கொண்டு, வருஞ்சீர்முதலசை நிரையாகவந்து ஒன்றினும், நேராகிவந்து ஒன்ருவிடினும் ஒன்றியவஞ்சித்தளை, ஒன்ருதவஞ்சித்தளைஎன்றும் வழங்கப்படும்.

36. இவைகள் எந்தப்பாவில்வந்து வழங்கும்?
நிழல் இறுதியாகிய சீர்எட்டும் வஞ்சிப்பாவொன்றிலும், பூ இறுதியாகிய சீர்எட்டும் பெரும்பான்மை வஞ்சிப்பாவிலும், சிறுபான்மை குற்றுகர இறுதியையுடையன

வாய். கலிப்பாவிலும், அவ்வாறே அருகி ஆசிரியப்பா விலும் வந்து தளைவழங்கும்.

(உ-ம்) வ. பா. அள்ளற்பள்ளத் தகன்சோணாட்டு
வேங்கைவாயில் வியன்குன்றூரன்,

[அப்-போ] அள்ளற்பள்ளத் என்னும் தேமாந்தண்பூ வின் இறுதிநேரசையின் முன் வருஞ்சீர் முதல்நிரையசை வந் தமையால் முதற்சீர் கலித்தளை, தகன்சோணாட்டு என் னும் புளிமாந்தண்பூவின் இறுதிநேரசையின்முன் வருஞ்சீர முதலசை நேராகவந்தமையால் இரண்டாஞ்சீர் வெண்சீர் வெ ண்டளை; மற்றவைகளும் இவ்வாறேவரும். இச்சீர்கள் கலிப் பாவுள்ளும் ஆசிரியப்பாவுள்ளும் வருதல் ஆன்றோர் செய்யுள் அகத்து அருகியாதலின் வந்துழிக்காண்க.

(இதுசுருங்கியலாதலின் இங்குவிரிக்கில் பெருகும்)

37. அசைச்சீர்கள் எவ்வாறு தளைவழங்கும்?

'நாள்' என்னும் நேரசைச்சீரை ஆசிரியவுரிச்சீரேபோ லக்கொண்டு வருஞ்சீரின்முதல் நேரசையாய்வந் தொன்றுமாயின் நேரொன்றாசிரியத்தளை என்றும், 'மலர்' என்னும் நிரையசைச்சீரை அவ்வாறே கொ ண்டு வருஞ்சீர்முதலசை நிரையாகவந்து ஒன்றுமா யின் நிரையொன்றாசிரியத்தளை என்றும்;

இம்முறைமாறி நேர்முன்நிரையும், நிரைமுன்நேருமாகி வரு மாயின் இயற்சீர்வெண்டளை என்றும் வழங்கப்படும்.

38. இந்தச்சீர்கள் எங்கேவந்துவழங்கும்?

சிறுபான்மை ஆசிரியப்பா வினங்களிலும், கலிப்பா, வ ஞ்சிப்பா வினங்களிலும்; பெரும்பான்மை வெண்பா இறுதியிலும் வந்துவழங்கும்.

(உ-ம்) வ-வி. உரிமை யின்க ணின்மையா
இ-சீ-வெ-த
லரிமதர் மழைக் கண்ணாள்
நே-ஒ-ஆ-த
செருமதி செய் தீமையாற்
பெருமை கொன்ற வென்பவே.

[அப் - போ] 'மழை' என்னும் நிரையசைச்சீர் 'கண்ணாள்' என்னும் வருஞ்சீர்முதல் அசை நேராகவந்தமையால் இயற்சீர்வெண்டளை, செய் என்னும் நேரசைச்சீர் 'தீமையால்' என்னும் வருஞ்சீர் முதலசை நேராகவந்து ஒன்றினமையான் நேரொன்றாசிரியத்தளை, மற்றவைகளும் இவ்வாறேவரும்.

(ஷை) கு-வெ.

கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில்.

'மில்' என நேரசை ஒன்றேநின்று 'நாள்' என்னும் அசைச்சீராயதும்,

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

'தவர்' என நிரையசை ஒன்றேநின்று 'மலர்' என்னும் அசைச்சீராயதும் கண்டுகொள்க.

39. இச்சீர்கள், தளைகள் எல்லாம்தத்தமக்கு உரியபாக்களிலன்றி வேறுபாக்களில் வழங்குங்கால் வேறுபேரும் பெறுமோ?

சீர்தளைகள் பிறபாக்களில் வழங்கினும், தத்தமக்குரிய பெயரையேபெற்று வழங்குவதன்றி வேறுபெயர்பெறா.

---

40. ஓசையென்பது எத்தன்மைத்து?

சொற்சீர்களின் தொடர்ச்சியால் தோன்றி, தளைகளால் ஆராயப்பட்டு, அடிகளால் அமைதிபெற்று, பாக்களின் குணமாய் ஒலிக்கப்படுந் தன்மைத்து.

41. அவ்வோசை எத்தனைவகைப்படும்?

வெண்பாவிற் குரிய செப்பலோசை என்றும்
ஆசிரியப்பாவிற் குரிய அகவலோசை எ-ம்
கலிப்பாவிற் குரிய துள்ளலோசை எ-ம்
வஞ்சிப்பாவிற் குரிய தூங்கலோசை எ-ம் நான்கு வகைப்படும்.

செப்பலோசை எத்தனைவகைப்படும்?

ஏந்திசைச்செப்பல், தூங்கிசைச்செப்பல், ஒழுகிசைச்செப்பல் என மூன்றுவகைப்படும்.

43. இவற்றை எவ்வாறு அறியலாம்?

வெண்பாவில் முற்றும் 'காய்'ச்சீராகவுந்து வெண்சீர் வெண்டளை யானே முடிந்திருக்குமாயின் ஏந்திசைச்செப்பலோசை என்றும், முழுதும் இயற்சீர் வெண்டளை யானே முடிந்திருக்குமாயின் தூங்கிசைச்செப்பலோசை என்றும், இருவகைச் சீர்களும் விரவி இருவகைத்தளையானு முடிந்திருக்குமாயின் ஒழுகிசைச்செப்பலோசை என்றும் அறியலாம்.

(உ-ம்) யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு,

[அப்-போ] இக்குறள் வெண்பாவில் 'காய்' ச்சீர்கள் நிரம்பி வெண்சீர்வெண்டளைதட்டு முடிந்தமையான் ஏந்திசைச்செப்பலோசை

(உ-ம்) பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

[அப்-போ] இக்குறட்பாவில் முற்றும் இயற்சீர்வெண்டளைத ட்டு முடிந்தமையால் **தூங்கிசைச்செப்பலோசை.**

(ஷை.) கந்தனருட் பெம்மான் கலயக் குறுமுனிக்குச்

**A. K.** செந்தமிழைத் தந்த திருப்புலவன்-இந்திரற்கு
வாழ்வாதி தந்த வரதனடியடைந்தார்
தாழ்வாகா ரொக்காலுந்தாம்.

[அப்-போ] இந்நேரிசைவெண்பாவில் இருவகைச்சீரும் நி ரைந்த **வெண்சீர் வெண்டளையும், இயற்சீர்வெ ண்டளையும்** தட்டுமுடிந்தமையான் **ஒழுகிசைச்செப்ப லோசை.**

44. அகவலோசை எத்தனைவகைப்படும்?

**ஏந்திசையகவல், தூங்கிசையகவல், ஒழுகிசை யகவல்** என மூன்றுவகைப்படும்.

45. இவற்றை எவ்வாறறியலாம்?

ஆசிரியப்பா நேரொன் றாசிரியத்தளையானே முடிந்திருக்குமாயின் **ஏந்திசையகவலோசை** என்றும், நிரையொன்றாசிரியத்தளையானே முடிந்திருக்குமாயின் **தூங்கிசையகவலோசை** என்றும், இருதளையும் விரவி பிறபாக்களுக்குரிய பலதளையும் நிரம்பி முடிந்திருக்குமாயின் **ஒழுகிசையகவலோசை**என்றும், அறியலாம்.

(உ-ம்) போது சாந்தம் பொற்ப வேந்தி
யாதி நாதற் சேர்வோர்————
சோதி வானந் துன்னு வோரே.

[அப்-போ] இந்நேரிசையாசிரியப்பாவில் **நேரொன் றாசிரியத்தளையே** முற்றும் தட்டுமுடிந்தமையான் **ஏந்திசையகவலோசை.**

(ஷை) அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனை
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே.

[அப்-போ] இந்நேரிசை யாசிரியப்பாவில் முற்றும் நிரை யொன்றாசிரியத்தளையே வந்தமையால் தூங்கிசை லோசை.

(உ-ம்) காந்தளங் கண்ணி வேய்ந்த தடநதோள்
A. K. பன்னிரண் டிலங்க நன்னிற மயிலமேல
வநதெமை யாளும் வடிவேற்
செந்திலுக் கிறைவன் சேவக னெமக்கே.

[அப்-போ] இந்நேரிசை யாசிரியப்பாவில் இருதளையும் விரவிவநதமையால் ஒழுகிசை[redacted]லோசை. இவ்வாறே பலதளைகளும் விரவிவரும்.

46. துள்ளலோசை எத்தனைவகைப்படும்?

ஏந்திசைத் துள்ளல், பிரிந்திசைத்துள்ளல், அகவற்றுள்ளல் என மூவகைப்படும்.

47. இவைகளை எவ்வாறறியலாம்?

கலிப்பாவில் வெண்சீர்வெண்டளையே முற்றும்வந்து முடியுமாயின் ஏந்திசைத்துள்ளலோசை என்றும், கலித்தளையே முற்றும்வந்து முடியுமாயின் பிரிந்திசைத்துள்ளலோசை என்றும், அவ்விரு தளையும் விரவி,பலதளையும்,பயின்றுவருமாயின் அகவற்றுள்ள லோசை என்றும் அறியலாம்.

(இக்கலிப்பாவிற்கும், பின்வரும்வஞ்சிப்பாவிற்கும் உதாரணம பாவிலக்கணம் கூறுமிடத்துக் கண்டுகொள்க.)

48. தூங்கலோசை எத்தனைவகைப்படும்?

ஏந்திசைத் தூங்கல், பிரிந்திசைத் தூங்கல், அகவற்றூங்கல்என மூவகைப்படும்.

49. இவைகளை எவ்வாறறியலாம்?

வஞ்சிப்பாவில் ஒன்றியவஞ்சித்தளையே முற்றும் வந்து முடியுமாயின் ஏந்திசைத்தூங்கலோசை என்றும், ஒன்றாதவஞ்சித்தளையே முற்றும்வந்து முடியுமாயின் பிரிந்திசைத் தூங்கலோசை என்றும், இவ்விருதளையும் பிறவிபபலதளையும் பயின்றுவருமாயின் அகவற்றூங்க லோசை என்றும், அறியலாம்.

---

50. அடியெத்தன்மைத்து?

சொற்சீர்களின் தொடர்ச்சியாய், ஓசையும்தொடையும் அமைதற்கிடனாய், பாவியலுதற் குறுப்பாய், பகுதிபட்டு இயலுந் தன்மைத்து.

51. அவ்வடி எத்தனைவகைப்படும்?

இருசீரான்வருவது குறளடி என்றும், முச்சீரான்வருவது சிந்தடி என்றும், நான்குசீரான்வருவது அளவடி அல்லது நேரடி என்றும், ஐந்துசீரான்வருவது நெடிலடி என்றும், ஐந்துசீரின்மிக்கு எனைத்துச்சீரானும்வரில் கழிநெடிலடி என்றும் ஐந்துவகைப்படும்.

52. இவ்வடிகள் எந்தெந்தப்பாக்களுக்குரியன?

குறளடி, சிந்தடி - வஞ்சிப்பாவிற்கும்; அளவடி - மற்றை மூன்றுபாக்களுக்கும்; நெடிலடி - கலிப்பாவின்இனத்திற்கும்; கழிநெடிலடி ஆசிரியப்பா வினத்திற்கும் உரியனவாகும்,

(உ-ம்) திரைத்த சாலிகை, நிரைத்த போனிரைந்,
துரைப்ப தேன்களே, விரைக்கொண் மாலையாய்.

[அப்-போ] இவ்வஞ்சிவிருத்தம் இருசீரடிகளால் வந்தமையால குறளடி வஞ்சிவிருத்தம்.

(ஷை) தெள்ளிய மாருதி சென்றான்
கள்ள வரக்கர்கள் கண்டால்
எள்ளுவர் பற்றுவ ரென்று
வொள்ளொளி யோனு மொளித்தான்.

[அப்-போ] இவ்வஞ்சிவிருத்தம் முச்சீராகிய சிந்தடி யான் வந்தமைகாண்க.

(ஷை) வாழ்வினை நுதலிய மங்க லத்துநாள்
தாழ்வினை யதுவரச் சீனை சாத்தினன்
சூழ்வினை நான்முகத் தொருவற் சூழினு
மூழ்வினை யொருவரா லொழித்தற் பாலதோ.

[அப்-போ] இக்கலிவிருத்தத்தில் நான்கு சீர்களாலாகிய நேரடிகள்வந்தமை காண்க.

(ஷை) கருவி மாமழை கலேமக ளுருவென விளங்கி [கும்
யிருவி சும்பிடைப் படர்ந்துசென் றினமணி கொழிக்
பரவை வெண்டிரை மேய்ந்துயர் பனிவரை யுயிர்த்த
வுருவ வோடரித் தடங்கணு ளுருக்கொடு மீண்ட.

[அப்-போ] இக்கலித்துறையில் ஐஞ்சீராகியநெடிலடிகள் வந்தமைகாண்க.

(ஷை) நிலம்போற்றும் பனிக்கிரண நிலாவணிந்த நாயக
னார் நிருதர் வாழுஞ்
சலம்போற்று மதில்பொடித்த ஞான்றினிய
பூசனைகள் சால வாற்றிப்
புலம்போற்று மெய்யடியார் விநாயகனென்
றியம்புபதப் பொருளை நாட்டி
வலம்போற்று மணியிரத மூர்ந்தமழ விளங்களிற்றை
வணக்கஞ் செய்வாம.

[அப்-போ] இவ்வாசிரிய விருத்தத்துள் அறுசீர்களாகிய கழிநெடிலடி வந்தமைகாண்க.

(ஷை) நிலமகண் முகமோ திலகமோ கண்ணே
நெடுநிரை மங்கல நாணே
யிலகுபூண் முலேமே லாரமோ வுயிரி
னிருக்கையோ திருமகட் கினிய

மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ வானோ
ருலகின்மே லுலகோ வூழியி னிறுதி
யுறையுளோ யாதென வுரைப்பாம்.

[அப்-போ] இவ்வாசிரிய விருத்தத்தில் எழுசீரானாகிய கழிநெடிலடி வந்தமைகண்டுகொள்க.

☞ இதனின்மிக்க சீர்க்கழிநெடிலடிகளும் ஆசிரிய விருத்தங்களுள் கண்டுகொள்க.

---

53. தொடையென்பது எத்தன்மைத்து?

சொற்சீரடிகளின் இடத்ததாய்,எழுத்துகளின்ஒற்றுமைக் காரியத்ததாய், செய்யுளுக்கு அணியாகத் தொடுக்குந் தன்மைத்து.

54. தொடை எத்தனைவகைப்படும்?

† அடித்தொடை, விகற்பத்தொடை *என இருவகைப்படும்.

55. அடித்தொடை எத்தனை?

அடிமோனைத்தொடை, அடியியைபுத்தொடை, அடியெதுகைத்தொடை, அடிமுரண்டொடை, அடியளபெடைத்தொடை என்னும் ஐந்தனோடு (தொடைவிகற்பம்பெறாத) அந்தாதித்தொடை, இரட்டைத்தொடை, செந்தொடை என்னும் மூன்றனையுங்கூட்ட எட்டாம்.

56. அடிமோனைத்தொடை என்பதுயாது?

---

† அடித்தொடை ஒன்றுக்கொன்று ஒற்றுமையாய் அடிகளில் வருவது.

* விகற்பதொடைஎனினும், தொடைவிகற்பம் எனினும் ஒக்கும்.

பாவின் அடிகள்தோறும் முதலெழுத்துகள் ஒன்றிவருவது. (அதாவது) முதலடி முதலில எந்தஎழுத்துவந்ததோ அந்தஎழுத்தே எல்லாஅடி முதலிலும்வருதல.

(உ-ம்) மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை —————
மாயோ ளின்னுயிர்ப் புரத்துறுத் தற்றே.

[அப்-போ] இவ்வாசிரியப்பாவில் அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவந்தமை காண்க.

57. அடியியைபுத்தொடையாவதுயாது?

செய்யுளின் அடிகள்தோறும் இறுதியில் எழுத்தேனும், அசையேனும், சீரேனும், ஒன்றிவருவது.

(உ-ம்) இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி கூடலு மணங்கே
அரிமதர் மழைக்கணு மணங்கே ——
திருநுதற் பொறித்த திலகமு மணங்கே.

[அப்-போ] இவ்வாசிரியப்பாவில் அடிகள் தோறும் இறுதி ஒன்றிவந்தமைகாண்க.

☞ எழுத்துவருதல், அசைவருதல், சீர்வருதல், மூன்றுக்கும் இதுவே உதாரணமாகக்கொள்க.

58. அடியெதுகைத்தொடையாவதுயாது?

செய்யுளின் அடிகள்தோறும் முதலில் இரண்டாமெழுத்து ஒன்றிவருவது.

(உ-ம்) வடியேர்கண் ணீர்மல்க வான்பொருட்கட்சென்றார்
கடியார் கணங்குழாய் காணார்கொல்—காட்டி
லிடிமுழக் கஞ்சி யிரங்கவுள் வேழம்
பிடியின் புறத்திசைத்த கை.

[அப்-போ] இவ்வின்னிசை வெண்பாவில் அடிதோறும் இரண்டாமெழுத்து ஒன்றி வந்தமை காண்க.

59. அடி *முரண்டொடை என்பதுயாது?
அடிகள்தோறும் முதலில் சொல்லேனும் பொருளேனு ம்தம்முள் மறுதலைப்பட்டுவருவது (அதாவது) ஒருஅடி யில் வந்தசொல் அல்லது பொருளுக்கு மறறோரடியிலவ ருஞ் சொல அல்லது பொருள் விரோதமாய்வருதல்.

(உ-ம) ஆ-பா. இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்

நிலவுகுவித் தன்ன வெண்மண லொருசிறை
இருமபி னனன கருஙகோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா திறைக்குஞ்
சிறுகுடிப் பரதவா மடமகள
பெருமதர் மழைககணு முடையவா லணங்கே.

[அப்-போ] இதில் அடிதோறும் பொருள முரண் வந்தமை காண்க.

(ஷை) ஆ-பா ஓங்கற் கரச னும்பர்க் கதிபன்
A.K. குன்றக் குறதத கொண்கன் றெய்வத்
தருவா யருளுஞ் சதுரன் ——
வாஙகலி னுதிவேல வழித்துணை யெமக்கே.

[அப்-போ] இதில் பொருள் முரணின்றேனும் சொற்றனை மையால அடிதோறும் தம்முள மறுதலைபபட்டுவந்தமையான முரண்டொடை.

60. அடியளபெடைத்தொடை யாவதுயாது?
அடிதோறும முதலிலஅளபெடுதது ஒன்றுவது. (அதாவது) உயிரளபெடை, ஒற்றளபெடை ஆகிய இரண்டில் யாதானும் ஒன்று ஒவ்வொரு அடியிலும் வந்திருத்தல்.

(உ-ம்) ஆசிரிய வலவன்றன் பார்ப்பினோ

உஇ ரிரையுங் கொண் டஉரளைப பள்ளியுட்
டூஉந திரையலைப்பத் துஞ்சா விறைவன்றோண்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதால
ஓஒ வுழக்குந் துயர்.

---

* முரண்டொடை, விரோததொடை, பகைததொடை, இரணதொடை, மறுதலைத்தொடை என்பன ஒருபொருளன.

[அப்-போ] இப்பஃறொடை வெண்பாவில் அடிதோறும் முதற்கண் உயிரளபெடை வந்தமை காண்க.

(உ-ம்) கு-வெ. எஃஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃஃ குவார்க்கில்லை வீடு.

இவ்வாறே ஒற்றளபெடை வரும்.

61. அந்தாதித்தொடையாவது யாது?
செய்யுளில் ஓரடியின் இறுதியில் வந்த எழுத்தேனும், அசையேனும், சீரேனும்; அடியேனும் மற்றோரடிக்கு முதலாகி அடிகள்தோறும் அந்தம் ஆதியாகவருவது.

(உ-ம்) உலகுடன் விளக்கு மொளிதிக ழவிர்மதி
மதிநலங் கவற்றும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாதன
மாதனத் திருந்த திருந்தொளி யறிவனை
யாதனத் திருந்த திருந்தொளி யறிவனை
அறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்த ரீதெனப் ——
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே.

[அப்-போ] இவ்வாசிரியப்பாவில் எழுத்தும், சீரும், அடியும் ஓரடியின் அந்தம் ஓரடிக்கு ஆதியாய்வந்தமைகாண்க.

22. இரட்டைத்தொடையாவது யாது?
செய்யுளின் அடிகளில் வந்தமொழியே வருவது (அதாவது) ஒருஅடியில் முதலில்வந்த சொல்லே அந்தஅடிமுழுதும் வருதல்.

☞ இப்படி ஒருசெய்யுளில் ஓரடியிலேனும், சிலஅடியிலேனும் வரும்.

(உ-ம்) ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி யொக்குமே யொக்குங்
குளக்கொட்டிப் பூவி னிறம்.

[அப்-போ] இச்சிந்தியல் வெண்பாவில் ஒருமொழியே அடிமுழுவதும் வந்தமைகண்டு கொள்க.

63. செந்தொடையாவது யாது?

முன்சொல்லிய மோனைமுதலாகிய அடித்தொடைகளிலும், பின்வருகின்ற விகற்பத்தொடைகளிலும் யாதொன்றினும் ஒற்றுமையின்றி அவைகளினின்றும் வேறுய்வருவது.

ஆ-பா.

(உ-ம்) பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலன மகவு நாடன்——
நன்னுதற கொடிச்சி மனத்தகத்த தோனே.

[அப்-போ] மோனைமுதலாகிய தொடைகளிலும், தொடைவிகற்பங்களிலும், யாதொன்றும வந்திராமையைக் கண்டுகொள்க.

☞ இதில் சீர்களைகளும் இலக்கணமின்றியே வருதல சிறப்புடைத்து.

64. * தொடைவிகற்பமாவது யாது?

அடிமோனை, அடியியைபு, அடியெதுகை, அடிமுரண், அடியளபெடை, என்கிற ஐந்துதொடைகளும விகற்பித்து அடிகள்தோறும் சீர்களில்வருவது.

65. அது எத்தனைவகைப்படும்?

மேற்சொல்லிய மோனைமுதலாகிய ஐந்துதொடைகளில் யாதாயினும் ஒன்று நான்குசீராகிய ஓரடியில:—முதல இருசீர்க்கண்ணும்வரின் இணை என்றும், முதற சீர்க்கண்ணும் மூன்றுஞ்சீர்க்கண்ணும் வரின் பொழிப்பு என்றும், முதற்சீர்க்கண்ணும் நான்காஞ்சீர்க்கண்ணும் வரின் ஒரூஉ என்றும், ஈற்றுச்சீர்க்கண்ணின்றி மற்ற மூன்றுசீர்க்கண்ணுமவரின் கூழைஎன்றும், முத விரண்டாஞ்சீர்க்கண்ணின்றி மற்ற மூன்றுசீர்க்கண்ணும வரின் மேற்கதுவாய் என்றும், ஈற்றயற்

* விகற்பத்தொடை அடியினுள சீர்களில வருவது.

சீர்க்கண்ணின்றி மற்ற மூன்று சீர்க்கண்ணும்வரின் **கீழ்க்கதுவாய்** என்றும், நான்குசீர்க்கண்ணும்வரின் **முற்று** என்றும் **விகற்பத்தொடை** ஏழாகும்.— —இவ்வாறே ஏழுவிகற்பத் தொடைகளும் **அடித்தொடை**களை ஐந்தனோடுஞ் சம்பந்தப்பட்டு வருங்கால **விகற்பத்தொடை** முப்பத்தைந்தாகும்.

66. அடிமோனைத்தொடையோடு விகற்பத்தொடைகள் சம்பந்தப்பட்டுவருவது எவ்வாறு?

நான்கு சீராகிய ஓரடியில்:— முதலிருசீர்க்கண்ணும் மோனைவருவது **இணைமோனைத்தொடை**, முதற்சீர்க்கண்ணும் மூன்றாஞ்சீர்க் கண்ணும் வருவது **பொழிப்புமோனை**, இடையில் இரண்டுசீர் ஒழித்து முதற்சீர்க்கண்ணும் நான்காஞ்சீர்க்கண்ணும் வருவது **ஒரூஉமோனை**, இறுதிச்சீர் ஒழித்து ஏனை மூன்றுசீர்க்கண்ணும் வருவது **கூழைமோனை**, இரண்டாஞ்சீர் ஒழித்து ஏனை மூன்றுசீர்க்கண்ணும் வருவது **மேற்கதுவாய்மோனை**, மூன்றாஞ்சீர் ஒழித்து ஏனை மூன்றுசீர்க்கண்ணும் வருவது **கீழ்க்கதுவாய்மோனை**, நான்குசீர்க்கண்ணும் வருவது **முற்றுமோனை** எனப்படும்.

இணை மோனை

(உ-ம்) ஆ-பா. அணிமலர் அசோகின் றளிர்நலங் கவற்றி

பொழிப்பு மோனை

அரிக்குரற் கிண்கிணி அரற்றுஞ் சீறடி

ஒரூஉ மோனை

அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி

கூழை மோனை

அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்

மேற் கதுவாய் மோனை

அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்

கீழ்க் கதுவாய் மோனை

அவிர்மதி அனைய திருநுதல் அரிவை

முற்று மோனை

அயில்வேல் அனுக்கி அம்பலைத்து அமர்ந்த
கருங்கய னெடுங்கண் ணோக்கமென்—
றிருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே.

[அப-போ] இப்பாவின் ஏழடியிலும் * **மோனைவிகற்பம்** ஏழும் வந்தமை காண்க.

67. அடியியைபுத்தொடை விகற்பம் வருவது எவ்வாறு?

**அடியியைபுத்தொடை** (இறுதித்தொடை யாதலால அடியின் இறுதியை முதலாகக்கொண்டு) இறுதிஇரண்டுசீர்க்கண்ணும் இயைபுத்தொடைவந்தால **இணையியைபு**, நான்காஞ்சீர்க்கண்ணும் இரண்டாஞ்சீர்க்கண்ணும்வந்தால் **பொழிப்பியைபு**, இடையிருசீரொழித்து நான்காஞ்சீர்க்கண்ணும் முதற்சீர்க்கண்ணும வந்தால் **ஒரூஉவியைபு**, முதற்சீரொழித்து ஏனைமூன்றுசீர்க்கண்ணும் வந்தால் **கூழையியைபு**, மூன்றாஞ்சீரொழித்து ஏனைமூன்றுசீர்க கண்ணும்வந்தால் **மேற்கதுவாயியைபு**, முதலிரண்டாஞ்சீரொழித்து ஏனைமூன்றுசீர்க்கண்ணும் வந்தால் **கீழ்க்கதுவாயியைபு**, நான்குசீர்க்கண்ணும் வந்தால **முற்றியைபு**, என்னப்படும்.

(உ-ம்) மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே—இணை இயைபு
(ஆ-பா) மற்றத னயலே முத்துறழ் மணலே—பொழிப்பு-இயைபு
நிழலே யினியத னயலது கடலே—ஒரூஉ-இ
மாதர் நகிலே வல்லே யியலே—கூழை-இ
வில்லே நுதலே வேற்கண் கயலே—மே-கது-இ
பல்லே தளவம் பாலே சொல்லே—கீ-கது-இ
பயலே குழலே மயிலே யியலே—முற்று-இயைபு.
அதனால்
இவ்வுரு விவ்வயி னியங்கலி — — —
னெவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே.

* மோனைவிகற்பத்துக்குக் காட்டிய உதாரணச்செய்யுளின் அடிகளின் அவ்வவ்விலக்கணப் பெயரை இடைவிட்டு அவ்வச்சீர்களுக்கு மேலெழுதியிருக்குமவற்றைச் சோதித்துவாசித்துக் கொள்க.

[அப்-போ] இப்பாவில் இயைபுத்தொடை விகற்பம் ஏழும் வந்தமை காண்க.

68. எதுகைவிகற்பம்வருவது எவ்வாறு?

முதலிருசீர்க்கண்ணும் எதுகைவந்தால் **இணையெதுகை**, முதற்சீர்க்கண்ணும் மூன்றாஞ்சீர்க்கண்ணும் வந்தால் **பொழிப்பெதுகை**, முதற்சீர்க்கண்ணும் நான்காஞ்சீர்க்கண்ணும் வந்தால் **ஒரூஉஎதுகை**, நான்காஞ்சீர்க்கண்ணின்றி ஏனைமூன்று சீர்க்கண்ணும் வந்தால் **கூழைஎதுகை**, முதலயற் சீர்க்கணின்றி ஏனை மூன்றுசீர்க்கண்ணும் வந்தால் **மேற்கதுவாயெதுகை**, ஈற்றயற்சீரொழித்து ஏனை மூன்றுசீர்க்கண்ணும் வந்தால் **கீழ்க்கதுவாயெதுகை**, நான்குசீர்க்கண்ணும் வந்தால் **முற்றெதுகை**.

(உ-ம்) பொன்னி னன்ன பொறிசுணங் கேந்தி—இ-எ.

(ஆ-பா) பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி—பொ-எ.

மின்னிவ ரொளிவடந் தாங்கி மன்னிய—ஒ-எ.

நன்னிற மென்முலை மின்னிடை வருந்தி—கூ-எ

என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை—மே-க-எ.

அன்ன மென்பெடை போலப் பன்மலர்—கீ-க-எ.

கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய—முற்றெதுகை.

மயிலே சாயல் வாணுதல்— — — — —
அயில்வே லுண்கணை மறிவுதொலைத் தனவே.

[அப்-போ] இப்பாவில் இணையெதுகைமுதலிய ஏழுவிகற்பமும் வந்தமைகாண்க.

69. முரண்டொடை விகற்பம்வருவது எவ்வாறு?

முதற்சீரிலும் மூன்றாஞ்சீரிலும் வந்தால் **பொழிப்புமுரண்**, முதற்சீரிலும் நான்காஞ்சீரிலும் வந்தால

---

— இக்கோட்டுக்குறிகள் மேலெழுத்தில் அவ்விலக்கணமிருக்கிறதென்று காட்டும்.

ஒரூஉமுரண், இறுதிச்சீரொழித்து ஏனைமூன்றுசீரி லும் வந்தால் கூழைமுரண், முதலயற்சீரொழித்து ஏனை மூன்று சீரிலும் வந்தால் மேற்கதுவாய்மு ரண், ஈற்றயற்சீரொழித்து மற்றைமூன்றுசீரிலும்வந் தால் கீழ்க்கதுவாய்முரண், நான்குசீரிலும் வந் தால் முற்றுமுரண், என்னப்படும்.

(உ-ம்) சீறடிப் போக லல்கு லொல்குபு =இணை-முரண்

(ஆ-பா)
சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கி =பொ-மு
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து =ஒ-மு
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன் =கூ-மு
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும் =மே-க-மு
இருக்கையு நிலையு மேந்தெழி லியக்கமும் =கீ-க-மு
துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தெனை முனியா=முற்-முர [ண்.
தென்று மின்னண மாகுமதி ———
பொன்றிகழ் நெடுவேற போர்வல் லோயே.

[அ-போ] இப்பாவினுள் இணைமுரண்முதலிய ஏழுவிகற்ப மும் வந்தவாறுகாண்க.

70. அளபெடை விகற்பம் வருவது எவ்வாறு?

முதலிருசீரிலும் அளபெடை வந்தால் இணையளபெ டை, முதற்சீரிலும் மூன்றாஞ்சீரிலும வந்தால் பொ ழிப்புஅளபெடை, முதற்சீரிலும் நான்காஞ்சீரி லும் வந்தால் ஒரூஉஅளபெடை, இறுதிச்சீர்க்க ண் இன்றி மற்றைமூன்றுசீரிலும் வந்தால் கூழை அளபெடை, முதலயற்சீரொழித்து ஏனைமூன்றுசீ ரிலும் வந்தால்மேற்கதுவாயளபெடை, ஈற்றயற் சீர்க்கண் இன்றி ஏனைமூன்றுசீரிலும் வந்தால் கீழ்க்

கதுவாய் அளபெடை, நான்குசீரிலும் வந்தால் முற்று அளபெடை என்னப்படும்.

(உ-ம்) தாஅட் டாஅ மரைமல ருழக்கிப் = இ-அளபெடை

(ஆ-யா)

பூஉச் குவளைப் போஒ தருந்தி = பொ-அ
காஅய்ச் செந்நெல் கறித்துப் போஒய் = ஒ-அ
மாஅத் தாஉண் மோஒட் டெருமை = கூ-அ
தேஎம் புனலிடைச் சோஒர் பாஅல் = மே-க-அ
மீஇ ஞூஅர்ந் தகலுஞ் சீஇர் = கீ-க-அ
ஏஎ ஞூஅ நீஇ ணீஇர் = முற்றுஅளபெடை.
ஊரன் செய்த கேண்மை ———
ஆய்வளைத் தோளிக் கலரா ஞூவே.

[அ-போ] இதில் இணையளபெடைமுதலிய ஏழுவிகற்பமும் வந்தமைகாணக.

☞ இத்தொடை விகற்பங்களை அளவடிப்பாவிலேதான் இவ்வாறு அறியவேண்டும்.

# பாவியல்

71. பாவியல் என்பதுயாது

பாக்களின் இலக்கணத்தை [illegible]

72. பா எத்தன்மைத்து?

சத்ததாதுக்களா னமைந்து உயிர்க்கிடனாகிய உடம்பைப்போல ? எழுத்து, அசை, சீர், தளை, ஓசை, அடி, தொடை, ஆகிய ஏழுவகை உறுப்புக்களான் அமைந்து, சான்றோர்களுடைய கருத்துப்பொருட்கிடனாய இயலுந் தன்மைத்து; ஆதலின்செய்யுளெனப்பட்டது. அதுவே பஞ்சினூல்போற்றொடர்ந்து வழங்குதலால பாவென்னுந்தன்மைத்து.

73. பா எத்தனைவகைப்படும்?

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா. வஞ்சிப்பா என்னும் நான்கு வகைப்பாவுடன் (இனமில்லாத) மருட்பாவையுஞ் சேர்க்கப்பா ஐந்துவகைப்படும்.

74. வெண்பா எத்தன்மைத்து?

வெண்சீர்வெண்டளை, இயற்சீர் வெண்டளை தட்டு அளவடியுடைத்தாய், ஈற்றடி சிந்தடியாய் வரப்பெற்று, செப்பலோசை யமைந்து நாள், மலர்என்னும் வாய்பாடுகளாலும் (ஈரசையானாகிய) காசு, பிறப்பு என்னும வாய்பாடுகளாலும் முடிந்து, அந்தணக்குழூஉக் குரிமையாந் தன்மைத்து.

75. வெண்பா எத்தனைவகைப்படும்?

குறள்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசைவெண்பா, பஃறொடைவெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச்சிந்தியல்வெண்பா ஆகிய ஆறனோடு (சவலைவெண்பாவையுஞ்)சேர்க்க எழுவகைப்படும்.

இந்தவெண்பாக்களெல்லாம்எந்த அடியால்வரும்?

உறுப்பியல் அடியிலக்கணத்திற் கூறியவாறே நான்கு சீரடியாகிய அளவடிப்பதால்வரும்; அன்றியும் எல்லா வெண்பாவிற்கும் ஈற்றடி முச்சீரடியாகிய சிந்தடியேவரும்

77. வெண்பாககள் என்னவாய்பாட்டால் முடிவுபெறும்?

ஈற்றடியாகிய சிந்தடியின் இறுதிச்சீர் நேரசை, நிரையசை ஆகிய ஓரசைச்சீர்கள் வநது நாள், மலர் என்னும வாய்பாட்டு முடிவைப்பெறும. அன்றியும் நேர்நோ ஆகிய இரண்டசைச்சீவநதால காசு என்றும, நிரை நோ ஆகிய இரண்டசைசசீர் வந்தால பிறப்பு என்றும் வாய்பாடுபெற்று முடிவுபெறும்.

☞ காசு, பிறப்பு என்னும் இரண்டசைச்சீர்கள் குற்றுகர இறுதியும், அருகி முற்றுகர இறுதியுமே பெற்றுவரும். வேறிறுதிபெறா.

இவைகளுக்கு உதாரணம் பின்வரும் உதாரணவெண்பாக்களில் காண்க.

78. குறள்வெண்பா என்பதுயாது?

இரண்டடியாய்வருவது குறள்வெண்பா. அது முதலடி அளவடியாய் ஈற்றடி சிந்தடியாய், ஈற்றடிஇறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாயபாடுகளில் ஒன்றுன்முடிந்து; அடிதொடை ஒருதன்மையாவேனும் இருதன்மையாவேனும பெற்றுவரும்.

(உ-ம்) அகர, முதல, வெழுத்தெல்லா, மாதி
பகவன், முதற்றே, யுலகு.

[அ-போ] இக்குறள்வெண்பா இரண்டடியாய் முதலடி அளவடியாயும் ஈறறடி சிநதடியாயும எதுகைத்தொடை ஒருவிகற்பமபெறறு நிரைநோாகிய பிறப்புஎனனும் வாய்பாட்டான முடிநதது.

(ஷ) நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதி
பின்னீர பேதையர் நட்பு.

[அ-போ] இக்குறள்வெண்பா எதுகைத்தொடை யிருவிகற்பம்பெற்று நேர் நேர் ஆகிய காசு என்னும் வாய்பாட்டான் முடிந்தது.

79. நேரிசைவெண்பாஎன்பது யாது?

இரண்டுகுறளவெண்பாஇணைந்து, இடையில முதலடிக்கேற்ற எதுகையமைந்த தனிசசொற்பெற்று, முன்னிரண்டடி ஒரொதுகை பின்னிரண்டி ஒரொதுகையாவேனும், நான்கடியும் ஒருவிகற்ப எதுகையாவேனும் பெற்று, முன்சொல்லிய வெண்பாவிலக்கணங்க ளெல்லா மமைந்துவருவது.

(உ-ம்) சேவற் கொடியுந் திருக்கரத்துச் செவ்வேலும
A. K. மேவக் கொடுமறலி வெருவிடுமா - லாவலொடு
மெங்குலத்தைக் காக்குமுரு கேசா விமையாதார்
தங்குலத்தைக் காத்திடுமுன் றன்.

[அ-போ] இவ்விருகுறணேரிசை வெண்பா இரண்டுகுற ளிணைந்து இடையில்முதற் றொடைக்கேற்ற தனிச்சொலலால அடிநிரம்பி, இருதளையும் விரவி ஒழுகிசைச் செப்பலோசை பெற்று, இருவிகற்பத்தொடை யமைந்து, ஈற்றடி சிந்தடியாய் நாள் என்னும் வாய்பாட்டால் முடிந்தது.

(ஷ) திருமுடிமேற கண்ணியு மாலையும் பாம்பு
திருமார்பி லாரமும் பாம்பு - பெருமான
திருவரையிற கட்டிய கச்சையும பாமபு
பொருபுயத்திற கஙகணமும் பாம்பு.

[அ-போ] இவ்விருகுற ணேரிசை வெண்பா மேற சொல்லிய வாறே எல்லாமமைந்து ஒருவிகற்பத்தொடை பெற்று காசு என்னும வாய் பாட்டான் முடிந்தது.

80 இந்த நேரிசைவெணபாவில் * ஆசுவருதலுமுண்டோ?

---

* பற்றப்படாத உலோகங்களை பற்றுதற்கு இடையே நேரபபடும் 'பொடி' என்னுமபற்றுசுபோல ? இரணடாமடி இறுதியுந் தனிச்சீரும் பிளவுபட்டு விட்டிசைக்காமல பொருந்தி இசைக்க நேருதலால் 'ஆசு' எனபது உவமகாரணப்பெயர்.

முதற்குறட்பாவுக்கும் தனிச்சீருக்கும் இடையே (ஓசை நிரம்புதற்காக) ஓரசையேனும் இரண்டசையேனும் வரும். ஓரசைவந்தால் ஓராசிடை நேரிசை வெண்பா என்றும், இரண்டசைவந்தால் ஈராசிடை நேரிசைவெண்பா என்றும் சொல்வார்கள்.

(உ-ம்) எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேநஞ் சோணேச-ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்தண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.

[அ-போ] இவ்வெண்பாவில் இரண்டாமடி மூன்றுஞ்சீரில் ணேசர் என்னும் இரண்டசைகள்வந்து தனிச்சொல்லோடிசைநிரம்பி ஈராசிடை நேரிசைவெண்பா ஆயினமை காண்க. மற்றதுமிவ்வாறேவரும்.

81. இன்னிசை வெண்பா எவ்வாறுவரும்?

நான்கடியாய்த் தனிச்சொல் இன்றி தொடைஒருவிகற்பத்தானும் பலவிகற்பத்தானும் வரும்.

(உ-ம்) துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.

[அ-போ] இவ்வின்னிசைவெண்பா நான்கடியாய் தனிச்சொலின்றி தொடை ஒருவிகற்பம் பெற்றுவந்தது.

(ஷ) பிச்சைபுக் காயினுங் கற்றன் மிகவினிதே
கற்றவை கைகொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தோர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவு மேலாயார்ச் சேர்வு.

[அ-போ] இவ்வின்னிசை வெண்பா நான்கடியாய் தனிச்சொலின்றி தொடை பலவிகற்பம் பெற்றுவந்தது.

82. இன்னிசைவெண்பாவேறுவிதமாய்வருவனவுமுண்டோ?

நான்கடியாய் இரண்டாமடியிற் றனிச்சொற் பெற்று தொடை பலவிகற்பமாகியும், மூன்றுமடியிற் றனிச்சொற்பெற்று ஒருவிகற்பம் பலவிகற்பமாகியும், அடி

தோறும் ஒரூஉத்தொடை பெற்றும், அடிதோறும் விட்டிசைத்துத் தனிச்சொற்பெற்றுப் பலவிகற்பமாகியும், இன்னிசை வெண்பாககளாய் வருவனவும் உண்டு. (நேரிசைவெண்பா சிறிதுவழுவினும் இன்னிசையாம்.)

(உ-ம்) கொன்றைச் சடிலங் குலுங்க மதிதயங்கக்
A. K. கங்கைத் திவலை கறங்கியெழ - வங்கைகொண்ட
மான்கதற மீது மழுவிதிர வைகதொழில் கொண்
டாடுமவ னம்பலத்து ளான்.

[அ-போ] இவ்வின்னிசை வெண்பா இரண்டாமடியில் தனிச்சொற்பெற்றுப் பலவிகற்பத்தான் வந்தது.

(ஷ) இன்றுமை வேண்டி னிரவொழிக - விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக - தன்னோடு
செல்வது வேண்டி னறஞ்செய்க - வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

[அ-போ] இதுஅடிதோறும் தனிச்சொற்பெற்று வந்த இன்னிசைவெண்பா.

(ஷ) மழையின்றி மாநிலத்தார்க் கில்லை 'மழையும்
தவமுடையா ரிலவழி யில்லைத் 'தவமும்
அரசுடையா னில்வழி யில்லை 'யரசனும
இல்வாழ்வா ரில்வழி யில்.

[அ-போ] இஃதடிதோறும் ஒரூஉத்தொடை பெற்றுவந்த இன்னிசைவெண்பா. (மற்றவையும் வந்துழிக்காண்க)

83. பஃறொடைவெண்பா யாது?

வெண்பாவிற்குரிய இலக்கணங்க ளெல்லாமமைந்து நான்கடியின் மிககுளனைத்தடியானும நிரம்பி ஒருவிகற்பத்தானும் பலவிகற்பத்தானும் வருவது. (ஒரூஉத்தொடை பெற்றுவருதலும், இடையிடையே தனிச சொற்பெற்று வருதலுமுண்டு.)

(உ-ம்) சேற்றுக்கா னிலஞ் செருவென்ற வேந்தன்வேல
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்
தோற்றந் தொழில்வடிவு தம்முட் டடுமாற்றம்

வேற்றுமை யின்றியே யொத்தன மாவேடர்
ஆற்றுக்கா லாட்டியர் கண்..

[அ-போ] இஃது ஐந்தடியான் வந்த ஒருவிகற்பப்பஃறொடை வெண்பா.

(ஷை) வையக மெல்லாங் கழனியா 'வையகத்துச்
செய்யகமே நாற்றிசையிற் றேயங்கள் 'செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு 'வான்கரும்பின
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் 'சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் 'கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம்.

[அ-போ] இஃ தேழடியான் வந்த பலவிகற்பப் பஃறொடைவெண்பா

(ஏழடியின்மிக்கு வருவனவந்தவிடத்துக் கண்டுகொள்க.)

84. நேரிசைச்சிந்தியல்வெண்பா யாது?

நேரிசை வெண்பாவேபோல இரண்டாமடியி னிறுதி தனிச்சொல்பெற்று மூன்றடியாய் ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வருவன.

(உ-ம்) அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வ னுரைப்ப - சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு.

[அ-போ] இஃது இரண்டாமடியிற் றனிச்சொற்பெற்று ஒருவிகற்பத்தான்வந்த நேரிசைச்சிந்தியல் வெண்பா.

(ஷை) நற்கொற்ற வாயி லறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றம்வண் டார்ப்பப் புடைத்தாளே-பொற்றேரான்
பாலைநல் வாயின் மகள்.

[அ-போ] இஃதிரண்டாமடியிற் றனிச்சொற்பெற்றுஇருவிகற்பத்தான வநத நேரிசைச் சிந்தியல்வெண்பா.

85. இன்னிசைச்சிந்தியல்வெண்பா யாது?

இன்னிசைவெண்பாவேபோலத் தனிச்சொலின்றி மூன்றடியாய் ஒருவிகற்பத்தானும் பலவிகறபத்தானும்வருவன.

(உ-ம்) நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரில்
அறநாட்டுப் பெண்டி ரடி.

[அ-போ] இஃது தனிச்சொல்லின்றி ஒருவிகற்பத்தான் வந்த இன்னிசைச்சிந்தியல் வெண்பா.

(ஷை) சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்தும் முயற்கு நிலையுமாங்
கானக நாடன் சுனை.

[அ-போ] இஃது தனிச்சொல் லின்றிப்பலவிகற்பத்தொடை யானவந்த இன்னிசைச்சிந்தியல் வெண்பா.

86. சவலைவெண்பா எவ்வாறுவரும்?

இரண்டுகுறட்பா இணைந்து தனிச்சொல் இன்றி நான்கடியாய் தொடை ஒருவிகற்பமேனும் இருவிகற்பமேனும் பெற்றுவரும்.

(உ-ம்) அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவின்றி
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர் — — — —
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

[அ-போ] இஃது இரண்டுகுறட்பா இணைந்து தனிச்சொல்லின்றி நான்கடியாய் தொடை ஒருவிகற்பம் பெற்றுவந்த சவலைவெண்பா.

(ஷை) இனிமன்ம தாசலமே னெங்கேனும் போய்வில்
குனிமன்ம தாசலத்தின் கும்பந — — — —
தங்கம் புயத்தார்தந் தார்சேட வெற்பருந்தி
தங்கம் புயத்தார்தந் தார்.

[அ-போ] இஃது தனிச்சொல் இன்றி இருகுறளாய் இருவிகற்பத்தொடை பெற்றுவந்த சவலைவெண்பா.

# ஆசிரியப்பா.

87. ஆசிரியப்பா எத்தன்மைத்து?

அகவலோசையோடு அளவடித்தாய், இயற்சீர்பயின்றும், அயற்சீர் விரவியும், தன்றளைதழுவியும், பிறதளைமயங்கியும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் வருதலின்றி, மூன்றடியே சிறுமைத்தாய், பாடுவோரது கருத்தளவு பெருமைத்தாய் அரசக்கு மூஉக்குரியதாந் தன்மைத்து.

88. ஆசிரியப்பா எத்தனைவகைப்படும்?

நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டிலவாசிரியப்பா, அடிமறிமண்டில வாசிரியப்பா, என நான்கு வகைப்படும்.

89. நேரிசையாசிரியப்பாஎன்பது யாது?

எல்லாஅடிகளும் அளவடியாய் ஈற்றடியின் அயலடிமாத்திரம் சிந்தடியாகப்பெற்று, மூன்றடிமுதல் எத்தனையடிகளானும் வருவது.

(உ-ம்) - நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற குறிஞ்சிப் பூக்கொண்டு - - - -
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

[அ-போ] இது ஈற்றயலடி முச்சீராய் வநதமையால் நேரிசையாசிரியப்பா.

90. இணைக்குறளாசிரியப்பா யாது?

ஆதியடியும்அந்தவடியும் அளவடியாய், இடை அடிகளில் இரண்டேனும் பலவேனும் குறளடி யானும், சிந்தடி யானும் வருவன.

(உ-ம்) - நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து ——
தீரத் தீர்ந்து ——

சார ருடன் கேண்மை ——
சாரச் சாரச் சார்ந்து ——
தீரத் தீரத் தீர்பொல் லாதே.

[அ-போ] இது முதலடியும் கடையடியும் நாற்சீரடியாய் இடையடிகள் இருசீரடி முச்சீரடியாய்வந்த இணைக்குறளாசிரியப்பா.

91. நிலைமண்டில ஆசிரியப்பா யாது?

எல்லா அடியும் அளவடியாய்த் தம்முள் அளவொத்து வருவது.

(இதுவும் மூன்றடிமுதல் எனைத்தடியானும் வரும்)

(உ-ம்) கடம்பணி தொடையன் மிடைந்த தடந்தோள்
A.K. வன்றிற லெஃக மேந்திய வல்வன்
கொன்றையஞ் சடிலற் காசான் மன்ற
வீட்டின் பிறுக்கொரு வித்தென மறைகள்
காட்டுமெய்ஞ் ஞானக் கதிர்மணி யவன்றாள்
பற்றின ரின்பம் பற்றின ரல்லோர்
பற்றினர் பையுட் பற்றீ தென்னே.

[அ-போ] இது எல்லா அடிகளும் தம்முள் ஒத்துஅளவடியால் வந்தமையால் நிலைமண்டில ஆசிரியப்பா.

92. அடிமறிமண்டில ஆசிரியப்பாயாது?

அளவடிகள் மூன்றுமுதல் எத்தனை அடிகளானும் முடிந்து, எல்லா அடிகளையும் முதலாகவும், ஈறாகவும், நடுவாகவும்வைத்துவழங்கினும் ஓசையும் பொருளுங் கெடாதுவருவது.

(உ-ம்) தீர்த்த மென்பதுஞ் சிவகங் கையே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே
ஏத்த ருந்தல மெழிற்புலி யூரே.

[அ-போ] இதில் எந்த அடியை முதலாக இறுதியாக நடுவாக வைத்துவழங்கினும் ஓசையும் பொருளுங்கெடாது; ஆதலால்அடிமறிமண்டில ஆசிரியப்பா.

93. இவ்வாசிரியப்பாக்கள் என்ன இறுதியைப்பெறும்?

ஆ, ஈ, ஏ, ஓ, என்னே என்கிற அசைகளை இறுதியாகப் பெறுமாயினும், நிலைமண்டில ஆசிரியப்பா என்னே

என்கிற இறுதியும், மற்றைப்பாக்கள் 'ஏ' இறுதியும் பெறுவதுசிறப்பு.

## கலிப்பா.

94. கலிப்பா எத்தன்மைத்து ?

நேர் ஈற்று இயற்சீரும் நிரைநடுவாகிய வஞ்சிவுரிச்சீரும் வராது நிரை முதலாகியவெண்பா வுரிச்சீர் மிக்குக் கலித்தளையும் அயற்றளையுந் தட்டுத் துள்ளலோசை யமைந்து அளவடித்தாய், தரவு தாழிசை என்னும் முதலுறுப்பும், அராகம் அம்போதரங்கம் என்னுந் துணையுறுப்பும், தனிச்சொல் என்னும் இடையுறுப்பும்; சுரிதகம் என்னும் முடிவுறுப்பும் உடைத்தாய் வைசியக்குழூஉக்குரித்தாந் தன்மைத்து.

95. கலிப்பா எத்தனைவகைப்படும் ?

ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச்சகக்கலி என்கிறமூன்றனோடு (கட்டளைக்கலியுஞ்) சேர்க்கக் கலிப்பா நான்குவகைப்படும்.

96. ஒத்தாழிசைக்கலிப்பா எத்தனைவகைப்படும் ?

நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா, என மூன்றுவகைப்படும்.

97. நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பாயாது ?

முன் ஒரு * தரவுவந்து அதன்பின் மூன்று † தாழிசை வந்து அதன்பின் ஒரு ‡ தனிச்சொல்வந்து அதன்பின் (ஆசிரியத்தாலாவது வெண்பாவாலாவது) ஒரு ¶ சுரிதகவுறுப்புப் பெற்றுவருவது.

---

* தரவு, எருத்தம், முதலுறுப்புஎன்பனஒருபொருளன † தாழிசை = இடைநிலைப்பாட்டு ‡ தனிச்சொல் = விட்டிசை-கூன்-தனிநிலை ¶ சுரிதகம் = மடக்கியல்-வாரம்-வைப்பு-போக்கியல்.

(உ-ம்)
(இது தரவு)

வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றுய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துனபங்கூர் பசப்பினவாய்ப்
பூணெடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ;

(இவை மூன்றும் தாழிசைகள்)

'சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே.

'சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே.

'சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே யென்பவாற்
புலம்படைந்த நலந்தொலையப் போவாரோ பொருளிலரோ;

' தனிச்சொல் இது—'எனவாங்கு;

(இது ஆசிரியச் சுரிதகம்)

அருளெனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர் ———
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே.

[அப்-போ] இது தரவு மூன்றடியாய் தாழிசை மூன்று மிரண்டடியாய்த் தனிச்சொல் பெற்று மூன்றடி நேரிசை ஆசிரியச்சுரிதகத்தால் முடிந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா. (வெண்பாச்சுரிதகத்தால் வருவதுமிவ்வாறே.)

98. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாயாது?

நாற்சீரடியும், முச்சீரடியும், இருசீரடியும் ஆகிய அசையடிகளென்னும் ☞ அம்போதரங்க உறுப்பைத் தாழிசைக்கும் தனிச்சொல்லுக்கும் இடையிற் கொண்டு தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஐந்துறுப்புமுடைய தாகிவருவது அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பா.

☞ அவ்வசையடிகள் நாற்சீரடி இரண்டடியால் ஒன்றும், ஓரடியால் இரண்டும்; முச்சீரடி நான்கும்; இருசீரடிஎட்டும் ஆகிவரப்பெறினும்: நாற்சீர்இரண்டடியால் இரண்டும், ஓரடியால

---

அம்போதரங்கம்—அசையடி-பிரிந்திசைக்குறள்-சொற்சீரடி.

☞ நாற்சீரடி முச்சீரடி இருசீரடி ஆகிய அசையடிகள் "நீரின்கண் அலைகள் கரைசாரச்சார முறைமுறையே சுருங்கிவருகின்றதன்மைபோல" தனிச்சொல்லைச் சாரச்சார முறையாகக்குறைந்துவருதலால் அவைகளுக்கு அம்போதரங்கம் என்று உவம காரணப்பெயராய்ப் போந்தது.

நான்கும்; முச்சீரடியால் எட்டும், இருசீரடியால் பதினாறு மாகிவருதல் சிறப்பாம். (அவ்வகையடிகளை முறையே பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண் என்றுபேரிட்டுவழங்குவதுமுண்டு.)

(உ-ம்) இவை இரண்டு தரவு.

கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழலவிர் சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்,

தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்;

இவை மூன்று தாழிசை.

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறுப்புண் டுயர்ந்தவர் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ,

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணாதா ருடம்பொடு மறம்பிதிர வெதிர்கலங்கிச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ,

படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்துதிறம் வேறாக
ஏறுமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ;

இவை நாற்சீர் இரண்டடி இரண்டம்போதரங்கம், பேரெண்.

'இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கையின் மாஅ னின்னிறம்,

'விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை;

இவை ஓரடி நான்கம்போதரங்கம் அளவெண்.

'கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை'
'தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை'
'ஒலியிய லுவண மோங்கிய கொடியினை'
'வலிமிகு சகட மாற்றிய வடியினை;'

இவைமுச்சீரோரடி நான்கம்போதரங்கம், இடையெண்.

'போரவுணர்க் கடந்தோய் நீஇ'
'புணர்மருதம் பிளந்தோய் நீஇ'
'நீரகல மளந்தோய் நீஇ'
'நிழறிகழைம் படையோய் நீஇ'

| | | | | |
|---|---|---|---|---|
| இவை இருசீர் ஓரடி எட்டம்போதரங்கம், சிற்றெண். | 1. ஊழி | நீஇ | 5. ஆழி | நீஇ |
| | 2. உலகு | நீஇ | 6. அருளு | நீஇ |
| | 3. உருவு | நீஇ | 7. அறமு | நீஇ |
| | 4. அருவு | நீஇ | 8. மறமு | நீஇ |

(தனிச்சொல் இது—எனவாங்கு;)

இது நிலைமண்டில ஆசிரியச் சுரிதகம்.

அடுதிற லொருவனிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரி
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்று முதிர்கட லுலக முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே.

[அ-போ] இது மூன்றடித்தரவு இரண்டும், நான்கடித்தாழிசைமூன்றும், பேரெண் அளவெண் இடையெண் சிற்றெண் ஆகியநான்கு அம்போதரங்கமும், தனிச்சொல்லும், சுரிதகமும் ஆகிய ஐந்துறுப்புங் கொண்டுமுடிந்தமையால் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.

98. **வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாயாது?**

அம்போதரங்க வுறுப்பிற்கும் தாழிசைக்கும் இடையே அராகவுறுப்புப்பெற்று தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம், என்னும் ஆறுறுப்பையுங்கொண்டுமுடிவது. (அராகவுறுப்பு அளவடிமுதலிய எல்லா அடிகளாலும் நான்கடியிற் குறையாதும் எட்டடியின் மிகாதும் வரும்).

(உ - ம்) இதுதரவு.

விளங்குமணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமலர் நறும்பைந்தார்ப்
பருஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றுங்
குருஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து முன்னாட்கண்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கு மெல்லார்க்குந்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள்;

இவைமூன்றுந் தாழிசை.

'காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியார்க் கறியாத மரபொத்தாய் கரவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
அணிநலந் தனியேவந் தருளுவது மருளாமோ'

'அன்பினா லமிழ்தனைஇ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணாகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத் தமியையாக்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ'

'பாங்கனையே வாயிலாப் பல்காலும் வந்தொழுகுந்
தேங்காத கரவினையுந் தெளியாத விருளிடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியை
தடமலர்த்தா ரருளுநின் றகுதியுந் தகுதியோ; [யாத்

இவைநான்கும் அராகம்.

'தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை தழலென விரிவனபொழில்'
'போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு கருநெய்தல் விரிவன கழி'
'தீதுறு திறமறு கெனநனி முனிவன துணையொடு பிணைவன துறை'
'மோதுறு மொலிகலி நுரைதரு திரையொடு கடிதொடர் புடைய
[துகடல்;

இவைநாற்சீரிரண்டடிப் பேரம்போதரங்கம்.

'கொடுந்திற லுடையன சுறவேறு கோட்பதனால்
இடுங்கழி யிராவருதல் வேண்டாவென் றிசைத்திலமோ'
'கருநிறத் துறுதொழிற் கராம்பெரி துடைமையால்
இருணிறத் தொருகானி விரவார வென்றிலமோ'

இவைநாற்சீரோரடி நான்கு அம்போதரங்கம்.

'நாணொடு கழிந்தன்றாற் பெண்ணரசி நலத்தகையே'
'துஞ்சலுமொழிந்தன்றாற் றொடித்தோளி தடங்கண்ணே'
'அறற்றொடு கழிந்தன்று லாரிருளு மாயிழைக்கே'
'நயப்பொடு கழிந்தன்று னனவது நன்னுதற்கே'

இவைமுச்சீரோரடி எட்டம்போதரங்கம்.

அத்திரத்தா லசைந்தன தோள்,
அலர்தற்கு மெலிந்தன கண்,
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம்,
பொன்னிறத்தாற் போர்த்தன முலை,
அழலினா லசைந்தது நகை,
அணியினா லொசிந்த திடை,
குழலினா னிமிர்ந்தது முடி,
குறையினாற் கோடிற்று நிறை,

இவை இருசீரோரடிப் பதினாறு அம்போதரங்கம்.

1. உட்கொண்ட தகைத்தொருபால்,
2. உலகறிந்த வலத்தொருபால்,
3. கட்கொண்ட றுனிததொருபால,
4. கழிவெய்தும் படித்தொருபால்,
5. பரிவுறூஉந் தகைததொருபால்,
6. படிவுறூஉம் பசப்பொருபால்,
7. இரவுறூஉந் துயரொருபால்,
8. இளிவந்த வெளிற்றொருபால்,
9. மெலிவுறூஉந் தகையொருபால்,
10. விளர்ப்புவந் தடைந்தொருபால்,
11. பொலிவுசென் றகன்றொருபால்,
12. பொறைவந்து கூர்ந்தொருபால்,
13. காதலிற் கதிர்பபொருபால்,
14. கப்படாத் துயரொருபால்,
15. ஏதில்சென் றணைந்தொருபால்,
16. இயனுணிற் செறிவொருபால்;

தனிச்சொல் இது 'எனவாங்கு;

இது நேரிசை ஆசிரியச் சுரிதகம்.

இன்னதிவ் வழக்க மித்திற மிவணல
மென்னவு முன்னாட் டுன்னு யாகிற்
கலந்தவ ணிலைமை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇய தளையவிழ் கோதையை
கற்பொடு காணிய யாமே ——
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே.

[அ-போ] இது தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்புங்குறைவின்றி வாத மையால் வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா.

99. வெண்கலிப்பாஎன்பது யாது?

கலித்தளை நிரைந்து கலியோசை தழுவியாயினும், வெண்டளை நிரைந்து வெள்ளோசை தழுவியாயினும், நான் கடிமுதல் எத்தனையடியாயினும் வந்து ஈற்றடி சிந்தடியாய் முடிவது (இது பிறதளைவிரவிவரினும் வழுவன்று. அன்றியும் இடையிடையே தனிச்சொல் பெற்று வருதலுமுண்டு.)

(உ-ம்) வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளாாநத பூணுகங் குழைபுரளக் கோட்டெருத்தின்

மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையான்
மனையறமுந் துறவறமும் மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைத்த
தொன்மைசால் கழிகுணத்தெந் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு.

[அ-போ] இது கலித்தளையும் வெண்டளையும் அயற்றளையும் விரவி துள்ளலோசையான் ஈற்றடிசிந்தடியாய் வந்தமையால் வெண்கலிப்பா. (கலிவெண்பாஎனினும் பொருந்தும்)

(இடையிடையே தனிச்சொற்பெற்றுவருங் கலிவெண்பாவை உலா, தூது, மடல், முதலிய பிரபந்தங்களில் காண்க. பஃறொடை வெண்பாவி னின்றும் இக்கலிவெண்பாவுக்கு வித்தியாசம் துள்ளலோசைப்படுதலும் பிறதளைவிரவுதலுமேயாம்.)

100. கொச்சகக்கலிப்பா எத்தனைவகைப்படும்?

தரவுக்கொச்சகக் கலிப்பா, தரவிணைக் கொச்சகக்கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா என ஐந்துவகைப்படும்.

101. தரவுக்கொச்சகக் கலிப்பாயாது?

கலிப்பாவுக்குரிய மற்ற வுறுப்புக ளெல்லாமின்றி ஒரு தரவுமாத்திரம் வருவது. (இதுநான்கடியேயன்றி மூன்றடி யானும் ஐந்தடியானும் வரும்.)

(உ-ம்) செம்மாந்து தற்புகழுந் தேவர்குழு வும்மருள
வெம்மான் பிறன்போ லிருந்தோர் தரும்புரிஇ
யம்மாதன் செய்கை யனைத்துமெனக் காட்டினனே
நம்மானு முற்றுஞ் சிலவென்கை நாணன்றே.

[அ-போ] இது கலிக்குரிய மற்றை யுறுப்புகளின்றி ஒருதரவுமாத்திரம் வந்தமையால் நான்கடித்தரவுக் கொச்சகக்கலிப்பா

(ஷை) ஈசன் பசுவாகி யேமனிளங் கன்றாகி

வீசுபுக ழாரூரின் வீதிவந்தா ரம்மானே
வீசுபுக ழாரூரின் வீதிவந்தா ராமாகில்
காசளவு பாலுங் கறவாதோ வம்மானே
கன்றையுதை காலீ கறவாதே யம்மானே,

[அ-போ] இதுவும் அவ்வாறே வந்தமையால் ஐந்தடித்தரவுக்கொச்சகக்கலிப்பா. (மூன்றடியான் வருவது மிவ்வாறே.)

102. தரவிணைக்கொச்சகக்கலிப்பா யாது?

இரண்டுதரவு மாத்திரம் வருவது தரவிணைக்கொச்சகக் கலிப்பா. (இது தனிச்சொல் சுரிதகத்துடனும் வரும்.)

(உ-ம்) வடிபடுவெல் வேறிகழு மதரரிய நெடுந்தடங்கட்
**A. K.** கடிபடுதண் டார்விரவுங் கரியகுழற் குறவர்குலக் [ன்னே,
கொடிபுணர்ந்தான் விறற்சேவற் கொடிபுணர்ந்தா னீதெ
ஒழிவினெடுந் தவநெறிகூர்ந் துயங்கியதா லஞ்ஞான்று
மிடிபடுநுண் ணிடைதயங்கு மின்னுரை மணத்துமென்னும்
படிபடுநீ ளருண்முறையாற் பயிலுமண மாமன்றே.

[அ-போ] இதுமூன்றடி இரண்டுதரவு ஒருபொருளில் வந்தமையால் தரவிணைக்கொச்சகக்கலிப்பா.

(உ-ம்) இது தரவு.
வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனும்
கொடிபடு மணிமாடக் கூடலார் கோமானே,

தனிச்சொல்இது—எனவாங்கு,

இது தரவு
துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் தொடர்ப்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமேலி துவிதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே,

தனிச்சொல் இது—அதனால்,

இதுசுரிதகம்.
செவ்வாய்ப் பேதை யிவடிறத் ——
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே.

[அ-போ] இது இடையிடையே தனிச்சொற்பெற்று ஆசிரியச்சுரிதகத்தான் முடிவுபெற்ற தரவிணைக்கொச்சகக்கலிப்பா.

103. சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா யாது?

ஒருதரவும், சிலதாழிசையும் வந்து, தனிச்சொல் சுரிதகத்துடன் முடிவது.

(உ-ம்) இது தரவு.

பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே,

தனிச்சொல் இது—ஆங்கொருசார்,

முதற்றாழிசை.
உச்சியார்க் கிறைவனா யுலகமெலாங் காத்தளிக்கும்.
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனைப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே,

தனிச்சொல் இது—ஆங்கொருசார்,

இரண்டாம் தாழிசை.
அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனைப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்ந்தனரே,

தனிச்சொல் இது—ஆங்கொருசார்,

மூன்றாந்தாழிசை.
மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செ[ய்
கோலகொண்ட சேவலங் கொடியவனைப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே,

தனிச்சொல் இது—அஃதான்று,

சுரிதகம்.
கொடித்தேர்த் தோன்றல் கொற்கைக் கோமான்
நின்புக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.

[அ-போ] இது நான்கடித்தரவு ஒன்றும் மூன்றடித்தாழிசை மூன்றும் சுரிதகமுமாய், இடையிடையே தனிச்சொல்பெற்று, நேரிசை ஒத்தாழிசைக்கலியில் சிறிதுமாறுபட்டுவந்தமையால் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா. (இஃது தரவு, தனிச்சொல், சுரிதகம் இன்றிவருவதுமுண்டு.)

104. பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா யாது?

பலதாழிசை வருவது பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

(உ-ம்) தரவு.
தண்மதியோர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடைநிறையு முடன்றளர முன்னாட்கண்
கண்மதியொப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ;

இரண்டடித் தாழிசை.

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற் றாழ்குழ றழர்வாளோ,
தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ,
அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசோடு மடிவாளோ,
நாம்பிரியோ மினியென்று நறுநுதலைப் பிரிவாயே [மோ,
லோம்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதா
குன்றளித்த திரடோளாய் கொய்புனத்திற் கூடியநா
ளன்றளித்த வருண்மொழியா லருளுவது மருளாமோ,
சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ;

தனிச்சொல் இது—எனவாங்கு;

சுரிதகம்.

அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே,—அதனால்
விழுமிய தறிமதி வாழி ———
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே.

அ-போ. இது நான்கடித்தரவு ஒன்றும், இரண்டடித்தாழிசை ஆறும், தனிச்சொல்லும், சுரிதகமும் பெற்றுவந்த பஃறாழிசைக்கொச்சகக் கலிப்பா. (இதுதரவுதனிச்சொல்சுரிதகம் இன்றி வருதலுமுண்டு. அது பராபரக்கண்ணி, மனோன்மணிக்கண்ணி முதலியவற்றிலும், பரணி, திக்குவிசயம், முதலிய பிரபந்தங்களிலுங் காண்க.)

105. * மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாயாது?

தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்பும் பெற்று, முறைமாறிப் பலதரவு வந்தும், பலதாழிசைவந்தும், இவைகள் இடமாறிவந்தும், இடையிடையேதனிச்சொற்பெற்று வந்தும், கலிப்பாவுக்குரிய உறுப்புவரையறையின்றியும், விலக்கப்பட்டசீர் தளைகளும், ஐஞ்சீரடியும் பெற்றும்

* மயங்கிசைக்கொச்சகக் கலிப்பாவை கொச்சக ஒருபோகு என்றும், ஒருபோகுக்கொச்சகக்கலிப்பா என்றும் சொல்வதுமுண்டு.

வருவது. (இதற்குதாரணம் பெருநூல் களிலும், கலம் பகங் களிலுங் காண்க.)

106. † கட்டளைக்கலிப்பா எத்தனைவகைப்படும்?

நேரசைக்கட்டளைக்கலிப்பா, நிரையசைக்கட்டளைக்கலிப் பா என இருவகைப்படும்.

☞ அவைகள் மாச்சீரையே முதலாகக்கொண்டு வரு நாற்சீரடிஒன்று அரையடியாய், அது இரட்டித்து ஓரடியாய், அப்படிப்பட்ட நான்கடிகள் தம்முள் அளவொத்துவரும்.—நேரசையை முதலாகவுடைய செய்யுளின் அரையடியில் ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யும் பதினேரெழுத்துகள் வரும்.—அதற்குநேரசைக்கட்டளைக்கலிப்பா என்றும், நிரையசையை முதலாக வுடையசெய்யுளின் அரையடியில் பன்னிரண்டெழுத்துகள்வரும்.—அதற்குநிரையசைக் கட்டளைக்கலிப்பா என்றுஞ்சொல்லப்படும்.

(உ-ம்)
**A. K.**

கொங்கை, மாரத, கும்பங், கொடியிடை—கோல, மாமயில் சாயல், கனிமொழி;

மங்கை, மாரத, னுச்சரத், தான்மிக—வாடி, ஞளன், மயல்கொண்டு, சூழ்ந்திடு;

நங்கை, மாரத, னுக்கென்ன, செய்குவார்—நாத னேயணைந் தாளருட், பன்னிரு;

செங்கை, மாரத, மாமயின், மேல்வரு—சேந்த, னேகுஞ், சரிமகிழ், காந்தனே.

[வ-போ] இது நேரசைமுதலாய், நாற்சீராகிய அரையடிக்குப் பதினேரொழுத்துவந்து இரட்டித்து, எட்டுஅரையடியாகிய நான்கடிகளான்முடிந்த நேரசைக்கட்டளைக் கலிப்பா.

---

† கட்டளைக்கலிப்பாவை மண்டலக்கலிப்பா, கட்டளைமண்டலக்கலிப்பா என்று சொல்வாரு முளர்.

(ஷை)
**A. K.**

தனத்துக், காமெலி, கின்றநுண், மின்னிடைத்—தையன்,
மையனுன், மேற்கொள்ளக், கண்டையோ;
தனத்துக், காமன், கடந்துவர், தையவெஞ்—சமரு,
செய்யிற், சக்த்திடு, மோவிவ்வா;
தனத்துக், கார்தஞ்ச, மாவ, ரிவளேநீ—தமூவி,
யாளச், சமய, மடியர்வந்;
தனத்துக், காக, மகிழ்ந்தினி, தேயருள்—சண்மு, காமயி,
லாசலத், தீசனே.

[அ-போ] இது நிரையசைமுதலாய் அளையடிக்குப் பன்னிரண்டெழுத்துவந்த நிரையசைக் கட்டளைக்கலிப்பா

## வஞ்சிப்பா

107. வஞ்சிப்பா எத்தன்மைத்து?

கனிச்சீரும் அயற்சீரும்வந்து, தன்றளையும் பிறதளையும் தட்டு, தூங்கலோசையமைந்து, மூன்றடிமுதல் எனைத்தடியானும் நிரம்பி, தனிச்சொற்பெற்று, ஆசிரியச் சுரிதகத்தான் முடிவது - வஞ்சிப்பா.

108. வஞ்சிப்பா எத்தனைவகைப்படும்?

குறளடி வஞ்சிப்பா, சிந்தடிவஞ்சிப்பா என இருவகைப்படும்.

109. குறளடிவஞ்சிப்பா யாது?

இருசீராகியகுறளடி மூன்றடியின் மிக்கு எத்தனையடியானும்வந்து, தனிச்சொல்பெற்று, ஆசிரியச்சுரிதகத்தான் முடிவது.

(உ-ம்) பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்திரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்

விளைக்கம்பலை மனைச்சிலம்பவும்.
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலை கயலார்ப்பவும்,

நாளும்,

மகிழ் மகிழ்தூங் கூரன்—————
புகழ்த லாளுப் பெருவண் மையனே.

[அ-போ] இது குறளடிகளான் வந்து "நாளும்" என்னுந்தனிச்சொல் பெற்று (நேரிசை) ஆசிரியச்சுரிதகத்தான் முடிந்தமையால் குறளடிவஞ்சிப்பா.

110. சிந்தடி வஞ்சிப்பாயாது?

முச்சீரடியாகிய சிந்தடியால், குறளடிவஞ்சிப்பாவே போலவருவது.

(உ-ம்) கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையிலாத் துறவுநெறிக் கிறைவனாகி
யெயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினை பத்திமையிற் செப்பியோன்,

புணையெனத்,

திருவுறு திருந்தடி திசைதொழ———
விரிவுறு நற்கதி வீடுநனி யெளிதே.

[அ-போ] இது சிந்தடிகளான்வந்து "புணையென" என்னுந்தனிச்சொல் பெற்று (நேரிசை) ஆசிரியச்சுரிதகத்தான் முடிந்தமையால் சிந்தடி வஞ்சிப்பா.

---

## மருட்பா

111. மருட்பா எத்தன்மைத்து?

புறநிலைவாழ்த்து, கைக்கிளை, வாயுறைவாழ்த்து, செவியறிவுறூஉ, என்னும் நான்கு பொருளுக்கே யிடனாய் வரு

வதாய் (வேதோத்தமனாகிய அந்தணனும், குலநலத்தாளாகிய அரசகன்னியும் மணந்தகுலம்போல) "அமைதியாற்சிறந்த" வெண்பாவும், "ஆட்சியாற்சிறந்த" ஆசிரியப்பாவும் முதலும் ஈறுமாகப் புணர்ந்து வருந் தன்மைத்து.

112. மருட்பா எத்தனைவகைப்படும்?

பொதுத்தன்மையால் இருவகையும், பொருட்டன்மையால்நான்குவகையு மாம்.

113. பொதுத்தன்மையாலிருவகை எவை?

முதலாய்வருகிற வெண்பாவும் ஈறாய்வருகிற ஆசிரியப்பாவும் சமனாவாய் வந்தால் **சமநிலை**மருட்பா,விகற்பமாய்வந்தால்**வியனிலை** மருட்பா என்பனவாம்.

114. பொருட்டன்மையால் நால்வகைமருட்பா எவை?

புறநிலைவாழ்த்து மருட்பா, கைக்கிளைமருட்பா, வாயுறை வாழ்த்து மருட்பா,செவியறிவுறூஉ மருட்பா என்னும்நான்குமாம்.

115. புறநிலைவாழ்த்துமருட்பா யாது?

புலவோர்கள் பிறனை "வழிபடுதெய்வம் நின்னைப்புறந்தேகாப்ப நாளு நாளுங் குற்றமற்றசெல்வ முதலியவற்றாற் சிறந்துவாழ்க" எனவாழ்த்தும் பொருளுக்கிடனாய் வெண்பாமுதலும் ஆசிரியம் ஈறுமாகப் புணர்ந்து வருவது.

(உ-ம்) தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் தண்கோனூர்க்
குன்றமர்ந்தகொல்லேற்றா னிற்புறங்காப்ப- என்றுந்
தீரா நண்பிற் றேவர் ———
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே.

[அ-போ] இதில் "கொல்லேற்றான் நின்னைப் புறத்தே காப்ப, சீர்சால் செல்வமொடு மதிசிறந்து பொலிக" என்னும் ஆசிப்பொருளுக் கிடனாய், முதலில்வெண்பாமூன்றடியும், இறுதியில்ஆசிரியப்பா இரண்டடியுமாக விகற்பித்து வந்தமையால்புறநிலைவாழ்த்து **வியனிலை**மருட்பா.

116. கைக்கிளைமருட்பாயாது?

* ஒருதலைக்காமத்துக்குரிய † காட்சி, ‡ ஐயம், ¶ துணிவு, § குறிப்பறிவு முதலாகிய (அகப்பொருளிலக்கணத்துப்) பொருள்பெற்று வருவது. (இதில்வெண்பா இரண்டடியே வரும்)

(உ-ம்) திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும்—அரிபரந்த
சேயித முண்கணு மிமைக்கும் ———
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே.

[அ-போ] இதில் "வேர்வு அரும்பும், கோதைவாடும், அடிநிலந்தோயும், கண்ணும் இமைக்கும், (ஆதலால்)இவள்பூவுலகப் பெண்ணே" எனத் துணிவுப்பொருள் பெற்றுவந்தமைகாண்க. இது முதல் இரண்டடிவெண்பாவும் இறுதி இரண்டடி ஆசிரியமும் சம அளவாய் வந்தமையால் கைக்கிளைச் **சமநிலை** மருட்பா.)

(ஷை) பருந்தளிக்கு மூவிலைவேற் பண்ணவற்கே யன்றி
விருந்தளிக்கும் விண்ணோர் பிறர்க்குந் - திருந்த
வலனுயர் சிறப்பின் மன்ற வாணனக்
குலமுனி புதல்வனுக் கீந்த ———
லைகட லாகுமிவ் வாயிழை நோக்கே.

[அ-போ] இதில் "சிவனுக்கு விடத்தையும், தேவர்கட்கு அமிர்தத்தையும் தரத்தக்க பாற்கடல்போல? இவ்வாயிழை நோக்கம் நம் குறிப்புக்குப் பொருந்தாத அகிதப்பார்வையையும், பொருந்தும் இங்கிதப்பார்வையையும் தருதலால் மன்றுடிறு

---

* ஒருதலைக்காமம்,கைக்கிளை—ஒருவரிடத்திலுள்ள காமஇச்சை.—அது கன்னியைக் காளைகண்டு விரும்பியதனு லுண்டாகு மனவாக்குக் காயச்செய்கை. காளையைக் கன்னிகண்டு விரும்புதலுமுண்டு.

† காட்சி:—குறிஞ்சிச் சோலையிற் றனித்துநிற்குங் கன்னியைக் காளைகாண்பது.

‡ ஐயம்:—தேவகன்னியோ! மானுடக்கன்னியோ! பிறகன்னியோ! வென்று சந்தேகித்தல்.

¶ துணிவு:— மானுடக்கன்னியென்று துணிதல்.

§ குறிப்பறிவு:—மணத்துக்கிசைவளோவென்று ஆராய்தல்.

ல் மணந்து கொள்ளலாம்" என்ருர் தலைவன் ஓர்தலைவியின் குறிப்பறியும் மனச்செய்கையாகிய குறிப்பறிவுப்பொருள் பெற்று, ஆசிரியவடிமூன்ருய் வியனிலையாய் வந்தமைகாண்க, (மற்றதுறைப்பொருளினு மிவ்வாறேவரும்)

117. வாயுறைவாழ்த்து மருட்பாயாது?

அறிஞர் பிறர்க்குச்சொல்லும் உறுதிசாதனப் பொருளா லவருவது.

(உ-ம்) பலமுறையு மோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்து
நிலமுறையி னாண்ட நிகரிலார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்க ணில்லா
விலங்குமெறிபடையு மாற்றலு மன்புங்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்
பொலஞ்செய் புனைகலனே டிவ்வாற னாலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
வனைத்தாத னீயிருங் காண்டிர்—நினைத்தகச்,
கூறிய வெம்மொழி பிழையாது
தேறினீ ரொழுகிற் சென்றுபயன் றருமே.

[அ-போ] இதில் "பலமுறையும் ஓம்பப் படுவன கேண்மின்! செல்வங்கணில்லா, கூற்றை விலக்கலும் ஆகா, எம்மொழி பிழையாது (உண்மைப்பொருளைத்)தேறினீரேல் பயன்தரும்"என்னும் உறுதிசாதனப்பொருள் பெற்று, முதல்வெண்பாமிகுத்து வியனிலையாய்வந்தமைகாண்க.

118. செவியறிவுறூஉ மருட்பாயாது?

ஆன்றமேலோர் அரசர்க்குணர்த்தும் நீதிமுறையின் நிலைமைப் பொருளால் வருவது.

(உ-ம்) பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானைத் தேரொடுங் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞ
ரடுகளம் வேட்டோன் மருக வடுத்திற
லாளி நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்று
மீர முடையையா வென்வாய்ச்சொற் கேட்டி
யுடைய வுழவனா னெஞ்சனுங்கக் கொண்டு

வருகா லுழவர்க்கு வேளாண்மை செய்ய
மழவ ரிழைக்கும் வரைக்கா னிதியீட்ட
மமைத்த வரும்பொரு ளாறன்றி வெளவ
லினத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
மன்ற மறுக வகழாதி யென்றும்
மறப்புற மாக மறனாயா ரோம்பு
மறப்புற மாசைப்பட் டேற்க வறத்தா
லவையார் கொடுநாத் திருத்தி நன்வயாக
நட்டார் குழிசி சிதையாதி யொட்டார்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவியுடைத்தாக்
கற்றார்க் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செறுத்துநிற் சேராரை யாக்குதி
யற்ற மறிந்த வறிவினாய் மற்று
மிவையிவை வீயா தொழுகு நிலையாப்
பொருகட லாடை நிலமக ——
ளொருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே.

[அ-போ] இதில் அரசற்கு நீதி யுறுத்தினமையும், வெண்பா மிகுத்துவியனிலையாய்வந்தமையுங் காண்க.

# பாவினவியல்

119. பாவின வியலென்பது யாது?

பாக்களுக்கு இனமாகிய செய்யுள்களின் இலக்கணத்தைச்சொல்லும் பகுதி.

120. பாவினமென்பது எத்தன்மைத்து?

அரசனது ஆக்கினை, நீதி முதலிய இலக்கணங்களைத் தழுவிக்கொண்டு, அவனதுசெயலை நடாத்துகின்ற மந்திரி, தானாபதி, படைத்தலைவன் முதலிய உரிமைச்சுற்றம்போல ௪ பாக்களுக்குரிய இலக்கணங்களைத் தழுவி, அவற்றினின்றும் அடியாலும், ஓசையாலும், சந்தத்தினாலும் வேறுபட்டு, அப்பாக்களுக்கு இனமாய் வருந்தன்மைத்து.

121. பாவினம் எத்தனை வகைப்படும்?

மருட்பா தவிர; மற்றை ஒவ்வொருபாவுக்கும் தாழிசை, துறை, விருத்தம் எனமூன்று வகைப்படும்.

122. தாழிசை என்பது எத்தன்மைத்து?

பாக்களுக்குரிய இலக்கணத்தைத் தழுவியும் ஓசையாலும், அடியாலும் விகற்பப்பட்டுத் தாழ்ந்த ஓசையால்வருந்தன்மைத்து.

123. வெண்பாவில் தாழிசை எத்தனை வகைப்படும்?

(குறட்பாவுக்கினமாகிய) * குறட்டாழிசை, (வெண்பாவுக்கினமாகிய) வெண்டாழிசை என இருவகைப்படும்.

124. குறட்டாழிசை எவ்வாறுவரும்?

நாற்சீரின் மிக்கு எத்தனை சீரானும் அமைந்த இரண்டடியாய், முதலடியளவிற்கு ஈற்றடி ஒருசீரேனும் சிலசீரேனும் குறைந்து வருவது. அன்றியும் (பின்வரும் குறள்வெண்செந்துறை அதனிலக்கணங்கெட்டு வந்தாலும், குறள்வெண்பா அதற்குரிய ஓசைகெட்டுவந்தாலும் குறட்டாழிசை என்னப்படும்.)

(உ-ம்) "நண்ணு வார்வினை நைய நாடொறு நற்ற வர்க்கர சாய ஞானநற்,
கண்ணி னடியே யடைவார்கள் கற்றவரே."
"நீல மாகட னீடு வார்திரை நின்ற போற்பொங்கிப் பொன்று மாங்கவை,
காலம்பல காலஞ்சென்றுஞ் செல்வர்யாக்கை கழிதலுமே."

[அ-போ] இவைஇரண்டும் ஈற்றடிகுறைந்து பலசீரான் வந்தமையால் குறட்டாழிசைகள்.

(ஷை) "பிண்டியி னீழற் பெருமான் பிடர்த்தலை
மண்டிலந் தோன்றுமால் வாழி யன்னாய்."
"அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கௌந்தி
மறுவறு பத்தினி போல்வையி னீரே."

---

* குறட்டாழிசை எனினும், தாழிசைக்குறள் எனினும் ஒக்கும்.

[அ-போ] இவ்விரண்டும் இரண்டடியுந் தம்முள் அளவொத்தும் (குறட்செந்துறைக் குரிய இலக்கணமாகிய) விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுமின்றி வந்தமையால் செந்துறைச்சிதைவுத் தாழிசைக்குறள்: அல்லது செந்துறைச்சிதைவுக் குறட்டாழிசை.

(ஷை) வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி.

[அ-போ] இதுகுறட்பாவுக்குரிய தளைகெட்டு ஓசைசிதைந்து வந்தமையால் சிதைவுக்குறட்டாழிசை.

125. வெண்டாழிசையாது?

மூன்றடியாய், முதலிரண்டடியும் நன்னான்கு சீராய், ஈற்றடி வெண்பாவேபோல் முச்சீரடியானிறுவது. அன்றியும் (சிந்தியல்வெண்பா ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்தாலும் வெண்டாழிசையே) [இவைகளை வெள்ளொத்தாழிசையென்றுஞ் சொல்லலாம்]

(உ-ம்) நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யா
ரன்பு வேண்டு பவர்.

[அ-போ] இது மூன்றடியாய் (சிந்தியல்வெண்பாவேபோல வந்தாலும் ஆசிரியத்தளையான்) வந்தமையால் வெண்டாழிசை.

(ஷை) 'அன்னா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
யொன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் றுறந்து விடல்;—
'ஏடி யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
நீடான் றுறந்து விடல்;—
'பாவா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் றுறந்து விடல்.

[அ-போ] இது சிந்தியல்வெண்பா ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்தமையால் வெள்ளொத்தாழிசை.

126. ஆசிரியத்தாழிசையாது?

மூன்றடியாய் எல்லா அடிகளும் ஒரோவளவாய்வருவது. (இது ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவருதல் சிறப்பு)

(உ-ம்) 'கன்று குணிலாக் கனியுகுத்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி'
'பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி'
'கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி.

[அ-போ] இவை ஒருபொருண் மேன் மூன்றடுக்கி, மும்மூன்றடி அளவொத்து வந்தமையால் ஆசிரியத்தாழிசை.

(ஷை) வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பானமதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணனின் நிறைகழ றொழுதனம்.

[அ-போ] இது மூன்றடியளவொத்துத் தனியேவந்த ஆசிரியத்தாழிசை.

---

127. கலித்தாழிசை எவ்வாறுவரும்?

எத்தனைசீரானும் இரண்டடியாய், ஈற்றடி முதலடியினும் நீண்டிசைத்துவருவது. (இது ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவருதல் சிறப்பு)

(உ-ம்) கொய்தினை காத்துங் குழவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்,
ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்,
மென்றினை காத்தும் மிகுபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்.

[அ-போ] இவை இரண்டடியாய் ஈற்றடிமிக்கு ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்தமையின் கலித்தாழிசை. (தனியேவருதலுமிவ்வாறே)

௵ கலித்தாழிசை இரண்டடியின்மிக்குப்பலவடிகளாய்த் தம்முள் அளவொத்து ஈற்றடிமிக்குவருதலும், பலவடிகளாய் ஈற்றடிமிக்கு ஏனையடிகள் ஒன்றுக்கொன்றுமிக்குங் குறைந் தும் வருதலும் உண்டு.

(உ-ம்) வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும்போதி னெழால் வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போதி னெழாலாய்க் குறுலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்.

[அ-போ] இஃது நான் கடியாய் ஈற்றடிமிக்கு ஏனைமூன்றடி யுந் தம்முளளவொத்து வந்தகலித்தாழிசை.

(ஷை) பூண்ட பறையறையப் பூதம் மருள
நீண்ட சடையா னாடு மே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே.

[அ-போ] இது ஈற்றடி மிக்கு ஏனையடிகள் மிக்குங்குறைந்தும் வந்தகலித்தாழிசை.

---

128. வஞ்சித்தாழிசையாது?

இருசீரடி நான்காய் ஒருபொருண்மேன் மூன்று செய்யு ளடுக்கிவருவது. (இது ஒருபொருண்மேன் மூறடுக்கி யல்லதுவாராது.)

(உ-ம்) 'மடப்பிடியை மதவேழந்
தடக்கையான் வெயின்மறைக்கு
மிடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்,
'பேடையை யிரும்போத்து
தோகையான் வெயின்மறைக்குங்
காடக மிறந்தார்க்கே
யோடுமென் மனனேகாண்,
'இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையான் வெயின்மறைக்கு
மருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனே காண்.

[அ-போ] இவை இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேன் மூன்று செய்யுளடுக்கி வந்தமையால் வஞ்சித்தாழிசை.

---

# துறை

129. துறையென்பது யாது?

பாவிற்கினமாய் ஓசையானும், அடியானும், சந்தத்தானும் அவற்றின் வேறாய், (பலதீவங்களிலுள்ள உடர்பொருள்கள்வந்து வழங்குதற் கிடமாகிய கடற்றுறைபோல) அகத்திணை முதலிய பலஇலக்கணப்பொருள்களும் வந்து வழங்குந்துறையாய்வருவது.

130. வெண்பாவில் துறை எத்தனைவகைப்படும்?

செந்துறை என்றும், வெண்டுறை என்றும் இரண்டுவகைப்படும்.

131. செந்துறையாவதுயாது?

குறட்பாவுக்கினமாய், தம்முள் அளவொத்த அளவடி இரண்டாய், விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும், உடையதாகிவருவது வெண்செந்துறை; அல்லது, செந்துறைவெள்ளை=குறள்வெண்செந்துறை.

(உ-ம்) "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"
"கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவோ மியாமே"

[அ-போ.] இவை அளவடி இரண்டாய் அளவொத்து, விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் அமைந்து வந்தமையால் வெண்செந்துறை=குறள்வெண்செந்துறை.

132. வெண்டுறை யாது?

மூன்றடியிற்குறையாமலும் ஏழடியின் மிகாமலும் வந்து, பின்பில் சில அடிகளில் சில சீர்குறைந்து வரினும், ஈற்றடி ஒன்று ஒருசீர்குறைந்து வரினும், வெண்பாவுக்கினமாகிய வெண்டுறையாம். (இவற்றுள் முன்பில் சில அடிகள் ஓரோசையும், பின்பில்சில அடிகள் வேறோர் ஓசையுமாகி வரின் வேற்றொலிவெண்டுறை எனவும்-

ஓரோசையானே வந்தால் ஓரொலிவெண்டுறையெனவும் சொல்லப்படும்.)

(உ-ம்) குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற் பாய,
அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி,
கலுழ்வனபோ னெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்,
நிழன்மலை நன்னாடன் நீப்பனோ வல்லன்.

[அ-போ] இது நான்கடியாய் ஈற்றடி இரண்டும் இரண்டு சீர் குறைந்து ஓரோசையாய் வந்தமையால் ஓரொலிவெண்டுறை.

(ஷை) தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னா மென்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்துவிழும் பிலிற்றி யாங்கே.

[அ-போ] இது மூன்றடியாய் ஈற்றடி இரண்டும் இரண்டுசீர் குறைந்துவந்த ஓரொலி வெண்டுறை.

(ஷை) வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற வரும்வழி யுரைப்பன வுரைப்பன்மன்
செறிவுறு தொழிலொன் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின்.

[அ-போ] இது ஈற்றடி ஒன்று ஒருசீர்குறைந்துவந்த ஓரொலி வெண்டுறை.

(ஷை)
முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகு மேவல்செய முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன் றுக்கரிய வை வேல் பாடிக்
கலங்கினின் றொலாங் கருதலா காவண
மிலங்குவாளிரண்டினு மிருகைவீசிப்பெயர்ந்
தலங்கன் மாலை யவிழ்ந்தாட வாடுமிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றொலாம்
விலங்கி யுள்ளந் தபவிளிந்து வேறுபவே.

[அ-போ] இது ஏழடியாய் முதலிரண்டடியும் ஆறுசீராய் ஓரோசையாய், பின்பிலைந்தடியும் நான்குசீராய் வேறோரோசையாய்வந்த வேற்றொலி வெண்டுறை.

133. ஆசிரியத்துறை எவ்வாறுவரும்?

எத்தனை சீராகுயினும் நான்கடியாய் ஈற்றயலடி குறைந்தும், நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காயும், நான்கடியாய் இடை இடைகுறைந்தும், நான்கடியாய் இடைஇடை குறைந்து இடைமடக்காயும் நான்குவகையாய்வரும்.

(உ-ம்)

கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி வருவிராயி
னரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறுநுங் கைவே லஞ்சுநும்மை
வரையர மங்கையர் வௌவுத லஞ்சுதும் வாரலையோ.

[அ-போ] இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத்துறை.

(ஷை)

கொன்றோர் தமைந்த குருமுகத் தெழினிறக் குருதிக் கோட்டன விருந்தாட் பெருங்கைக் குன்றெமென வன்றெமெனக் குமுறு நின்றன கொடுந்திறல் வேழம்;

வென்றோர் தமைந்த விளங்கொளி யிளம்பிறைத் துளங்குவாளிலங்கெயிற் றழலுளைப் பருஉத்தா ளதிரும் வானென வெதிருங் கூற்றெனச் சுழலா நின்ற சுடர்க்கண் யாளி;

சென்றோர் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப் பொறியெருத் தெருள்வலிப் புலவுநா றழல்வாய்ப் புனலாமெனக் கனலாமெனப் புகையாநின்றன புலிமா னேற்றை;

என்றுங் கிவையிவை யியங்கலி னெந்திறத் தினிவரல் வேண்டலந் தனிவர லெனத்தலை விலக்கலினிறுவரை மிசையெறி குரும்பிடைப் படுதுவென்னென விது நோகுர்கர விரவிடை களவுளமது கற்றோதுங் கற்பன்றே.

[அ-போ.] இது நான் கடியாய், முதலடியும் மூன்றமடியும் பதினன்கு சீராய், அல்லாத அடி இரண்டும் பதினறுசீராய் இடையிடைகுறைந்து வந்த ஆசிரியத்துறை.

(ஷை) இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனு
அரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனில்
அரங்க மணிபொழிலா வாடுமாயின்

மரங்கொன் மணந்தகன்றோர் நெஞ்சமென்செய்த தி
ளவேனில்.

[அ-போ] இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைம டக்காய் வந்த ஆசிரியத்துறை. (மற்றது மிவ்வாறேவரும்)

---

134. கலித்துறை யாவதுயாது?

ஐஞ்சீரடி நான்காய்த்தம்முள் அளவொத்துவருவது கலித்துறை. அல்லது கலிநிலைத்துறை.

(உ-ம்) யானுந் தோழியு மாயமு மாடுந் துறை நண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே.

"குடவளைக்குலம் வயிறுளைந் தீன்மணி கொழிக்கும்
மடுவில் வானக ருருவுகாட் டியதுபோன் மதில்சூழ்
கடிகொண் மாநக ரங்கிழற் கறவிடா தகன்ற
புடைகொ ணீர்நக ருடுத்தலைப் பொங்குபே ரகழி."

[அ-போ] இவை இரண்டும் ஐஞ்சீரடி நான்காய்த்தம்முள் அளவொத்து வந்தமையின் கலித்துறைகள்.

135. கட்டளைக்கலிப்பாவுக்கினமாகிய கட்டளைக்கலித்துறை எவ்வாறுவரும்?

நெடிலடி நான்கும் ஒத்து, அடிதோறும் முதலினின்றும் நான்குசீர்கள் வெண்டளையாயும், இறுதி ஒரொருசீரும் விளங்கா யாகவுமே முடிந்து; அடிமுதற்சீரின் முதலசை நேராய் வருஞ்செய்யுளின் ஒவ்வோரடியிலும் "ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யும்" பதினாறெழுத்தும், நிரையசை முதலாய்வருஞ் செய்யுளின் ஒவ்வோரடியிலும் பதினேழெழுத்துமாக நிரம்பி: நேரசைக்கட்டளைக்கலித்துறை, நிரையசைக்கட்டளைக் கலித்துறை என இருவகையாய்வரும். (இக்கட்டளைக் கலித்துறைகள் ஏகார இறுதியையே பெறும்.)

(உ-ம்)

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவினும்பொய்

சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றேகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

[அ-போ] இது ஐஞ்சீரடி நான்களவொத்து முதற்சீர்கள் நான்கும் வெண்டளை பிழையாமல், கடையோரொருசீரும் விளங்காயாகிவந்து, அடிமுதல் நேரசை யாய், அடிதோறும் "ஒற்றொழித்து உயிருமுயிர்மெய்யும்" பதினாறெழுத்துகள் பெற்றமையால் நேரசைக்கட்டளைக்கலித்துறை.

(௨) வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலையத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்தலெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் சஞ்சுகமேய்க்குங் கனங்குழையே

[அ-போ] இது அடிதோறும் முதனூற்சீரும் வெண்டளையும், கடையோரொருசீரும் விளங்காயுமாகியும், அடிமுதல் நிரையசையாய், ஒற்றுநீக்கிப் பதினேழெழுத்துகள் வந்தமையால் நிரையசைக்கட்டளைக் கலித்துறை. (இவைகள் ஏகாரத்தால் முடிந்தமைகாண்க.)

---

136. வஞ்சித்துறை யாது?

குறளடி நான்காகிய ஒருசெய்யுளாய், ஒருபொருண்மேலொன்றாய் வருவது.

(உ-ம்) காமரு சித்த
ராம னிடத்திற்
போமனல் சொற்ற
சீர்மை யுரைப்பாம்.

"கரும யோகமுங்
கிரியை யாவையும்
மருவி ராமன்வாழ்
புரியை மேவினன்."

"மைசிறந்தன மணிவரைக்
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்."

[அ-போ] இவைமூன்றும் இருசீரடிநான்காய், ஒருபொருண்மேல் ஒன்றேயாய் வந்தமையின் வஞ்சித்துறைகள். (இச்செய்யுள் களுள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாய் ஓரோரடிக்கு எழுத்துகள் ஐந்தும், ஆறும், எட்டும், ஒன்பதுமாய் வந்தமையாது? எனின்! குறளடி! நான்கெழுத்துமுதல் ஒன்பதெழுத்தின்காறும் வரும்)

137. விருத்தமென்பது எத்தன்மைத்து?

ஓசையானும், அடியானும், சந்தத்தானும் பாவில்நின்றும் வேறுபட்டு அதற்கினமாய் (உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களிலும் வியாபித்தறிந்த வார்த்திபபுருடனுடைய அறிவைப்போல) எல்லாப்பொருள்களிலும் உபயோகப்படுவதாய், பாவினங்களுள் விருத்தம் (= அங்தம் அல்லது சிறப்பு) ஆகிவருவது.

138. ‡ வெண்பாவிருத்தம் எவ்வாறு வரும்?

மூன்றடியேனும் நான்கடியேனும், நான்குசீராய், அடிதோறும் ஐந்தாஞ்சீர் ஒரேதன்மைச் சொல்லாகத்தனிச்சொல் பெற்றுவருவது வெளிவிருத்தம்.

(உ-ம்) கொண்டன் முழங்கினவாற் கோபம் பரந்தனவா லென்செய்கோயான்
வண்டுவரிபாட வார்தளவம் பூத்தனவா லென்செய்கோயான்
எண்டிசையுந் தோகை யிருந்தகவி யேங்கினவா லென்செய்கோயான்.

[அ-போ] இது மூன்றடியாய் ஐந்தாஞ்சீர் களாகிய 'என்செய்கோயான்' என்னுந் தனிச்சொல்பெற்று வந்த வெளிவிருத்தம்.

(ஷை) ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா ரொருசாரார்
ஏ கீர் நாகீ ரென்செய்து மென்றா ரொருசாரார்.

[அ-போ] இது நான்கடியாய் ஐந்தாஞ்சீர் 'ஒருசாரார்' என்னுந்தனிச்சொல் பெற்றுவந்த வெளிவிருத்தம்.

---

139. ஆசிரியவிருத்தம் எவ்வாறுவரும்?

கழிநெடிலடி நான்கு தம்முள் அளவொத்து வரும்.

---

‡ வெண்பா விருத்தம் வெள்ளைவிருத்தம், வெளிவிருத்தம் என்பன ஒருபொருட்கிளவி.

அதாவது(ஐந்துசீரின் மிக்கு எனைத்துச்சீரானும் வரும். எண்சீரளவும் வருவனசிறப்புடையன.)

(உ-ம்) வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுண ருள்ளந் தோறுஞ்
சென்றுளே யமுத மூற்றுந் திருவருள் போற்றி யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறி யாடு மறைச்சிலம் படிகள் போற்றி.

[அ-போ] இது அறுசீரடியான் வந்த ஆசிரியவிருத்தம்.

(ஷை)

இறக்கினு மின்றே யிறக்குக வென்று மிருக்கினு மிருக்குக வேந்த
னுறுக்கினு மொறுக்க வுவகையு முடனே யூட்டினு மூட்டுக வானிற்
சிறக்கினுஞ் சிறக்கக் கொடியநரகஞ் சேரினுஞ் சேருக சிவனை
மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தான் மாற்றுவர் யாரென
மறுத்தார்.

[அ-போ] இது ஏழுசீரான் வந்தமையான் எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

(ஷை) வீரங்கொள் விடைவிரிஞ்சை யீசர்புகழ் பாடி
A.K. மேவுகளி யேமதுவான் மெய்ம்மருளோங் கேண்மின்,
சாரங்க பாணிதனைத் தழுவுகின்ற மங்கை
சைலேசன் றவத்தீன்ற மயிலேயு நங்கை,
பாரங்கொள் பெரியதனச் சிற்றிடைச்சி புணர்கோ
பாலன்மகன் வெஞ்சூர பன்மனைக்கொன் றுனே,
காரங்கச் சங்கரிக்கு மகன்கருப்பன் றுேனர்
கந்தனைப்பெற் றவன்வனசச் செந்திருமால் தானே.

[அ-போ] இது எட்டுச்சீரடியால் வந்தமையின் எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

(ஷை) இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியி னெதிர்ந்த தாடகை
யை யிலங்கு மாழியின் விலங்கியோன்,
முடங்கு வாலுளை மடங்கன் மீமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோள்,
வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை
சுந்தரி வளங்கொள் பூமழை மகிழ்ந்தகோன்,

தடங்கொ டாமரை யிடங்கொள் சேவடி தலைக்கு வைப்ப
வர் தமக்கு வெந்துயர் தவிர்க்குமே.

[அ-போ] இது ஒன்பது சீர்கள்வந்தமையால் ஒன்பதின் சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

(ஷை) கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு கூடி நீடு மோ
டை நெற்றி
'வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத நாத வென்று
நின்று தாழ
அங்க புவ்வ மாதி யாய வாதி நூலி நீதி யோது மாதி யாய
செங்கண் மாலை காலை மாலை சென்று சேர்வர் சோதி சேர்ந்
த சித்தி தானே.

[அ-போ] இதுபத்துசீர்கள்வந்தமையால் பதின்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம். (பதின்சீரடியின்மிக்குவரும் ஆசிரிய விருத்தங்கள் பிள்ளைத்தமிழ்முதலிய பிரபந்தங்களுட்காண்க)

---

140. கலிவிருத்தம்யாது?

அளவடி நான்காய் வருவது கலிவிருத்தம்.

(உ-ம்) உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

“ கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே.”

“ சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போன்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமேபோற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.”

[அ–போ] இவைகள் நாற்சீரடி நான்காய்வந்தமையால் கலிவிருத்தங்கள். (இக்கலிவிருத்தம் பதினோரெழுத்துமுதற் பன்னிரண்டெழுத்தின் காறும்வரும்)

---

141. வஞ்சிவிருத்தம் யாது?

சிந்தடி நான்காய் வருவது வஞ்சிவிருத்தம்.

(உ-ம்) ஒட்ட னென்றனை யும்பருஞ்
சிட்ட னென்றுகொள் சித்தனை
துட்ட வென்று சுளித்தனர்
வெட்டி ருந்தட மேவினார்.
"இருது வேற்றுமை யின்மையால்
சுருதி மேற்றுறக் கத்திறே
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடக் கையினாய்".

[அ-போ] இவை முச்சீரடி நான்காய் வந்தமையின் வஞ்சி விருத்தங்கள். (சிந்தடியான் வருஞ்செய்யுள் ஓரடியில் எட்டெழுத்து முதற் பத்தெழுத்தின் காறும்வரும்.)

# ஒழிபியல்.

142. ஒழிபியல் என்பதுயாது?

உறுப்பியலிலும், பாவியலிலும், பாவினவியலிலும் சொல்லாது ஒழிந்தவற்றின் இலக்கணஞ் சொல்லும்பகுதி.

143. இவ்வொழி பியலிற் சொல்லுவன எவை?

அவ்வியல் களிற்சொல்லா தொழிந்த ஒருவகை எழுத்து, அசை, அடி, தொடை, செய்யுள், வழு முதலிய வைகளாம்.

144. ஒருசாரெழுத்தைச் சொல்லுவது என்னை?

சீர், தளை கெடவருங் கால் (குற்றெழுத்தின் தன்மையாய் நின்றிசைக்கின்ற) குற்றியலிகரமும், குற்றியலுகரமும் அசைக்குறுப்பாய் இசைக்கினும், (அலகுகாரியம் பெறுத) மெய்யெழுத்தேபோலக் கொள்ளவேண்டும்.

(உ-ம்)

சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா ஞலைப்
பெறுநன்றி பின்னும் பெரிதென்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதுந் தானமன் றென்பவே
யானவா முள்ளத் தவர்.

[அ-போ] இதில் "பின் றிவர்க் கியாஞ்" என வஞ்சி யுரிச்சீராய் நின்று வெண்பாத்தன்மை கெட்டுப்போதலால், அச்சீரின் மூன்றுமசையை நிரையாக்கும் குற்றியலிகரத்தை அலகிடாமல் மெய்த்தன்மையாக்கி, அம்மூன்றுமசையை நேரசையாகக் கொண்டு, அச்சீரை "கூவிளங்காய்" என அலகிட்டுச்சீர்தளைகெடாமற் காண்க.

(ஷ) அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

[அ-போ] இதில் "தியா தெனில்" என்னும் இரண்டாஞ்சீரின் முதலசை நிரையாய்வந்து "அருளல்ல" என்னும் முதற்சீர், (காய்முன் நிரைவந்து) கலித்தளையாய், வெள்ளைத்தன்மைகுன்றிப்போதலால், அவ்விரண்டாஞ்சீர் முதற் குற்றியலிகரத்தை மெய்போலக்கொண்டு, அம்முதலசையை நேர் என அலகிட்டு முதற்சீர்வெண்டளை யாதல் காண்க. (குற்றியலுகரம் வரினும் இவ்வாறே மெய்த்தன்மை யாக்கிக்கொள்க)

145. ஐகாரம் எவ்வாறுகும்

நெடிற்றன்மையாய் நின்றிசைக்கின்ற ஐகாரம் சீர், தளை கெடவந்தவிடத்து, குறில் தன்மையாய், பின்வரும் எழுத்தைத் தொடர்ந்து நிரையசையாய் முடியும்.

(உ-ம்) அன்னையையா னேவ தவமா லணியிழாய்
புன்னையையா னேவன் புலந்து.

A. K. வேலை கைலைமலை மேவு மிவைகடையில்
ஏலவரு மூன்றெழுத்தா மென்னலாஞ்—சாலமயல்
பூணமலர்க் கண்சாத்திப் பூமயில்போ லேயனங்கள்
நாண நடப்பாள் நகை.

[அ-போ] இவைகளில் "அன்னையை யா, புன்னையை யா', என நான்கசைச்சீரும்; "கைலை மலை" எனக்கனிச்சீரும் (மா முன் நேருமாகி) வந்து, முறையே பொதுச்சீரும், ஆசிரியத்தளையுமாய் வெள்ளைத்தன்மை கெட்டுப்போதலால், ஐகாரங்களைக் குறிலாகக்கொண்டு, வருமெழுத்தோடிணைத்து நிரையசையாக அலகிட்டால் சீர்தளை கெடாமை காண்க.

146. உயிரளபெடை எவ்வாறாம்?

நேர் நேர் ஆகித் "தேமா" எனப்படுகின்ற உயிரளபெடை சீர், தளைகெடவந்தவிடத்து அளபெடைத்தன்மை கருதாது, நெடிற்றன்மையாகக் கொண்டு நேரசையென்றலகிடப்படும்.

(உ-ம்) துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

[அ-போ] இதில் தூஉ என அளபெடுத்து. பின் நின்ற குறில் தனக்குப்பின்னெழுத்தைத் தொடர்ந்து நிரையாகாமல் நேர் நேர் ஆகி நின்று "தேமா" வாயினமைகாண்க.

(உ-ம்) பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னுந் தோன்றினவா—னெல்லுக்கு
நூறேறு ஒநூ றென்பா னுடங்கிடைக்கு மென்முலைக்கு
மாறேமா லன்றளந்த மண்.
"இடைநுடங்க வீர்ங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து—கடைசிவப்பில்
உப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு.

[அ-போ] இவற்றுள் "நூறேறு ஒநூ" எனவும் "உப்போஒ" எனவும் அளபெடுத்து, முறையே நாலசைச்சீரும், "கலித்தளை" யுமாகி வெள்ளைத்தன்மை கெடுதலால், அளபெடைத்தன்மை கருதாது நெடிலாக்கி நேரசையாக அலகிட்டு, முன்னது "தேமாங்கா" யாகவும், பின்னது "தேமா" வாகவும் கொண்டமையால் சீர்தளைகெடாமை காண்க. (அளபெடை சீர், தளை, ஓசை கெடுங்காற் றோன்றுவதாயினும், அவைகெடாதேயும் பண்டமாற்று, பண், முதலியவற்றின் இசைப்பொருள் குறித்தும் வரும்.)

147. குற்றெழுத்து எவ்வாறாம்?

"குறில் தனியே நின்றும் நேரசை யாம்" எனும் பொது விதி யிருப்பினும், அளபெடையி லேனும், பிறவற்றி லேனும், முதலில் நின்றகுறில் பின் நிற்கும் எழுத்தைத் தழுவாது விட்டிசைக்குமாயின் அப்படிப்பட்ட குறிலை நேரசை யென்று அலகிடவேண்டும். (இவ்வாறு விட்டிசையாதவழி, முதற்குறிலைப் பின்னெழுத்தோடிணைத்து, நிரையசையென்றலகிடவேண்டும்.)

(உ-ம்) வெ. உண்ணு ளொளிநிரு ளோங்குபுகழ் செய்யான்
றன்னருங் கேளிர்த் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அ,ஆ
இழந்தானென் றெண்ணப் படும்.

(ஷை) வெறிகமழ் தண்புறவில் வீங்கி யுகளும்
மறிமுலை யுண்ணமை வேண்டிப்—பறிமுன்கை
அ,உ மறியா வறிவி லிடைமகனே
நொ,அலைய னின்னாட்டை நீ.

[அ-போ] இவற்றுள் "அ, ஆ" எனவும், "அ, உ" எனவும், "நொ,ஆலையல்" எனவும், விட்டிசைத்து முதற்கண் தனிக்குறில்கள் நேரசைகளாயின. (குறில் விட்டிசைத்தால் மொழி முதலிடை கடை என்னும் மூன்றிடத்திலும் நேரசையாகவே கொள்ளப்படும்.)

(கு-வெ) அ இ உ எ ஒ இவைகுறிய மற்றையவேழ்
நெட்டெழுத்தா நேரப் படும்.

[அ-போ] இதில் குறில் மொழி மூவிடத்திலும் விட்டிசைத்துத் தனித்தனியே நேரசை யாயினமை காண்க.

148. ஒற்றளபெடை எவ்வாறும்?

சீர், தளை கெடவரின்மெய்யெழுத்துகளும், ஆய்தமும் அளபெடுத்துத்தனிக்குறில்போல நேரசையாம். (அவ்வாறுகுறில்தன்மையாய் நேரசையாகும் ஒற்றளபெடை பின்னெழுத்தோடு தொடர்ந்தும், முன்னெழுத்தோடியைந்தும் நிரையசையாகாவாம்.)

(உ-ம்) வெ- கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
மின்ன் நுழைமருங்குன் மேதகு சாயலா
ளென்ன் பிறமகளா மாறு.
"எஃஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃஃ குவார்க்கில்லை வீடு."

[அ-போ] இவைகளில் ஒற்றெழுத்தும், ஆய்தவெழுத்தும் அளபெடுத்துக்குறில் மாத்திரையாய் நேரசையாயினமைகாண்க.

149. சீர்தளைகளைப்பற்றிச் சொல்லுவதுயாது?

ஒருபாவிற்குரிய சீர்தளைகள் வேறுபாக்களில் வந்துமயங்குமென்பதும், இன்னசீர்தளைகள் இன்னபாக்களில் வராவென்பதும், இன்னபா வேறுபாக்களுக் குரியசீர் தளைகள் வரப்பெறாது என்பதும்ஆம். (இவை உறுப்பியலில் சீர்,தளை இலக்கணத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றன)

150. அடிமயங்கிவருவது எவ்வாறு?

ஆசிரியப்பாவிலும், கலிப்பாவிலும் அரிதாய் ஐஞ்சீரடியும் வரும். (இவ்விரண்டுபாக்களுக்கும் "நான்குசீரடியே உரிமை"யென்பது அடியிலக்கணத்திலும், அவ்வப்பாவிலக்கணத்திலும் கூறப்பட்டிருக்கின்றன)

(உ-ம்) உமணர்ச் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
யூர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்காட்
டின்னா வென்றி ராயின் ———
இனியவோ பெரும தமியேற்கு மனையே.

(உ-ம்) "அணிகிளர் சிறுபொறி யவிர்தத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர் தொட்டுளந்து மலைந்தனையே,"

(கொ-க) "நானாரென் னுள்ளமார் ஞானங்க ளாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேல் மதிமயங்கி
யூனா ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்
றேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ."

[அ-போ] இவ்வாசிரியப்பாவிலும், கலிப்பாக்களிலும் முதலடிகள் ஐஞ்சீரான்வந்தமைகாண்க.

151. ஒருசார் தொடையாவது யாது?

மேலை இயல்களிற் சொல்லியவை வேறுவிகற்பமாய் வருவனவும், சொல்லாதனவுமாம்.

152. முரண்டொடை வேறு விகற்பித்து வருவதெவ்வாறு?

முரண்டொடை உறுப்பியலில் சொல்லிய வாறன்றியும், "கடைமுரணும், கடையிணை முரணும், பின்முரணும், கடைக்கூழைமுரணும், இடைப்புணர் முரணும் ஆக முரண்டொடை ஐவகையாய்வருதலும் உண்டு" என்பர்ஒருசார் இலக்கணிகள்.

(உ-ம்)(ஆ-பா) கயன்மலைப் பன்ன கண்ணிணை கரிதே
தடமுலை திவளுந் தனிவடம் வெளிதே
நூலினு நுண்ணிடை சிறிதே ———
ஆடமைத் தோளிக் கல்குலோ பெரிதே.

[அ-போ] இதில் அடிதோறும் இறுதிச்சீர்க்கண் மறுதலைத்து வந்தமையால் கடை முரண்டொடை.

(உ-ம்) மீன்றேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு
(ஆ-பா) தேனார் ஞாழல் விரிசினை குழூஉந்
தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
தேரோ காணலங் காண்டும் ———
பீரோ வண்ணமுஞ் சிறுநுதற் பெரிதே.

[அ-போ] இதில் அடிதோறும் கடையிருசீர்க்கண்ணும் மறுதலைத்து வந்தமையால் கடையிணைமுரண்டொடை.

(உ-ம்) சார லோங்கிய தடந்தாட் டாழை
(ஆ-பா) கொய்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமியே யிருந்தன மாக நின்றுதன்
நலனுடைப் பணிமொழி நன்குபல பயிற்றி
வீங்குதொடிப் பணைத்தோ ணெகிழத் ———
துறந்தோ னல்லனம் மேனியோ தீசே.

[அ-போ] இதில் அடிதோறும் இரண்டாஞ்சீர்க்கண்ணும், நா ன்காஞ்சீர்க்கண்ணும் மறுதலைத்துவந்தமையால் பின்முரண்.

(உ-ம்) காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
(ஆ-பா) பூவிரி சுரிமென் கூந்தலும்————
வேய்புரை தோளு மணங்குமா லெமக்கே.

[அ-போ] இதில் முதலடி முதற்சீரொழித்து, மற்றைமூன்று சீர்க்கண்ணும் வந்தமையால் கடைக்கூழை முரண்.

(உ-ம்) போதவிரி குறிஞ்சி நெடுந்தாண் மால்வரைக்
(ஆ-பா) கோதையிற் றாழ்ந்த வோங்கல்வெள் ளருவி
காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விராஇப்
பெருமலைச் சீறூ ரிழிதரு நலங்கவர்ந்
தின்னு வாயி னினியோர் மாட்டே.

[அ-போ] இதில் அடிதோறும் இடையிருசீர்க்கண்ணும் மறு தலைத்துவந்தமையால் இடைப்புணர்முரண்.

153. மோனை, எதுகை, அளபெடைகள் எவ்வாறாம்?

மேல் முரண்தொடைக்குச் சொல்லியவாறே கடைமோனை, கடையிணை மோனை, பின்மோனை, கடைக்கூழை மோனை, இடைப்புணர் மோனை எனவும்; அவ்வாறே எதுகையும், அளபெடையும்வருமென்றும்உரைப்பார். (இவற்றிற்குதாரணம் முரண்டொடைக்குக் காட்டிய வாறே, இலக்கியம் வந்துழிக்காண்க.)

154. மோனை, எதுகை வேறுபட்டுவருதலுமுண்டோ

வருக்கவெழுத்தும், நெட்டெழுத்தும், வல்லின மெல்லின இடையின வெழுத்துகளும் தம்முள் ஒத்து, மோனையும், எதுகையுமாய் வருதலுமுண்டு.

155. வருக்கமோனையும், வருக்கவெதுகையும் எவ்வாறுவரும்?

அ - ஆ - இ - ஈ - உ - ஊ - எ - ஏ - ஐ - ஒ - ஓ - ஔ என்னும் வருக்க வெழுத்துகள் அடிக்கொன்றாக முறையேவரும்.(மோனையில் உயிர்வருக்கமும்,உயிர்மெய் வருக்கமும்; எதுகையில் உயிர்மெய் வருக்கம் ஒன்றுமாத்திரமும் வரும்)

(உ-ம்) பகலைபல் பூங்கானற் கிள்ளை யோப்பியும்

(ஆ-பா) பாசிலைக் குளவியொடு கூதாளம் விரைஇப்
பின்னுப் பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
புனையீ ரோதி செய்குறி நசைஇ
பூந்தார் மார்ப புனத்துட் டோன்றி,—

[அ-போ] இதில் பகரமெய்வருக்க மோனைவந்தமைகாண்க. (உயிர்வருக்கமும் ஆத்திசூடி முதலியவற்றிற் காண்க.)

(ஷை) அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

[அ-போ] இதில் றகர மெய் வருக்க எதுகை வந்த மை காண்க.

156. நெடில்மோனை, நெடில் எதுகை எவ்வாறு வரும்?

நெட்டெழுத்துகள் மோனையும்,எதுகையு மாய் ஒன்றிவரும்.

(உ-ம்) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

[அ-போ] இதில் முதலெழுத்துகள் நெடிலாய் ஒன்றிவந்தமையால்நெடில்மோனை.

(ஷை) ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்,—

[அ-போ] இதில் இரண்டாமெழுத்தாகிய மெய்யொற்றுமையின்றேனும் அம்மெய்யூர்ந்த நெட்டுயிர் ஒற்றுமையாதலால் நெடிலெதுகை.

157. இனமோனை, இனவெதுகை எவ்வாறுவரும்?

வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்றினமெ

ய்களும் தத்தமில் ஒற்றுமையாய் மோனை, எதுகையி ல்வந்து வல்லினவொற்றுமை, மெல்லினவொற்றுமை, இடையினவொற்றுமை, மோனை எதுகையென்று சொல்லப்படும்.

(உ-ம்) கயலே ருண்கண் கலுழ நாளுஞ்
(ஆ-பா) சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்ப,

[அ-போ] இதில் அடிதோறும் மோனையில் ஒருமெய்யே வராவிடினும் ஓரின மெய்கள் வந்தமையால் வல்லின வொற்றுமை மோனை. (மெல்லின வொற்றுமை மோனையும், இடையின வொற்றுமை மோனையும் இவ்வாறேவரும்.)

(ஷை) தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.
"அன்பீனு மார்வ முடைமை யதுவினும்
நண்பெனு நாடாச் சிறப்பு."
"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

[அ-போ] இவற்றில் வல்லினவொற்றுமை எதுகை, மெல்லினவொற்றுமை எதுகை, இடையினவொற்றுமைஎதுகை வந்தமைகாண்க.

158. இவ்வாறன்றி எதுகைஇன்னும் வேறுவகையாய்வருதலுமுண்டோ?

"உயிரெதுகை, ஆசெதுகை, இடையிட்டெதுகை, இரண்டடியெதுகை, மூன்றுமெழுத் தொன்றெதுகை, அனுவெதுகை எனவும்வரும்" என்பர் ஒருசாரிலக்கணவாசிரியர்.

(உ-ம்) துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநா
(ஆ-பா) ளளிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி
வடியமை யெஃகம் வலன்வயி னேந்தித்
தனியே வருதி நீயெனின் ———
மையிருங் - -ந்த லுய்தலோ வரிதே.

[அ-போ] இதில் இரண்டாவது மெய்யொன்ருவிடினும் அம் மெய்களை ஊர்ந்துவந்த இகரவுயிர் ஒற்றுமையாதலால, உயிரெதுகை.

159. ஆசெதுகை எவ்வாறுவரும்?

ய், ர், ல், ழ், என்னும் நான்கு மெய்களுள் யாதானும் ஒன்று எதுகைக்கு இடையில் வரும்.

(உ-ம்) காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் ருெடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்து
மேமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே.

"மாக்கொடி யானையு மௌவற் பந்தருங்
கார்க்கொடி முல்லையுங்கலந்து மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பருங் காருன மூழூர
ஆக்கடி கமழ்ந்துதான் றுறக்க மொத்ததே."

"ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால் வேறுருவின வல்லவாம்,"

"வாழ் கின்றே மென்றுமகிழன்மின் வாழ்நாளும்
போகின்ற பூளையே போன்று."

[அ-போ] இவைகளில் 'ய், ர், ல், ழ்' மெய்கள் எதுகையினிடையேவந்து ஆசெதுகை ஆயின.

(ஷ) ஆர் கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓ தலிற் சிறந்தன் ருெழுக்க முடைமை.

[அ-போ] இது ஆசிடையிட்டுவந்த வல்லினவெதுகை.

160. இடையிட்டெதுகையாது?

செய்யுளில் இடையிடையே ஒவ்வோரடியில் எதுகையின்றிவருவது.

(உ-ம்) தோடா ரெல்வளை நெகிழ நாளும்
(ஆ-பா) நெய்த லுண்கண் பைதலுழலக
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைகறோறும் பையல் பெருகி,—

[அ-போ] இதில்இடையிடையே ஓரோரடிக்குஎதுகையின்றி வந்தமையால இடையிட்டெதுகை.

161. இரண்டடி எதுகையாது?

வெண்பா ஒழிய மற்றைச் செய்யுள்களில், இரண்டிரண் டடிகளில் ஓரோரெதுகையாய்வருவது.

(உ-ம்) துவைக்குந துளிமுந்நீர்க் கொற்கை மகளிர்
(த-கொ-க-பா) அவைப்பதம் பல்லிற் கழகொவ்வா முத்தம்
மணங்கமழ்தா ரச்சுதன் மண்காக்கும் வேலின்
உணங்கு மமுதமு மதநலார் பாடல்.

[அ-போ] இதில்இரண்டிரண்டடிக்கோ ரெதுகையாய்வந்த தனால் இரண்டடிஎதுகை. (இ மோனை தொடையிலும் இவ் வாறே உயிர்மோனை, இடையிட்டுமோனை, இரண்டடிமோனை வருவதுண்டு. அவைகளுக்குதாரணம்வந்துழிக்காண்க.)

162. மூன்றுமெழுத்தொன் றெதுகையாது?

அடிதோறும் மூன்றுமெழுத்து தம்முள் ஒன்றிவருவது.

(உ-ம்) பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நனமை பயக்கு மெனின்.

[அ-போ] இதில் மூன்றுமெழுத்து ஒன்றிவந்தமையால் மூன்றுமெழுத்தொன்றெதுகை.

163. எதுகையில்வரும் அனுவெழுத்துகள் எவை

அகரத்திற்கு ஐகாரமும், ஔகாரமும்; இகரத்திற்கு எகரமும், யகரமும்; ஞகரத்திற்கு நகரமும்; பகரத்திற்கு வகரமும் அனுவெழுத்துகள். இவை எதுகையில் வந்து அனுவெதுகை என்னப்படும்.

(உ-ம்) சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை, ———

[அ-போ] இதில் பகரத்திற்கு வகரம்வந்தமையால் அனுவெதுகை. மற்றையெழுத்துகளும் இவ்வாறேவநதவிடத்துக்காணக. (மோனையிலும இவ்வாறு வருதல் காண்க)

164. எதுகை, மோனை இன்னும் வேறு விதப்பட்டு வருதலு முண்டோ?

ஒருசாரிலக்கணிகள் "தலையாகெதுகை, இடையாகெதுகை, கடையாகெதுகையும்; தலையாகுமோனை, இடையாகுமோனையும்: வரும்" என்பர்.

அவை அடிதோறும் இரண்டாமெழுத்துமுதல் முதற்சீர் முழுதும் எழுத்தொன்றி வருவதுதலையாகெதுகை, இரண்டாமெழுத்து ஒன்றே ஒன்றிவருவது இடையாகெதுகை, முதற்சீரின் கடையெழுத்தொன்றிவரின் கடையாகெதுகையும்: முதற்சீர்முழுதும் அடிதோறும் எழுத்துகளொன்றி வரின் தலையாகுமோனை, முதலெழுத்தொன்றேவரின் இடையாகுமோனையும் ஆகிவரும்.

(உ-ம்) சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்— மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது.

[அ-போ] இதில் முதலெதுகையிலும், பின்னெதுகையிலும் முதலெழுத்தொழிய முதற்சீர்முழுமையும்எழுத்தொன்றிவந்தமையால் தலையாகெதுகை.(இதுஇரண்டுசீரிலும், சிலசீரிலும் முழுமையும் எழுத்தொன்றி வருதலுமுண்டு. இத்தலையாகெதுகையை திரிபு, தலையாகுமோனையை யமகம் என்பாருமுளர்)

(ஷை) அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

[அ-போ] இதில் இரண்டாமெழுத்தொன்றே ஒன்றி வந்தமையால் இடையாகெதுகை.

(ஷை) தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

[அ-போ] இதில் முதற்சீர்களின்இறுதியில்-கா-தா-இவைகள் இனவெழுத்தாவாகிலும், நெடிலாவாகிலும் ஒன்றிவந்ததனால் கடையாகெதுகை. (மோனையுமிவ்வாறேகாண்க)

165. மோனைவிகற்பத்தில் வரும் அனுவெழுத்துகள் எவை?

அ, ஆ, ஐ, ஔ வும்: இ, ஈ, எ. ஏ, ஐ யும், உ, ஊ, ஒ, ஓ வும்; இவ்வாறே உயிர்மெய்களும்; ஞ, ந உம்; ம,

வ் உம், தம்முள் அறுவெழுத்தாய் பாக்களிலும், பாவினங்களிலும் வருதல்காண்க.

166. இவ்வேறுபட்ட மோனைமுதலாகிய தொடைகளும், தொடைவிகற்பங்களும் பாவினத்துள்ளும் பயின்று வருமோ?

பாவினங்களிற் பெரும்பான்மையும் தலையாகுமோனை, இடையாகுமோனை; தலையாகெதுகை, இடையாகெதுகை: வழிமோனை, வழியெதுகை, வழிமுரண் ஆகிய இவைகளே வரப்பெறும். (மற்றைமோனை முதலியவற்றிற்குள்ள வேறுவிகற்பங்கள் சிறப்பிலலன.)

167. வழிமோனை, வழியெதுகை, வழிமுரண், எவ்வாறுவரும்?

செய்யுளின் அடிகளில்சீர்கடோறும்வரும் (இவ்வாறு-வருதலேசிறப்பு)

(உ-ம்)

கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு கூடி நீடுமோடை நெற்றி, வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத நாத வென்று நின்று தாழ,—

(க-க-து)

மண்டலம் பண்டுண்ட திண்டோர் வரகுணன் றெண்டியின்வாய்க், கண்டலந் தண்டுறைக் கண்டதொன் றுண்டு கனமகர [திங்கள் குண்டலங் கெண்டை யிரண்டொடு தொண்டையுங் கொணடோர் மண்டலம் வண்டலம் பக்கொண்ட முழ வருகின்றதே.

(ஷ) (அ-சி-வி)

செய்யவாய்ப் பசும்பொ னோலைச் சீறடிப் பரவை யல்குலையநுண் மருங்கு லேவ வடிக்கொண்ட குவவுக் கொங்கை வெய்யவாய்த் தண்ணெ னீலம் விரிந்தென விலங்கி நீண்ட மையவா மழைக்கட் கூந்தன் மகளிரை வருக வென்றான்.

[அ-போ] இவற்றில் வழிமோனை, வழியெதுகை, வழிமுரண் வந்தமைகாண்க.

168 பாக்களில் கூன்வருவதுண்டோ

வெண்பா,கலிப்பா, ஆசிரியப்பா இவைகளின் முதலிலும் வஞ்சிப்பாவின் முதலிலும், இடையிலும், கடையிலும் ஒருசீர் கூனாகவரும். இதைத்தனிச் சொல்லென்றுஞ் சொல்லலாம்.( வஞ்சிப்பாவின் இடையிலும்,கடையிலும் "அசை" கூனாய்வருதல்சிறப்பு)

"உதுக்காண், சுரந்தானா வண்கைச் சுவானமாப் பூதன்
பரந்தானாப் பல்புகழைப் பாடி— யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்கி
மின்னு மணிதேர் மழை."

"அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே,
யானே, தோடா ரெல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையுட்படர்கூர்ந் திசினே,"—

[அ-போ] இவ்வெண்பாவிலும், ஆசிரியப்பாவிலும் "உதுக்காண்" எனவும் "அவரே, யானே" எனவும் அடிமுதற்கூன்வந்தன. (மற்றவைகளிலுமிவ்வாறேவரும்.)

"மாவழுங்கலின் மயக்குற்றன, 'வழி',—
"கலங்கழாலித், 'துறை' கலக்குற்றன,"—

[அ-போ] இவ்வஞ்சியடிகளில் "வழி" என அடி இறுதியிலும், "துறை" என அடியின் இடையிலும், அசைகள் கூனாய்வந்தன.

169 அடிமுதலிய வரையறை யின்றி வருஞ் செய்யுளுமுண்டோ?

* நூற்பா, †பாட்டுரை, ‡மந்திரம், §முதுசொல், ¶அங்கதம், ()வாழ்த்து, முதலியன சீர் அடி, தொடை முதலிய வரை யறை யின்றி வருஞ்செய்யுள்களாம்.

170 எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்

---

* நூற்பா = சூத்திரம். †பாட்டுரை = அடிமடக்காய் வசனிக்கும் வசனம். ‡மந்திரம் = தேவதைகளுக்குரிய மூலமந்திரங்கள். §முதுசொல் = பழமொழி. ¶அங்கதம் = வசைச்சொல். ()வாழ்த்து = வாழ்த்துதல் ஆசிவசனம்.

து வகைப்பட்ட இலக்கணங்களை யுணர்ந்த புலவோர்கள் செய்யுளியற்றுவது எவ்வாறு?

செய்யுளில் எழுத்துக்குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றம், யாப்புக்குற்றம், அலங்காரக்குற்றமும்; ஐவகை ஆனந்தமும்; வராமற் பாடவேண்டும்.

171. எழுத்து முதலிய ஐவகைக்குற்றம் எவை?

எழுத்துக்குற்றம் எழுத்திலக்கணத்திற் சொல்லியமுறையில் மாறுபட்டுவருவது. மற்றைக்குற்றங்களும் இவ்வாறே அவ்வவ் விலக்கணங்களில் விதித்தமுறைக்கு மாறுபட்டுவருதல்.

172. ஐவகை ஆனந்தமாவன எவை?

எழுத்து நிலை பிறழ்ந்த எழுத்தானந்தம், சொன்னிலை பிறழ்ந்த சொல்லானந்தம், பொருணிலை பிறழ்ந்த பொருளானந்தம், யாப்புநிலை பிறழ்ந்த யாப்பானந்தம், அணிநிலை பிறழ்ந்த அணியானந்தம் என ஐந்துமாம்.

(உ-ம்) ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாந்
தோழி துணையாத் துயர்தீரும்—வாழி
நறுமாலை தாராய் "திரையவோஓ" வென்னும்
செறுமாலை சென்றடைந்த போது.

[அ-போ] இதில் திரையன் என்னுந்தலைமகன் இயற் பெயரில், "திரையவோஓ,, என அளபெடைவந்தமையால், எழுத்தானந்தம். (நாராயணனை நராயணன் என்பதும், மாறனை மரன் என்பதும் முதலிய இயற் பெயர்த் திரிபுகளுங் காண்க)

(ஷ) என்னிற் பொலிந்த திவண்முக மென்றெண்ணித்
தன்னிற் குறைபடுப்பான் றண்மதியம்—மின்னி
விரிந்திலங்கு வெண்குடைச் செங்கோல் "விசயன்
எரிந்"திலங்கு வேலி னெழும்.

[அ-போ] இதில் "விசயன் எரிந்து" எனத்தலைமகனதியற் பெயர் மேல்நந்தச்சொல் புணர்த்தினமையால, சொல்லானந்தம். (இவ்வாறு இயற்பெயரைச்சார்ந்து அமங்கலமாய் வருவனவெல்லாங் காண்க.)

(ஷ) "வலிக்குமா மாண்டார் மனம்".

[அ-போ] இதில் "மாண்டார்" மடிந்தார் என நந்தப்பொருளானமையால், பொருளானந்தம். ("வெ'குவிதவைபோகா,,—இ

தில வெகு விதவை போகா எனப் பொருளாதலும்; "முத்தார மணிமார்பா" இதில்மூன்று பெண்டிரைசதோய் பவனே, எனப்பொருளாதலும்; "வீதிகடோறு நன்மாடஞ்சிறந்தன" இதில் வீதிகள்தோறும் நல் மாடு அஞ்சு இறந்தன, எனப் பொருளாதலும்; காண்க.)

(ஷை) "மனுக்கு முதல்வனிதி வாழ்வான் சிலைரா
மனுகருநிகர் யாரை வகுப்பாம்",—

[அ-போ] இதில் "ராமனுக்கு" எனவேண்டிய தலைமகனியற்பெயரை-ரா-மனுக்கு, எனவகையுளியாகப் பிரித்து அடிபடுத்தமையால் யாப்பானந்தம். (மங்கலம் முதலாகிய முதன்மொழி இலக்கணம்பததில் வழூவிவருதலுங்காணக)

(ஷை) இந்திரனே போலு மிளஞ்சாதனன் சாத்தற்கு
மநதிரமே போன்றிலங்கு மல்லாகம்,

[அ-போ] இதில "சாத்தன" என்னுங் கீழ்மகனை; அரசனையுவமித்தாற்போல உவமித்தமையால் இறப்பவுயர்நத ஆனந்த உவமை.

(ஷை) வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்
எள்ளி யிரிந்தாற்போ லெவ்வழியும்—வள்ளற்கு
மாலாக் கடலன்ன மண்பரந்த வாட்டானை
மேலாரு மேலார் விரைந்து.

[அ-போ] இதில் புலியோடு உவமிக்கத்தக்கவீரனாகிய தலைமகனோடு நாயை உவமித்தமையால், இறப்பவிழிந்த ஆனந்தஉவமை. இவைபோல் வன பிறவுங்கொள்க)

173. எல்லாக்குற்றமும் தீர்ந்தசெய்யுள் எவை?

திருக்குறள் முதலிய அறநூல்களும், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களும்,(சான்றோரால் செய்யப்பட்ட) பலவகைப்பிரபந்தங்களும், பிறவுமாம்.

(உ-ம்)"பூங்கொன்றைக் கண்ணியான்பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்."

"நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் — நீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று."

(அ-பா) தாமரை புரையுங் காமர் சேவடி
பவளத் தன்ன மேனித் திகழொளி
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த செஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப ——
வேம வைகலெய் தின்று லுலகே.

[அ-போ] இவைகளில் குற்றமென்பவைகளுள் ஒன்று மின்றி, சொற் சுவை, பொருட்சுவை, முதலிய எல்லாச்சிறப்பும் அமைந்திருக்கின்றமைகாண்க.

174. முதன்மொழியிலக்கணம் யாது?

மங்கலப்பொருத்தம், சொற்பொருத்தம், எழுத்துப்பொருத்தம், தானப்பொருத்தம், பாற்பொருத்தம், உணாப்பொருத்தம், வருணப் பொருத்தம், நாட் பொருத்தம், கதிப்பொருத்தம், கணப்பொருத்தம், ஆகியபதசாங்கத்தையுஞ்சொல்லுவதாம். (இவ்விலக்கணம்பத்தும் குளகச்செய்யுளின் முதற்பாட்டின்முதற்சீரிலும், முத்தகச்செய்யுளின் முதற்சீரிலும், அமைந்திருக்கவேண்டும். இவைகளைப்பாட்டியல்களிற்காண்க)[குளகச்செய்யுளாவது பலபாட்டாய் ஒருபொருள்குறித்து வருவது:— அது பெருங்காப்பியம், முதலாகிய பிரபந்தங்கள். (தொகைநிலைச் செய்யுளும், தொடர்நிலைச்செய்யுளும் இவற்றுள் அடங்கும்.) முத்தகச்செய்யுளாவது - ஒரு பொருளைக்குறித்து ஒருபாட்டு தனியேமுடிவது:— அது தனிச்செய்யுள்களைக்காண்க]

(☞) இந்நூலுட் காட்டாதொழிந்த விதிகளையும், உதாரணங்களையும் பெருநூல்களிற்காண்க.

# இலக்கணமுடிபியல்

175. இலக்கண. முடிபாவதுஎன்னே?

முடிந்திருக்கும் செய்யுள்களில அசை, சீர, தளை, அடி, தொடை, ஓசை, பா, இனம், முடிவு, என்னும இவைகளை அவற்றிற் குரிய இலக்கணப்படிவகுத்துக் காட்டி, அவைகளெல்லா மமைந்திருப்ப தறகாகிய முடிபிலக்கணவாய்பாடு கூறுவதாம். இதனை அன்னுவயவிலக்கண மெனினும் அமையும்.

176. "அகரமுதல" - என்னுஞ்செய்யுளுக்கு - இலக்கண முடிபு உதாரணவாய்பாடு கூறுவ தெவ்வாறு?

(1) [1]அகர [2]முதல [3]வெழுத்தெல்லா [4]மாதி
(2) [5]பகவன் [6]முதற்றே [7]யுலகு.

[1]புளிமா-இயற்சீர் வெண்டளை,[2]புளிமா-இயற்சீர் வெண்டளை, [3]புளிமாங்காய்-வெண்சீரவெண்டளை, [4]தேமா-இயற்சீர்வெண்டளை,[5]புளிமா-இயற்சீரவெண்டளை, [6] புளிமா - இயற்சீர்வெண்டளை: [7] பிறப்பு. ஆதலால், "வெண்சீர்வெண்டளையும், இயற்சீர வெண்டளையும் விரவிவருவது ஒழுகிசைசசெப்பலோசை" என்னும் விதிப்படிஒழுகிசைச செபபலோசையும், "பிறப்பு" என்னும்வாய்பாட்டுமுடிபும் ஆயின; (1) அகர-(2) பகவன்என இரண்டடிக்கும் எதுகை ஒருதன்மையாதலால் - எதுகைத் தொடை ஒருவிகற்பம்;இரண்டடியால்வந்தமையாலும்,இரு பாவாதலாலும குறடபா:இவ்விலக்கண

மெல்லாம் அமைந்திருப்பது வெண்பா வாதலின் இது வெண்பா. ஆகவே, இச்செய்யுளின் உதாரணவாய்பாடு ஒழுகிசைச் செப்பலோசையும், ஒருவிகற்ப எதுகைத்தொடையும் பெற்று; பிறப்புஎன்னும் வாய்பாட்டான் முடிந்த குறள் வெண்பா. (இதுபோல்வதில் தொடை இருதன்மையாய் வரின் இருவிகற்பத் தொடையென்று சொல்லிக்கொள்க.)

177. "நீரிற் குமிழி"என்னுஞ் செய்யுளுக்கு உதாரணவாய்பாடு கூறுக.

(1) [1]நீரிற் [2]குமிழி [3]யிளமை [4]நிறைசெல்வம்
(2) [5]நீரிற் [6]சுருட்டு [7]நெடுந்திரைகள் - நீரில்,
(3) [1]எழுத்தாகும் [2]யாக்கை [3]நமரங்கா [4]ளென்னே
(4) [5]வழுத்தாத [6]தெம்பிரான் [7]மன்று.

(1) 1 தேமா - இயற்சீர்வெண்டளை, 2 புளிமா - இயற்சீர் வெண்டளை, 3 புளிமா - இயற்சீர்வெண்டளை, 4 புளிமாங்காய் - வெண்சீர்வெண்டளை, (2) 5 தேமா - இயற்சீர்வெண்டளை, ~~6 புளிமா - இயற்சீர் வெண்டளை~~, 7 கருவிளங்காய் - வெண்சீர்வெண்டளை, தனிச்சொல் - தேமா - இயற்சீர்வெண்டளை;

(3) 1 புளிமாங்காய் - வெண்சீர்வெண்டளை, 2 தேமா - இயற்சீர் வெண்டளை, 3 புளிமாங்காய் - வெண்சீர்வெண்டளை, 4 தேமா - இயற்சீர்வெண்டளை, (4) 5 புளிமாங்காய் - வெண்சீர் வெண்டளை, 6 கூவிளம் - இயற்சீர்வெண்டளை, 7 நேர் நேர்=காசு. ஆதலால், இதில் இருதளையும் விரவிவந்தமையால் ஒழுகிசைச் செப்பலோசையும், (4) அடிஇறுதியில் 7 நேர் நேர் வந்தமையால் காசுஎன்னும் வாய்பாட்டு முடிபும் ஆயின (1), (2) அடிகளில் எதுகைத்தொடை ஒருவிகற்பமும், (3),(4) அடிகளில் வேறு தொடை வேறு விகற்பமும் வந்தமையால் இருவிகற்ப வெதுகைத்தொடை. இரண்டுகுறளுக்குமிடையே முதலிரண்டடிக்கேற்ற எதுகைத்தொடைபெற்று தனிச்சீர்வந்தமையால் அது தனிச்சொல். முதற்குறளின் இறுதி 7 சீரில் "நெடும்" என்னும் நிரையசைக்கும் தனிச்சொல்லுக்கு மிடையில் "திரைகள்" என்னும் இரண்டசையும் ஆசாய்வந்தமையால் அது ஆசிடை. இவ்விலக்கணங்களெல்லா மமைந்தது வெண்பாவாதலானும், இரண்டுகுறட்பா இணைந்து இடையே முதற்றொடைக் கேற்ற தனிச்சொற்பெற்று வந்தமையானும்

நேரிசைவெண்பா. ஆகவே, இச்செய்யுளின் உதாரணவாய்பாடு ☞ ஒழுகிசைச் செப்பலோசையும், இருவிகற்ப எதுகைத்தொடையும் பெற்று, காசென்னும் வாய்பாட்டான் முடிந்து ஈராசிடையிட்ட இருகுறணேரிசை வெண்பா. (இதுபோலும் செய்யுளில் ஓரசைவரின் ஓராசிடையென்றும், தொடைஒரு தன்மையாய்வரின் ஒருவிகற்பத்தொடையென்றுஞ் சொல்லிக் கொள்க. ஆசிடையின்றி வருதலுமுண்டு.)

178. “துகடீர்பெருஞ்செல்வம்” என்னுஞ் செய்யுளுக் குதாரணவாய்பாடுகூறுக.

(1) [1]துகடீர் [2]பெருஞ்செல்வந் [3]தோன்றியக்காற் [4]றொட்டுப்

(2) [5]பகடு [6]நடந்தகூழ் [7]பல்லாரோ [8]டுண்க

(3) [9]வகடுற [10]யார்மாட்டும் [11]நில்லாது [12]செல்வஞ்

(4) [13]சகடக்கால் [14]போல [15]வரும்.

(1) 1. இயற்சீர்வெண்டளை, 2. வெண்சீர்வெண்டளை, 3. வெண்சீர்வெண்டளை, 4. இயற்சீர்வெண்டளை, 5. இயற்சீர்வெண்டளை, 6. இயற்சீர்வெண்டளை, 7. வெண்சீர்வெண்டளை, 8. இயற்சீர்வெண்டளை, 9. இயற்சீர்வெண்டளை, 10. வெண்சீர்வெண்டளை, 11. வெண்சீர்வெண்டளை, 12. இயற்சீர்வெண்டளை 13. வெண்சீர்வெண்டளை, 14. இயற்சீர்வெண்டளை, 15 நிரை=மலர்.

ஆதலால், இருதளையும் விரவி ஒழுகிசைச் செப்பலோசையும், நிரையசைவந்து - மலரென்னும் வாய்பாட்டுமுடிபும் ஆயின. எதுகைத்தொடை நான்கடிக்கும் ஒருதன்மையாய் வந்தமையால், ஒருவிகற்பவெதுகைத்தொடை. நான்கடியாய்த் தனிச்சொலின்றி வந்தமையாலும், இவ்விலக்கணங்க ளெல்லாமுடையது வெண்பாவாதலாலும், இது இன்னிசைவெண்பா. ஆகவே, இச்செயுளின் இலக்கணமுடிபு ☞ ஒழுகிசைச் செப்பலோசையும், ஒருவிகற்ப எதுகைத்தொடையும் பெற்று, தனிச்சொலின்றி, மலரென்னும் வாய்பாட்டான் முடிந்த இன்னிசை வெண்பா. (இதில்தொடை பலவிகற்பமாய்வரின் பலவிகற்பத்தொடைபெற்று எனவும், முதலடியில் தனிச்சொல் வரின் முதலடியிற் றனிச்சொற்பெற்று,...... என்வும், இரண்டா மடியிற் றனிச்சொல் வரின் இரண்டாமடியிற் றனிச் சொற் பெற்று,......எனவும், மூன்றுமடியில் தனிச் சொல் வரின் மூன்றுமடியிற் றனிச் சொற் பெற்று,......எனவும், இரண்டடி

யில் தனிச் சொல் வரின் இரண்டடியிற் றனிச் சொற் பெற்று, ......எனவும், மூன்றடியிலும் வரில் அவ்வாறேகூறுக)

179. "சுரையாழ" என்னுஞ் செய்யுளுக்கு இலக்கண முடிபு கூறுக.

(1) 1சுரையாழ 2வம்மி 3மிதப்ப - வரையனைய
(2) 1யானைக்கு 2நீத்தும் 3முயற்கு 4நிலையுமாங்
(3) 1கானக 2நாடன் 3சுனை.

(1) 1. வெண்சீர்வெண்டளை, 2. இயற்சீர்வெண்டளை, 3. இயற்சீர்வெண்டளை, தனிச்சொல் - வெண்சீர்வெண்டளை;

(2) 1. வெண்சீர்வெண்டளை, 2. இயற்சீர்வெண்டளை, 3 இயற்சீர் வெண்டளை, 4. இயற்சீர்வெண்டளை; (3) 1. இயற்சீர் வெண்டளை, 2. இயற்சீர் வெண்டளை, 3. மலர். ஆதலால், ஒழுகிசைச் செப்பலோசையும், மலரென்னும் வாய்பாட்டு முடிபும் ஆயின. எதுகைத்தொடை அடிதோறும் வேறுதன்மையாய் வந்தமையால் பலவிகற்ப எதுகைத்தொடை. இன்னிசை வெண்பாவைப்போல முதலடியில் தனிச்சொல்லும், பலவிகற்பத்தொடையும் பெற்று; வெண்பா இலக்கணமமைந்து, மூன்றடியால் வந்தமையால், இன்னிசைச்சிந்தியல் வெண்பா. ஆகவே, இச்செய்யுளின் இலக்கணமுடிபு தாரணவாய்பாடு ஒழுகிசைச் செப்பலோசையும், பலவிகற்ப எதுகைத் தொடையும், முதலடியிற் றனிச்சொல்லும் பெற்று; மலர் என்னும் வாய்பாட்டான் முடிந்த இன்னிசைச் சிந்தியல்வெண்பா. (இதில் தனிச்சொல்லின்றி ஒருவிகற்பத்தொடையால் வரின் அவ்வாறு சொல்லிக்கொள்க.)

---

180. "உம்பர்க்கதிபன்" என்னுஞ்செய்யுளுக்கு இலக்கணமுடிபு கூறுக.

(1) 1உம்பர்க் 2கதிப 3னுயர்மறைத் 4தேசிகன்
(2) 1கும்பற் 2கினிய 3குரவ———
(3) 1னெம்பிரான் 2முருக 3னெம்மையாள் 4வோனே.

(1) 1. தேமா- இயற்சீர்வெண்டளை, 2. புளிமா - இயற்சீர்வெண்டளை, 3 கருவிளம் - இயற்சீர்வெண்டளை, 4. கூவிளம்-இயற்சீர்வெண்டளை; (2) 1. தேமா-இயற்சீர்வெண்டளை; 2. புளிமா-இயற்சீர்வெண்டளை, 3. புளிமா-நேரொன்றாசிரியத்தளை, (3) 1. கூவிளம்-நிரையொன்றாசிரியத்தளை. 2 புளிமா - நேரொன்

றாசிரியத்தளை, 3. தேமாங்காய்-வெண்சீர்வெண்டளை, 4. தேமா, ஏ-முடிபு. என ஆசிரியப்பாவிற் குரிய ஆசிரியத்தளையும், வெண்பாவிற்குரிய வெண்டளையும் விரவிவந்தமையால் ஒழுகிசையகவலோசையும், ஏகாரமுடிபும்ஆயின. எல்லா அடியிலும் எதுகை ஒருதன்மையாயி னமையின், அடியெதுகைத்தொடையும், அடிதோறும் முதற்சீரினும், மூன்றாஞ்சீரினும் மோனை வந்தமையால் பொழிப்புமோனையும் ஆயின. ஈற்றயலடிமுச்சீரான் வந்தமையானும், இவ்விலக்கணமுடையது ஆசிரியப்பாவாதலானும், இதுநேரிசையாசிரியப்பா. ஆகவே, இச்செய்யுளின் இலக்கணமுடி புதாரணவாய்பாடு ☞ ஒழுகிசை யகவலோசையும், அடியெதுகைத் தொடையும், பொழிப்புமோனையும் பெற்று; மூன்றடியாய், ஏகாரத்தால் முடிந்த நேரிசையாசிரியப்பா.

181. "கடம்பணி" என்னுஞ் செய்யுளுக்கு இலக்கண முடிபு கூறுக.

| | | | |
|---|---|---|---|
| நி. ஒ. ஆ. த. | இ. சீ. வெ. த. | இ. சீ. வெ. த. | நே. ஒ. ஆ. த |
| கடம்பணி | தொடையல் | மிடைந்த | தடந்தோள், |
| இ. சீ. வெ. த. | நே. ஒ. ஆ. த. | நி. ஒ. ஆ. த. | நே. ஒ. ஆ. த. |
| வன்பிற | லெலூக | மேந்திய | வலவன், |
| கலி. த. | நே. ஒ. ஆ. த. | நே. ஒ. ஆ. த. | நே. ஒ. ஆ. த. |
| கொன்றையஞ் சடிலற் | | காசான் | மன்ற, |
| இ. சீ. வெ. த. | இ. சீ. வெ. த. | நி. ஒ. ஆ. த. | நே. ஒ. ஆ. த. |
| விட்டின் | பிறுக்கொரு | வித்தென | மறைகள், |
| இ. சீ. வெ. த. | இ. சீ. வெ. த. | நி. ஒ. ஆ. த. | நே. ஒ. ஆ. த. |
| காட்டுமெஞ் | ஞானக் | கதிர்மணி | யவன்றாள், |
| இ. சீ. வெ. த. | நே. ஒ. ஆ. த. | இ. சீ. வெ. த. | நே. ஒ. ஆ. த. |
| பற்றின | ரின்பம் | பற்றின | ரல்லோர், |
| இ. சீ. வெ. த. | நே. ஒ. ஆ. த. | நே. ஒ. ஆ. த. | முடிபு. |
| பற்றினர் | பையுட் | பற்றி | தென்னே. |

இதில் ஆசிரியத்தளையும், வெண்டளையும், கலித்தளையும் விரவினமையின், ஒழுகிசை யகவலோசையும்; "என்னே" என்னும் முடிபுமாயின. இரண்டடிக்கோ ரெதுகை வந்தமையால், இரண்டடி யெதுகையும்; அடிதோறும் முதற்சீரும் மூன்றாஞ்சீரும் மோனைபெற்றமையால் பொழிப்புமோனையும் ஆயின. எல்லா அடிகளும் அளவடியாய் அளவொத்து வந்தமையாலும்,

இவ்விலக்கணமுடையது ஆசிரியப்பாவாதலாலும்; இது நிலைமண்டில ஆசிரியப்பா. ஆகவே, இதன் உதாரணவாய்பாடு ஒழுகிசைச்செப்பலோசையும், இரண்டடியெதுகைத்தொடையும், பொழிப்புமோனையும்பெற்று, என்னே என்னுஞ்சொல்லான்முடிந்த பலவடி நிலமண்டில ஆசிரியப்பா.

---

182. "வாணெடுங்கண் பனிகூர" என்னுஞ் செய்யுளுக்கு உதாரணவாய் பாடுகூறுக.

தரவு { வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றுய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணெடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ,—

இச்செய்யுளின் குறையும் பாவியல் நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா உதாரணத்திற்காண்க.

இதில் கலித்தளையும், வெண்டளையும், ஆசிரியத்தளையும் விரவிவந்ததனால் பிரிந்திசைத்துள்ளலோசை. அடியெதுகைத்தொடையும், பொழிப்புமோனைத்தொடையும் வந்தன. மூன்றடித்தரவு ஒன்றும், இரண்டடித்தாழிசை மூன்றும், தனிச்சொல்லும், நேரிசை ஆசிரியச் சுரிதகமும், ஆகிய நான்குறுப்புப் பெற்று, வந்தமையாலும்; இவ்விலக்கணங்களை யுடையது கலிப்பா ஆதலாலும், இது நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா. ஆகவே, இச்செய்யுளுக் குதாரணவாய்பாடு பிரிந்திசைத் துள்ளலோசையும், அடியெதுகைத்தொடையும், பொழிப்புமோனையும்பெற்றுத்; தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்கு உறுப்பான் முடிந்தநேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா.

183. "அங்காரணனோடு" என்னுஞ் செய்யுளுக்கு இலக்கணமுடிபு கூறுக.

அங்கா ரணனோ டமர்மூற் றியமுனியைப்
பொன்னா டருளும் புலவர்கோ னேயிரப்ப
வெங்காரு மென்பு விருத்திரனுக் காவுதவித்
தன்னா ருயிர்விட்ட தன்மைதனைக் கேட்டிலையோ.

இதில் பலதளையும் விரவிவந்தமையால் பிரிந்திசைத்துள்ளலோசையும், எதுகையில் இனம்விரவிவந்தமையால் மெல்லின எதுகைத்தொடையும், பொழிப்புமோனையும் ஆயின. நான்கடியானாகிய ஒருதரவு! தனிச்சொல் முதலியன இன்றி

வந்தமையானும், இவ்விலக்கணத்தது கொச்சகக்கலிப்பாவாத லானும், இது தரவுக்கொச்சகக்கலிப்பா. ஆகவே, இதன் உதா ரணவாய்பாடு ☞ பிரிந்திசைத்துள்ளலோசையும், இனவெ துகைத்தொடையும் பெற்றுவந்த நான்கடித் தரவுக் கொச்ச கக்கலிப்பா.

184. "கொங்கைமாரத" என்னுஞ் செய்யுளுக்கு இலக்கண முடிபு கூறுக.

கொங்கை மாரத கும்பங் கொடியிடை
கோல மாமயிற் சாயல் கனிமொழி
மங்கை மாரத னுச்சரத் தான்மிக
வருந்தி னளுன் மயல்கொடு சூழ்ந்திடு
நங்கை மாரத னுக்கென்ன செய்குவார்
நாத னேயணைந் தாளருட் பன்னிரு
செங்கை மாரத மாமயின் மேல்வரு
சேந்த னேகுஞ் சரிமகிழ் காந்தனே.

இதில் ஆசிரியத்தளையும், வெண்டளையும் விரவிவந்தமை யால் பிரிந்திசைத்துள்ளலோசை. அடிதோறும் இரண்டுசீர் முற்றும் எதுகை வந்தமையால் இருசீர்த் தலையாகெதுகை. (அல்லது-திரிபு.) மாச்சீர்முதலாகி, நாற்சீர் அளவடியாய், முதல்நேரசை வந்தமையால், ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய் யும் பதினொரெழுத்தாய், இரண்டுஅளவடி ஓரடியாய், அப்ப டிப்பட்ட நான்கடி அளவொத்து வந்தமையாலும், கலிப்பா ஆதலாலும், இது நேரசைக் கட்டளைக்கலிப்பா. ஆகவே, இத னிலக்கண முடிபுதாரணவாய்பாடு ☞ பிரிந்திசைத்துள்ள லோசையும், தலையாகெதுகையும் பெற்றுவந்த நேரசைக் கட் டளைக்கலிப்பா.

---

185. "பூந்தாமரை" என்னுஞ் செய்யுளுக் கிலக்கண முடிபு கூறுக.

| 1-வது. | 2-வது. | 1-வது. | 2-வது. |
|---|---|---|---|
| பூந்தாமரைப் | போதலமரத் | ஒன்று. வ. த. | ஒன்று. வ. த. |
| செம்புனலிடை | மீன்றிரிதரும் | ஷை | ஒன்றி. வ. த. |
| வளவயலிடைக் | களவயின்மகிழ் | ஒன்றி. வ-த. | ஷை |
| வினைக்கம்பலை | மனைச்சிலம்பவும் | ஷை | ஷை |

| | |
|---|---|
| மனைச்சிலம்பிய மணமுரசொலி | ஷை ஷை |
| வயற்கம்பலை கயலார்ப்பவும், | ஷை ஒன்று. வ. த. |
| நாளும், | தனிச்சொல். |

மகிழு மகிழ்தூங் கூரன் ——
புகழ்த லானாப் பெருவண் மையனே. } சுரிதகம்.

இதில் ஒன்றிய வஞ்சித்தளையும், ஒன்றாத வஞ்சித்தளையும் விரவினமையின் அகவற் றூங்கலோசையும், இரண்டிரண்டு சீரிலும் எதுகை யொன்றிவந்தமையால், வழியெதுகையும் ஆயின. இருசீரான் வந்தமையின் குறளடி. இது மூன்றடியினுங் குறையாது பலவடியும், தனிச்சொல்லும், நேரிசை யாசிரியச் சுரிதகமும் பெற்றுவந்தமையால் வஞ்சிப்பா. ஆகவே, இதனிலக்கணமுடிபு ☞ அகவற்றூங்கலோசையும், வழியெதுகையும், தனிச்சொல்லும்பெற்று; நேரிசையாசிரியச் சுரிதகத்தான்முடிந்த குறளடிவஞ்சிப்பா.

186. "கொடிவாலன" என்னுஞ் செய்யுளுக்கு இலக்கணமுடிபுகூறுக.

| | | |
|---|---|---|
| ஒன்றி. வ. த. | ஒன்றி. வ. த. | ஒன்றி. வ. த. |
| கொடிவாலன | குருநிறத்தன | குறுந்தாளன |
| ஒன்றி. வ. த. | ஒன்று. வ. த. | ஒன்றி. வ. த. |
| வடிவாளெயிற் | றழலுளையன | வள்ளுகிரன |
| க. த. | க. த. | க. த. |
| பணையெருத்தி | னிணையரிமா | னணையேறித் |
| நி. ஒ. ஆ. த. | க. த. | க. த. |
| துணையிலாத் | துறவுநெறிக் | கிறைவனாகி |
| க. த. | இ. சீ. வெ. த. | க. த. |
| யெயினடுவ | ணினிதிருந் | தெல்லோர்க்கும் |
| ஒன்று. வ. த. | வெ. சீ. வெ. த. | நி. ஒ. ஆ. த. |
| பயில்படுவினை | பத்திமையிற் | செப்பினோன் |

தனிச்சொல் ☞ புணையெனத்

சுரிதகம். { திருவுறு திருந்தடி திசைதொழ
விரிவுறு நாற்கதி வீடுநனி யெளிதே.

இதில் வஞ்சித்தளையும், வெண்டளையும், ஆசிரியத்தளையும், கலித்தளையும் விரவினமையால் பிரிந்திசைத்தூங்கல். இரண்டடி யெதுகையும், சீர்கடோறும் மோனையும், எதுகையும் வந்தமையால் வழிமோனையும், வழியெதுகையும் ஆயின, மூச்சீ

ரான் வந்தமையாற் சிந்தடி· தனிச்சொல்லும், நேரிசையாசிரியச் சுரிதகமும் பெற்றுமுடிந்தமையால் வஞ்சிப்பா. ஆகவே, இதன் உதாரணவாய்பாடு ☞ பிரிந்திசைத்தூங்க லோசையும், இரண்டடி யெதுகையும், தனிச்சொல்லும் பெற்று, நேரிசையாசிரியச் சுரிதகத்தான்முடிந்த சிந்தடிவஞ்சிப்பா.

187. "தென்றலிடை போழ்ந்து" என்னுஞ் செய்யுளுக்கு இலக்கண வாய்பாடு கூறுக.

| | | | |
|---|---|---|---|
| இ. சீ. வெ. த. | வெ. சீ. வெ. த. | இ. சீ. வெ. த. | வெ. சீ. வெ. த. |
| தென்ற | லிடைபோழ்ந்து | தேனார் | நறுமுல்லை |
| இ. சீ. வெ. த. | வெ. சீ. வெ. த. | இ. சீ. வெ. த. | வெ. சீ. வெ. த. |
| முன்றின் | முகைவிரியு | முத்தநீர்த் | தண்கோனூர்க் |
| வெ. சீ. வெ. த. | வெ. சீ. வெ. த. | இ. சீ. வெ. த. | |
| குன்றமர்ந்த | கொல்லேற்று | னிற்புறங் | காப்ப, |

கூன் ☞ என்றுந்,

ஆசிரியப்பா. { தீரா நண்பிற் றேவர் ——
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே. }

இதில் முதல்மூன்றடியும் ஒழுகிசைச்செப்ப லோசையும், ஒருவிகற்ப எதுகைத்தொடையும், பெற்றுவந்த வெண்பா. பின்னிரண்டடியும் முதலில்கூன்பெற்ற நேரிசை யாசிரியப்பா. ஆகிய இரண்டும்புணர்ந்து, வெண்பாஅடியும், ஆசிரியஅடியும் சமனின்றி, வித்தியாசப்பட்டு, வியனிலையாய்; "ஏற்றான் நின்னைப் புறங்காப்ப செல்வமொடு மதிசிறந்து பொலிக" என்னும்புற நிலைவாழ்த்துப் பொருளுக்கிடனாகி வந்தமையால் புறநிலைவாழ்த்து மருட்பா. இதன் உதாரணவாய்பாடு ☞ மூன்றடிவெண்பாவும், இரண்டடியாசிரியப்பாவும் வியனிலையாய்ப் புணர்ந்து; "வழிபடு தெய்வ நிற்புறங்காப்பப் பழிதீர் செல்வமொடு பொலிமதிசிறந்தே" என்னும் பொருளுக்கிடனாய்வந்த புறநிலைவாழ்த்துமருட்பா.

☞ இவ்வாறே மற்றைக்காட்டாதொழிந்த பாக்களுக்கும், பாவினங்களுக்கும் அவ்வவற்றின் விதிகளிலும், அப்பியாச போதனிகளிலும் கூறியிருக்கின்ற விதிகளை ஒழுங்குபடுத்தி இலக்கணமுடி புதாரண வாய்பாடு கூறிக்கொள்க.

முற்றிற்று.